Free Circulation Germany-England
ஐப்பசி.Oct.2019

# வெற்றிமணி
Vettimaniy
ESTD 1950
Successful Publishing 25 Years in Europe
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A




# தன்னை அறிவாளியாகக் காட்ட மனிதன் என்னென்ன செய்கிறான்!

சேவியர்







U.K
செல்வராஜா
Selvaraja Gold House & Textiles

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
Germany
Page.11

Gopara Gnanam
RHEINISCHE STR 62
44137 DORTMUND
Tel: Mob:0171 330 6542
Tel:0231 53482206
Page.23

StaR-Impex
Kipper Str.03
44147 Dortmund/ Germany
Tel:0231 860 26 96
S.38



# நாம் வாழும் நாட்டையும் நேசிப்போம்

– மாதவி

யேர்மனியில் லூடின்சைட் Lüdenscheid நகரம் பல்வேறு விடயங்களில் மிகவும் பிரபலமாக விளங்குகின்றது.

மின்சார விளக்குகள் செய்வதற்கு மிகவும் பிரபலமான நகரம் இது. சமீபகாலங்களில் இங்கு காணப்படும் விளக்குகளின் நகரம். “City of Light" என்ற விளம்பர பதாதைகள் இதனைமிகவும் அழகாகச் சுட்டிக்காட்டுகின்றன. ERCO என்ற இங்கு உள்ள நிறுவனமே இந்த உற்பத்தியில் மிகவும் முக்கியமானது. இந்த நிறுவனம் உலகப்புகழ்பெற்ற கட்டிடங்களான துபாய் இல் உள்ள Burj al Arab hotel in Dubai றோம் நகரில் உள்ள Vatican Pinakothek in Rom பாரிசில் நகரில் the Grand Louvre e in Paris பேர்லின் நகரில் உள்ள the Brandenburg Gate in Berlin,Bilbao நகரில் உள்ள the Guggenheim-Museum போன்றவற்றிற்கு மின்சார விளக்குகள் பொருத்தி அவை மிக அழகாக காட்சியளிக்க வகைசெய்தன.

இந்த அழகான நகரில் காணப்படும் “Phänomenta”. என்று அழைக்கப்படும் விஞ்ஞான நூதனசாலை Northrhine Westphalia வடக்கு யேர்மன் மாநிலத்தில் முதல்தரமானது இது. உலகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து மக்கள் இங்கு வந்து பௌதீகம் சம்மந்தமான ஆராய்ச்சிகளை செய்ய இந்த இடம் மிகவும் உதவியாக உள்ளது. இங்கு கட்டப்பட்டிருக்கும் 78மீற்றர் உயரமான கோபுரத்தில் ஊசல் (pendulum )பொருத்தப்பட்டுள்ளது. 1851ம் ஆண்டு உலகம் சுற்றுகிறது என்பதை பிரான்ஸ் நாட்டு விஞ்ஞானி Léon Foucault என்பவருக்கு உணர்த்தியது எதுவோ. அதே அடிப்படையில்தான் இக் கோபுரம் அமையப்பெற்றுள்ளது. இன்று லூடின்சைட் நகரத்தின் அடையாளமாகக் காணப்படும் இந்தக்கோபுரத்தில் ஐரோப்பாவில் பெரிய பல வண்ணக் காட்சிக் கருவி (Europe's largest kaleidoscope) பொருத்தப் பட்டுள்ளது மிகவும் முக்கியமானதொன்றாகும்.

மேலும் இந்த அழகான நகரம். பல்வேறு நதிகள் நீர்த்தேக்கங்கள் மலைத் தொடர்களைக் கொண்டது. பல்வேறு மலைத் தொடர்களைக்கொண்டதினால் இந்நகரை. மலை களின் நகரம் (Bergstadt) என்றும் அழைப்பார்கள். ஆராய்ச்சிகளின் படி 1067 ஆண்டு கிராமமாக காட்சியளித்து, பின்னர் 1268 ம் ஆண்டு நகரமாக மாறியது என்றால் மிகையா காது.

வாகன உதிரிப்பாகங்கள் மின்சார விளக்குகள் இரும்பு பிளாஸ்டிக் போன்றவற்றை உற்பத்திசெய்யும் பல்வேறு சிறிய நடுத்தர தொழில் பேட்டைகள் கொண்ட நகரமாகத் திகழ்கின்றது. இந்த அழகான நகரில் காணப்படும் Kostal என்ற பெரிய நிறுவனம் வாகனங்களுக்கு தேவையான மின்சார உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்யும் நிறுவனமாக விளங்குகின்றது. இந்த நிறுவனத்தில் ஏறத்தாள 1500 பல்தரப்பட்ட வேலையாட்கள் உள்ளனர். இந்த நிறுவனமே முதலாவதாக மங்கலாக்கும் வாகனங்களின் முன்பக்க விளக்கைத்தயாரித்தது. (dimming headlight.) அத்துடன் வாகனங்களுக்குத்தேவையான மின் இணைப்பு பலகை (first patented switch panel) ஐரோப்பாவில் முதல் முதலாகத் தயாரித்த நிறுவனமாகும். இத்தகைய பிரபலமான நிறுவனத்தில் வெற்றிமணி ஆசிரியர் 33 வருடங்கள் வேலை செய்து அண்மையில் (1.02.2018) ஓய்வுபெற்றார்.

அவர் அங்கு வேலைசெய்யும் காலத்தில் வாகனங்களின் மின்சார உதிரிப்பாகங்களைக் கொண்டு பல சிற்பங்களையும் படைத்தார். அவற்றில் ஒன்று இன்று Kostal பிரதான நுழைவாசலில் கண்ணாடிப் பேழைக்குள் கம்பீரமாக இருக் கின்றது. இச்சிற்பம் 1997 முதல் அங்கு உண்டு.
முதல் முதலாக லூடின்சைட் நகரில் 1898 ஆண்டு Carl Berg தொழிற்சாலையில் போர்க்கால வானூர்தி (Zeppelin airship) தயாரிக்கப்பட்டது. அதுமட்டுமா!
அச்சுக்கலைக்கும் இந்தநகரம் பெயர் பெற்றது 2013 ஆண்டு பேர்லின் நகரில் நடைபெற்ற புத்தகக்கண்காட்சியில் Druck & Medien Awards 2013 என்ற விருது Seltmann Printart Gmbh Lüdenscheid க்கு கிடைத்தது. இந்த அச்சகத்தில் வெற்றி மணி சிவத்தமிழ் அச்சாகி வெளிவருகிறது.(1999 முதல்)



Kostal தொழில் அதிபருடன் 1996

ஆரம்பத்தில் ஒட்டுவேலைகளால் அமைக்கப்பட்டு அதனைப் படம் எடுத்து அச்சாக்கியது அந்தக்காலம். இன்று போல் அன்று வடிவமைப்பு கணனியின் கைகளில் இல்லை. அது கண்ணாவின் கையில் இருந்தது. (ஓவியருக்கான வெற்றிமணி ஆசிரியரின் பெயர்) அப்பொழுது அச்சகத்தின் அதிபர் Frank Seltmann மிகவும் அக்கறையுடன் எனது முயற்சிகளுக்கு கைகொடுத்தார். இன்று வரை எமக்கு பலக்கபலமாக இருந்து வருகின்றார். 2012 முதல் அவரது மகன் Arno seltmann ஸ்தாபனத்தின் அதிபராக உள்ளார். இந்த அச்சகம் 4 சந்ததிகளைக்கண்டது. 1852 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது என்றால் பாருங்களேன்.







யேர்மனியில் ஒரு தமிழ்ப்பத்திரிகை Lüdencheid நகரத்தில் இருந்து வெளிவந்து, அது முதல் வெள்ளிவிழாக்கண்ட பெருமையைப் பெறுகிறது. வெற்றிமணி சிவத்தமிழைத் தொடர்ந்து இந்த அச்சகத்தில் அகரம், அகரதீபம், தற்போது
தமிழ் ரைம்ஸ், என பல அங்கு அச்சாகி வெளிவர வெற்றி மணியும் காரணமானது என்பது உண்மை. தாய் நாட்டை மறவாது நாம் தமிழர்களாக இங்கு வாழவேண்டும். அதே நேரம் எமக்கு அடைக்கலம் தந்து எமது சந்ததியினர் சுதந்திரமாக கல்வி,கலை,வர்த்தகம், என பலவற்றிலும் உச்சம் தொட ஆதரவு தந்த இந்த நாட்டையும் மதிக்க வேண்டும். அதனால் வெற்றிமணி வெள்ளிவிழா மலரின் முன்அட்டையில் நகரத்தின் அடையாளமான “Phänomenta”. வை இடம்பெறவைத்து நன்றி உணர்வை வெளிப்படுத்தியது, வெற்றிமணி.







வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை 278


ஆரம்பம்:1950

ஸ்தாபகர்

அமரர் மு.க.சுப்பிரமணியம்

( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம் )

பிரதம ஆசிரியர்

“ஓவியக்கலைவேள்”

கலாநிதி

மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

*Chief Editor:*

**Dr.M.K.S.Sivakumaran B.F.A.**



Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com


**“வெற்றிமணிமொழி”**

தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்

சிவகுமாரன் சஞ்ஜீவன். B .Eng (Hons)

Sanje:07824 61 83 83

**Vettimaniy Ltd**

Company No: 8876276


# “நிறைவேற்று அதிகாரம்“ ஒழிப்பு: தோல்வியில் ரணிலின் முயற்சி




நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த இறுதிநேர முயற்சி தோல்வியில் முடிவடைந்திருக்கின்றது. கடந்த வியாழக்கிழமை அவசரமாக - விஷேட அமைச்சரவைக் கூட்டம் ஒன்றைக் கூட்டி, அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றை எடுத்து அதன் மூலமாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை மாற்றி அமைப்பது அவரது நோக்கமாக இருந்தது. இருந்தபோதிலும் சஜித் பிரேமதாச தரப்பினர் கொடுத்த கடுமையான அழுத்தத்தின் காரணமாக அவரது முயற்சி ஆரம்பத்திலேயே கைவிடப்பட்டது.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பான அறிவிப்பு புதன்கிழமை இரவு தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப் பட்டது. ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 16ஆம் தேதி நடைபெறும் எனவும் அதற்கான நியமனப் பத்திரங்கள் அக்டோபர் ஏழாம் தேதி பெற்றுக்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பு வெளியான

உடனடியாகவே அமைச்சரவையை கூட்டுவதற்கான விசேட நடவடிக்கை பிரதமர் மேற்கொண்டார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த கோரிக் கையைத் தொடர்ந்தே வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு விசேட அமைச்சரவைக் கூட்டம் அவசரமாக கூட்டப்பட்டது. இதற்கான அறிவித்தல் வியாழக்கிழமை காலையிலேயே அமைச்சர்களுக்கு அவசரமாக அனுப்பப் பட்டது. விசேட அமைச்சரவைக் கூட்டம் நடைபெறப்போ கின்றது என்றதும் உடனடியாகவே உஷார் அடைந்த சஜித் பிரேமதாஸ தரப்பினர் அந்த முயற்சியை முறியடிப்பதற் கான செயலில் இறங்கினார்கள்.

விசேட அமைச்சரவைக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னதாக ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள் அலரி மாளிகையில் பிரதமர் ரணிலை சந்தித்தார். அதன்போது குறிப்பிட்ட பிரேரணையை எதிர்க்க போவதாக சஜித்துக்கு ஆதரவாக செயற்படும் அமைச்சர்கள் உறுதியாகத் தெரிவித்திருந்தார்கள். இதனையடுத்து அமைச்சரவைக் கூட்டம் இடம்பெற்ற போது சஜித் ஆதரவாளர்கள் ரணிலின் திட்டத்தைக் கடுமையாக எதிர்த்ததால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பது என்பது இலகுவாக செய்து கொள்ளக் கூடிய ஒன்றல்ல. அது பல தடைகளைத் தாண்ட வேண்டும். முதலில் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். இரண்டாவது தடை பாராளு மன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் அது நிறைவேற்றப்பட வேண்டும்.

இதற்கு உள்ள மூன்றாவது தடவை சர்வஜன வாக்கெடுப்பு மூலம் இதற்கான அங்கீகாரத்தை மக்களிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த மூன்று தடையையும் தாண்டி சென்றால் மட்டுமே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்க முடியும். ஆனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால்

முதலாவது தடையையே தாண்ட முடியாமல் போய்விட்டது.

அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டால், அடுத்த வாரம் அது பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். அதனையடுத்து ஆறு வாரங்களுக்குள் சர்வஜன வாக்கெடுப்பில் மக்கள் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். இந்த மூன்றும் நடைபெற்றால், நவம்பர் 16 இல் ஜனாதிபதித் தேர்தல்

நடைபெறாது. இதன் மூலம் நிறைவேற்று அதிகார பிரதமராக தான் இருந்து 2021 ஆகஸ்ட்டில் பாராளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதுதான் ரணிலின் திட்டம்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லா தொழிக்க வேண்டுமென அவசரமாக பிரதமர் ரணில் முற்பட்டதற்கு தனிப்பட்ட காரணங்கள் உள்ளன. ஜனாதி பதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் யாரை நிறுத்துவது என்பதில் கடந்த இரண்டு மாத காலமாகவே சர்ச்சைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

ரனில் போட்டியிட்டால் சிங்கள மக்களின் வாக்குகளை அவரால் முழுமையாக பெற்றுக் கொள்ள முடியாது என்ற ஒரு கருத்து ஐக்கிய தேசியக் கட்சியிடம் அதன் பங்காளி கட்சிகளிடமும் காணப்படுகிறது.

அதனால் பொது ஜன பெரமுனவின் சார்பில் களம் இறக்கப்படும் கோத்தபாய ராஜபக்ஷவை எதிரில் உள்ள கூடிய வல்லமை சஜித் பிரேமதாச மட்டுமே உள்ளதாக ஐதேகவினர் பலர் கருதுகின்றார்கள். இந்த நிலைமையில் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதி வேட்பாளர் தான்தான் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றார்.

அவரது ஆதரவாளர்கள் இந்த அழுத்தங் ளுக்கு ஈடு கொடுக்க முடியாத நிலைமையில் தான் ஜனாதிபதி பதவியையே இல்லாத ஒழிக்கலாம் என்ற ஒரு முடிவுக்கு ரணில் விக்கிரமசிங்க வந்தார்.

தொடர்ச்சி 10 ம் பக்கம்.




03ம் பக்கத் தொடர்ச்சி

## "நிறைவேற்று அதிகாரம்"

இந்த விடயத்தில் ரணிலுக்கு சாதகமான சில விடங்களும் இருந்தன. பாதகமான விடயங்களும் இருந்தன. சாதகமான விடயங்கள் என்றால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச இந்த முயற்சிக்கு மறைமுகமான ஒரு ஆதரவை கொடுக்கக் கூடியவராக இருந்தார். காரணம் ஜனாதிபதித் தேர்தலில் அவர் போட்டியிட முடியாது.

அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதி ஒருவர் இரண்டு தடவைகள் பதவி வைத்திருந்தால் மூன்றாவது தடவை அந்த பதவிக்கு போட்டியிட முடியாது. அதனால் ஜனாதிபதியாக மீண்டும் வருவதற்கான வாய்ப்பு மஹிந்த ராஜபக்சவுக்கு இல்லை. அதனால் தான் கோத்தபாய ராஜபக்ஷவை ஜனாதிபதித் தேர்தலில் அவர் களம் இறங்கினார். ஜனாதிபதி ஆட்சி முறை இல்லாத ஒழிக்கப்பட்டால் பிரதமர் தான் அதிகாரம் மிக்கவராக இருப்பார். அந்த பதவியை தன்னிடம் எடுத்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை மகிந்த ராஜபக்சவிடம் இருந்தது. அதனைவிட மைத்திரிபால சிறிசேனவும் மீண்டும் ஒருமுறை ஜனாதிபதியாக வர முடியாது என்ற நிலைமையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதற்கான ஆதரவை வழங்க தயாராக இருந்தார்.

கடந்த நான்கு ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்ட வேட்பாளர்கள் அனைவரும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை இல்லாது ஒழிப்பதாக கூறியே மக்களின் வாக்குகளை கேட்டிருந்தார்கள். இருந்தபோதிலும் பின்னர் அவர்கள் அதனைச் செய்யவில்லை. புதிய அரசியலமைப்பு சீர்திருத்த முயற்சியில் கூடநிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி என்பது முக்கிய இடத்தைப் பெறவில்லை. இந்த நிலைமையில்தான் ஜேவிபி ஒரு தீர்மானத்தை கொண்டு வந்திருந்தது. அதாவது அரசியலமைப்புக்கான 20 ஆவது திருத்தத்தின் மூலம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பது ஜேவிபி முன்வைத்த யோசனையாக இருந்தது. இதனை அப்போது கவனத்தில் எடுக்காமல் இருந்த பிரதான அரசியல் கட்சிகள் ஜனாதிபதி வேட்பாளர் தெரிவில் உருவாகிய நெருக்கடியை தொடர்ந்தே இதனை கையில் எடுத்தன. குறிப்பாக ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாசவை அனுமதிக்க முடியாது என்பதில் உறுதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்க - அந்த முயற்சியில் தன்னுடைய நிலைமையை பலவீனமடைந்து செல்வது என்பதை உறுதியாக தெரிந்துகொண்ட நிலைமையிலேயே இறுதி கட்ட முயற்சியாக இதனை முன்னெடுத்தார்.

புதன்கிழமை 18.09.2019 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலுக்கான திகதியை தேர்தல்கள் செயலகம் அறிவிக்கின்றது. இந்த அறிவிப்பு அன்று இரவுதான் வெளியிடப்பட்டது. இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட உடனடியாகவே உஷார் அடைந்த ரணில் தரப்பு முன்னெடுத்த முயற்சிதான் விசேட அமைச்சரவைக் கூட்டம். இந்தக் கூட்டத்தில் கடுமையான எதிர்ப்புகள் உருவாகும் என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். குறிப்பாக சஜித்துக்கு ஆதரவாக உள்ள அமைச்சர்களும் பங்காளிக் கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி என்பனவும் இதனை கடுமையாக எதிர்த்தனர். அமைச்சரவையில் இதனை நிறைவேற்ற முடியாத நிலைமை ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏற்பட்டது.

நிறைவேற்று அதிகாரத்தை இரத்துச் செய்யும் எந்த ஒரு முயற்சியும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னரே செய்யப்படவேண்டும் என சஜித் பிரேமதாச இந்த அமைச்சரவை கூட்டத்தில் சுட்டிக்காட்டினார். அமைச்சர்களான சம்பிக்க, ஹக்கீம், ஹரீன் பெர்னாண்டோ உட்பட பல அமைச்சர்கள் இதே நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். இவ்வளவு காலமும் இதனைச் செய்யாமல் ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்னர் இவ்வாறு செய்வது மக்கள் மத்தியிலும் அதிர்ப்தியை உண்டுபண்ணும் என அமைச்சர்கள் சுட்டிக்காட்டினார்கள். அமைச்சர்களான மங்கள சமரவீர இந்த விடயத்தில் ரணில் விக்கிரமசிங்கவுடன் கடுமையான வாதப்பிரதிவாதங்கள் ஈடுபட்டதையும் அவதானிக்க முடிந்தது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பது என்ற நிலைப்பாட்டையே அவர்கள் எடுத்திருந்தார்கள். அதனால் ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாதொழிப்பதற்கான மறைமுக ஆதரவையும் அவர்கள் வழங்கினார்கள். குறிப்பாக இதற்குத் தேவையான சட்ட ஆலோசனைகளை கூட்டமைப்பின் பேச்சாளரான சட்டத்தரணி சுமந்திரன் வழங்கியிருந்தார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் ஒரு பாலமாகவும் அவரே செய்யப்பட்டிருந்தார். கூட்டமைப்பு தலைமை பொறுத்தவரையில் சஜித் பிரேமதாச அல்லது கோதாபய ராஜபக்ஷவை தீர்வைத் தரக் கூடியவர்கள் அல்ல. அதனால் தான் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பது என்ற முடிவை கூட்டமைப்பின் தலைமை மறைமுகமாக எடுத்திருந்தது குறிப்பாக சம்பந்தனும் சுமந்திரனும் இந்த முடிவில் உறுதியாக இருந்தார்கள் இருந்தபோதிலும் அமைச்சரவையின் ஆதரவை பெற்றுக் கொள்ள முடியாததால் அந்த முயற்சி தோற்றுப் போய்விட்டது

## சோஸ்ற் தமிழ்க்கல்வி-கலாசார அமைப்பின் 15வது இல்லங்களுக்கான மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டி







சோஸ்ற் தமிழ்க்கல்வி-கலாச்சார அமைப்பின்15வது இல்லங்களுக்கான மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டி 1.9.2019 அன்று இந்து தெய்வேந்திரம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

மங்கலவிளக்கேற்றல் அகவணக்கம் ஆசியுரை திருமதி மதிவாணியம்மா பாஸ்கரகுருக்கள் வழங்க அணிவகுப்பு, விருந்தினர்கள் உரையைத் தொடந்து பச்சை சிவப்பு இல்லங்களுகான போட்டியில் பச்சை இல்லம் வெற்றியீட்டிக்கொண்டது.சிறுவர்கள் இளைஞர்கள்,பெரியவர்கள் விளையாட்டில் கலந்து சிறப்பித்தனர்.நடுவர்களாக திரு,சிவஅருள் திரு விக்கினேஸ்வரன் திரு ரவீந்திரன்.திரு.திருமதி கிருஸ்ணமூர்த்தி, திரு.திருமதி.அருள்பிரகாஷ் உதவியாளர்கள், பார்வையாளர்கள் என 200க்கும் மேற்பட்டவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார்கள்.




Bochum
Lucky Fly Reisebüro
Luckyfly
INDIA TOUR
இந்தியாச் சுற்றுலா
இந்தியாச் சுற்றுலா
குழுக்களாகவும், தனியாகவும் செல்லலாம்.
சிறப்பான வாகனவசதிகள்
தங்குமிட வசதிகள் **** HOTELS ***** HOTELS
விசாக்கள் அனைத்தும் சிறப்பாகச் செய்து தரப்படும்.
நீங்கள் விரும்பும் இடங்களை
நீங்களே தெரிவுசெய்து
எமது சிறந்த சேவையில்
மகிழுங்கள்
தாஜ்மஹால் சுற்றுலா
Offnungszeiten
Mo-Fr.10.00-19.30
Sa.10.00-15.00
Mo-Sa Mobile: 24.00
Mob:No: 0179 1484 892
தமிழ்நாடு திருத்தலச் சுற்றுலா
www.Lucky-fly.de
e.mail:siva 0108 @hotmail.com
கேரளா சுற்றுலா
நோய்தீர்க்கும் ஆயுள்வேதம்
Graphic Design Vettimaniy Ltd
Essener Str.26 Tel: 0234-2399032
44793 Bochum Fax 0234-79457171


நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துகள்
TKS BEST FOODS
DORTMUND மாநகரில்
மளிகை உலகின்
BIGG BOSS
5th ANNIVERSARY
ஒரு நாள் மட்டும்!
விழாக்காலப் பிரமாண்ட விற்பனை....
05.10.2019
நீங்கள் நம்பமுடியாத மாபெரும் விலைச்சலுகைகள் மற்றும்
குலுக்கல் முறையிலான (நம்பமுடியாத) பரிசுப் பொருட்களும்.....!
BIG SALE ONE DAY
100€ க்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளருக்கான
குலுக்கல் முறையிலான பரிசில்கள்
இலங்கை/இந்தியா விமானச்சீட்டு
தொலைக் காட்சிப் பெட்டி
Mixer Grinder
Rice Cooker
புட்டுப் பானை
Aachi
Rabeena
TKS BEST FOODS
TRS
Tilda
0049 231 950 468 83
0049 231 950 468 82
tks-bestfoods@web.de
www.tks-bestfoods.de
tksbestfoods
Rheinische Str. 79, 44137, Dortmund Germany





Dr.புஷ்பா கனகரட்ணம்.
Ph.D., C. Psych.
Clinical Psychologist

# உளநோய் ஏன் வருகிறதென்று உயிரியல் பதில் சொல்லுமா?

உளநல சிகிச்சைக்காக (psychological treatment) என்னிடம் வந்த ஒருவர், மருந்துகள் பெறுவதற்காக ஒரு உளநல மருத்துவரை (psychiatrist) சந்தித்ததாக சொன்னார். மேலும் விளங்கப்படுத்தும் போது, அந்த மருத்துவர், மூளையின் இரசாயன சமமின்மையால் (chemical imbalance) தான் தனக்கு உளச்சோர்வு (depression) ஏற்பட்டிருப்பதாகவும், மருந்துகள் எடுக்கும்போது அந்த இரசாயன மட்டம் இங்கிருந்து இங்கு மட்டும் அதிகரிக்கும் என அவர் சொன்னதாக கையால் சைகை செய்தும் காண்பித்தார். இந்த விளக்கம் சரிதானா என்பது கேள்விக்குறி தான்.

எங்கள் சமூகத்தில் உளநோய் மருந்துகளின் பாவனை அதிகரித்திருக்கிறதா இல்லையா என்ற தரவுகள் நம்மிடம் இல்லை. ஆனால், உளநோய்களை இழுக்காக கருதுபவர்களுக்கு, அது நம்மவராக இருந்தாலும் வேறு சமூகத்தவராக இருந்தாலும், ”உங்களுக்கு மூளையின் இரசாயன சமமின்மையால் தான் உளநோய் வந்திருக்கிறது” என்று வைத்தியர் சொன்னால், அதனை கொஞ்சம் இலகுவாக ஜீரணிக்க கூடியதாக இருக்கலாம். அந்த காரணத்திற்காகவே, சில வைத்தியர்கள் அந்த கருத்தை முன்வைக்க கூடும். அதனாலேயே, அந்த கருத்து உண்மையாகிவிடாது.

முன்னாள் F.D.A. Psychopharmacologic Drugs Advisory Committee தலைவர் Wayne Goodman சொல்கிறார்: மருந்துகள் இரசாயன சமநிலையை உருவாக்கும் என்பது ஒரு உபயோகமான உருவகமாக இருந்தாலும் அதனை ஒருநாளும் நோயாளிகளுக்கு விளக்கமாக நான் முன்வைக்கமாட்டேன் என்கிறார;. Psychiatric Times இன் முன்னாள் ஆசிரியர் Ronald Pies, மருந்துகள் இரசாயன சமநிலையை உருவாக்கும் என்ற விளக்கத்தை கொடுக்கும் உளநல வைத்தியர்கள் சற்று சங்கோஜப்பட்டு தான் இந்த விளக்கத்தை கொடுப்பார்கள் என நினைக்கிறன் என்கிறார். ஏனென்றால், நேரத்தை சேமிப்பதற்காக, வைத்தியர்கள் கொடுக்கும் ஒரு மேலோட்டமான கருத்து இது என்பது அவர் வாதம்.

இன்றைய காலகட்டத்தில், உளநோய்களுக்கு சிகிச்சை பெறுபவர்கள் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரித்துக்கொண்டு வருகிறது. 2001 க்கும் 2003க்கும் இடைப்பட்ட காலத்தில் National Institute of Mental Health நடத்திய ஒரு ஆய்வின் படி, 46% அமெரிக்கர்கள் தம் வாழ்க்கை காலத்தில் ஏதாவது ஒரு உளநோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவல் அதிர்ச்சி தருவதாக இருக்கிறது.

மருந்துகள் மூலம் உளநோய்களுக்கு சிகிச்சை வழங்குவ தென்பது, மூளையின் இரசாயன சமநிலையை மருந்து சரிசெய்கிறது என்ற கடந்த 40 ஆண்டு கால கண்ணோட்டத்தோடு ஒத்து போயிருக்கிறது. மருந்து

எடுப்பவர்கள் எண்ணிக்கையும் அதோடு அதிகரித்துக்கொண்டு போயிருக்கிறது. தற்போதைய காலத்தில் உளநல மருத்துவர்களும் கலந்துரையாடல் மூலம் அல்லாமல் கூடுதலாக மருந்துகள் மூலமாகவே உளநல சிகிச்சையை வழங்குகிறார்கள். 1987ல் Prozac என்ற மருந்து புழக்கத்துக்கு வந்தது.

உளச்சோர்வுக்கு மூளையில் Serotonin குறைபாடே காரணம் என்றொரு கருத்தை முன்வைத்தது [Serotonin xU neurotransmitter - நரம்புக்கலன்களுக்கிடையில் அல்லது நரம்பு கலன்களுக்கும் தசைகளுக்கும் இடையில் இரசாயன தொடர்பாடலை ஏற்படுத்தும் மூலக்கூறுகள் தான் neurotransmitters]. Prozac இந்த Serotonin குறைபாட்டை நிவர்த்தி செய்கிறது என்ற எண்ணம் பரவலாக, அடுத்த 10 வருடத்தில் உளசோர்வுக்காக அமெரிக்காவில் மருந்து உட்கொள்பவர்கள் எண்ணிக்கை 3 மடங்காகியது. இப்பொழுது யதார்த்த பிறழ்வின் (psychosis) பாதிப்பை குறைப்பதற்கான மருந்துகள் பாவனை, அதிகூடிய விற்பனைக்குரிய முதல் இடத்தில் இருந்த கொலெஸ்டெரோல் மருந்துகள் பாவனையை விடவும் மிஞ்சி நிற்கிறது.
இத்தகைய தரவுகள் துறைசார் நிபுணர்களிடத்தில் பல கேள்விகளை எழுப்பி நிற்கிறது. உளநோய்களின் விகிதம் அதிகரித்து செல்கிறதா? இந்த உளநோய்களுக்கு உயிரியல் தான் காரணம், சூழல் காரணிகள் அல்ல என்றால், நோய் அடையாளம் காணலும் மருந்து பாவனையும் அதிகரித்துக்கொண்டு செல்வதென்பது சரிதானா? அல்லது எப்போதும் இருந்துவந்த நோய்களை இப்பொழுது தான் கூடுதலாக அடையாளம் காண்கிறோமா? அல்லது, முன் எப்பொழுதும் இல்லாத வகையில் சிறு பிரச்சனைகளையும் உளநோய்களாக அடையாளம் காண ஆரம்பித்து விட்டோமா? மருந்துகள் மக்களை குணப்படுத்துகிறதா? குணப்படுத்து கிறதென்றால், நோயின் விகிதாசாரம் குறைந்தல்லவா இருக்கவேண்டும்? அண்மையில் வெளிவந்திருக்கும் சர்ச்சைக்குரிய சில நூல்களின் ஆசிரியர்கள் எழுப்பும் கேள்விகள் தான் இவை. ஒருவர் உளநல நிபுணர் Irving Kirsch; இன்னொருவர் நிருபர்./எழுத்தாளர் Robert Whitaker; மூன்றாமவர் உளநல வைத்தியர். Daniel Carlat. இவர்கள் மூவரும் பல விடயங்களில் ஒரே பார்வையை கொண்டிருக்கிறார்கள்.

தொடர்ச்சி 08ம் பக்கம்




அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்



07ம் பக்கத் தொடர்ச்சி

ஒன்று - மருந்து நிறுவனங்களின் ஊழல் என்கிறார்கள். எதனை உளநோய் என அடையாளம் காண்பது, மற்றும் எப்படி இந்த உளநோய்களுக்கு சிகிச்சை வழங்கப்பட வேண்டும் என்ற விடயங்களில் எடுக்கப்படும் தீர்மானங்களில் மருந்து நிறுவனங்கள் பெரும் பங்கை வகிக்கின்றன. Kirsch விளக்குகிறார்:

மருந்து நிறுவனங்கள் ஒரு புதிய மருந்தை சந்தைக்கு விடுமுன் US Food and Drug Administration (FDA) இடமிருந்து அதற்கான அங்கீகாரத்தை பெறவேண்டும். அதற்கு அவர்களால் பொறுப்பேற்கப்பட்ட அந்த மருந்து சம்பந்தப்பட்ட எல்லா ஆய்வுகளையும் (clinical trials) அந்த மருந்து நிறுவனம் சமர்ப்பிக்க வேண்டும்.

மருந்து, நிவாரணம் கொடுப்பதற்கான அத்தாட்சியாக 2 ஆய்வுகள் இருந்தாலே போதுமானது.

தமக்கு சாதகமான கண்டுபிடிப்புகளை கொடுக்கும் ஆய்வுகளை மருந்து நிறுவனங்கள் மருத்துவ ஆய்விதழ்களில் பிரசுரிப்பதோடு, மருத்துவர் களுக்கும் அறியத்தருவார்கள். சாதகமற்ற கண்டுபிடிப்புகளை தரும் ஆய்வுகள் எல்லாம் முடக்கப்பட்டுவிடும். ஆக, இந்த வழக்கமானது மருத்துவ நூல்கள், மருத்துவ கல்வி மற்றும் சிகிச்சை முடிவுகள் எல்லாவற்றையுமே ஒருபக்க சார்பாக்கிவிடும்.

இரண்டாவது - மூளையின் இரசாயன சமமின்மை தான் உளநோய்களுக்கு காரணம் என்ற கருத்தை இவர்கள் (Kirsch, Whitaker & Carlat) ஏற்றுக்கொள்வதாக இல்லை. ஐம்பதுகளில் Thorazine, Miltown, மற்றும் Marsilid என்ற மூன்று மருந்துகள் சந்தைக்கு வந்தன. ஆரம்பத்தில் இவை உளநோய்களுக்கென தயாரிக்கப்படவில்லை.

தொற்றுக்களுக்கென பாவிக்கப்பட்ட இந்த மருந்துகள் பாவனையாளர்கள் மனநிலையை அமைதிப்படுத்தியதை அவதானித்ததை அடுத்து, ஆய்வாளர்கள் இந்த மருந்துகள் மூளையின் சில இரசாயன மட்டங்களை மாற்றக்கூடிய தன்மையை கொண்டிருந்ததையும் அவதானித்தனர்.

உளநோய்க்கான மருந்துகள் மூளையின் neurotransmitter அளவுகளை மாற்றுவதை கண்டறிந்ததும், உதயமானது தான் இரசாயன சமமின்மை கொள்கை. அதாவது, உளநோயின் காரணம் உடலில் neurotransmitter அளவுகளின் மாற்றம் தான் என்பதும், மருந்துகள் இந்த neurotransmitter அளவுகளை மாற்றுகிறது என்பதுமான தர்க்கமுரணான கருத்து முன்வைக்கப்பட்டது. உதாரணமாக, Thorazine என்ற மருந்து மூளையில் dopamin என்ற neurotransmitter அளவை குறைப்பது கண்டறியப்பட்டது. இதனை காரணமாக கொண்டு, schizophrenia போன்ற யதார்த்த பிறழ்வு நோய்களுக்கு உடலில் அதிக அளவு dopamin இருப்பதே காரணம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. ஆக, ஒரு அசாதாரண நிலையை மாற்றுவதற்கு மருந்து கண்டுபிடிப்பதை விடுத்து, ஒரு மருந்திற்கு பொருந்தக்கூடிய வகையில் ஒரு அசாதாரண தன்மை நிர்ணயிக்கப்பட்டது. இதனை தான், இந்த மூன்று நிபுணர்களும் உளமருத்துவத்தின் தர்க்கமுரணான பெரும் பாய்ச்சல் என்கிறார்கள். உடலில் Aspirin (அல்லது Tylenol) குறைபாட்டால் தான் காய்ச்சல் வருகிறது என்பதற்கு ஒப்பானது இவர்கள் வாதம் என்கிறார் உளநல மருத்துவர் Carlat.

உளநோய்களை இரசாயன சமமின்மையுடன் தொடர்பு படுத்தும் கொள்கையை உறுதிப்படுத்த ஆய்வாளர்கள் பல்லாண்டு காலமாக முயற்சி செய்தும், இதுவரை கையில் ஒரு பலனும் இல்லை. இந்த கொள்கை வெறும் ஆதாரமற்ற ஒன்று என்கிறார் Carlat. உளசோர்வு மூளையின் இரசாயன சமமின்மை சார்ந்தது என்ற கொள்கை முழுக்க முழுக்க பிழையானது என்கிறார் Kirsch. Whitaker சொல்வது - schizophrenia (யதார்த்த பிறழ்வு நோய்), உளசோர்வு போன்ற நோய்நிலைகளுக்கு சிகிச்சை பெறுமுன் மனிதர்கள் neurotransmitter தொழிற்பாடு சாதாரணமாகவே இருக்கிறது. ஒரு இரசாயன சமமின்மையும் அவர்கள் மூளையில் அடையாளம் காணப்படுவதில்லை. ஆனால் மருந்துகள் எடுக்க ஆரம்பிக்கும் போது தான் அவர்கள் நரம்பு கலன்களில், மூளையில், அசாதாரண விடயங்கள் நடக்க ஆரம்பிக்கின்றன என்கிறார். அவர் வாதப்படி, மருந்துகளின் பாவனை அதிகரிக்க அதிகரிக்க, அது தரும் பக்க விளைவுகள் இன்னும் பல சிக்கல்களை கொண்டுவர, காலப்போக்கில் நோயின் தன்மையே மாறிக்கொண்டுவருகிறது என்பது தான். இதனை மேலும் விளக்குகையில், உளநோய்களின் தீவிரம் காலத்தோடு அதிகரித்துக்கொண்டு வருவது பற்றியும் அவர் கூறுகிறார்.

யதார்த்த பிறழ்வு நோயோ, உளச்சோர்வோ, நோயின் தன்மையும் தாக்கத்தின் நீடிப்பும் இப்பொழுது அதிகரித் திருக்கிறது என்றால், நாம் உட்கொள்ளும் மருந்துகள் எமக்கு குறுகிய கால நன்மையை கொடுத்தாலும் காலப்போக்கில் வேறு பாதிப்புகளை கொண்டுவருகிறது போல் தெரிகிறது என்கிறார். Whitaker கருத்துப்படி, உளநோய்களால் பாதிக்கப்படுபவர்கள் எண்ணிக்கை அதிவேகமாக அதிகரித் திருக்கிறது. அதே வேளை உளநோய்க்கான மருந்துகளின் பரிந்துரைப்பும் அதிவேகமாக அதிகரித் திருக்கிறது. அப்படியானால், மருந்துகளின் அடிப்படையில் நாம் வழங்கும் சிகிச்சை, எமக்கே தெரியாத விதத்தில் பரந்த அளவிலான இந்த பெரும் உளநோய் உபாதையை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி இருக்கிறதா என வினவுகிறார்.

மேலும், உளநோய்க்கான உயிரியல் காரணிகள் என்று பார்க்கும்பொழுது, குறிப்பிட்ட உளநோய்களுக்கு உரிய குறிப்பிட்ட மரபணுக்களை அடையாளம் காண பல ஆய்வுகள் நடத்தப்பட்டு வந்திருக்கின்றன. அப்படி அடையாளம் காண முடிந்தால் மரபணு பரிசோதனை செய்து உளநோய்களை வராமல் தடுக்க சில வழிமுறைகளை உருவாக்கலாம் என்பது தான் இந்த ஆய்வுகளின் நோக்கம். ஆனால், University of Colorado Boulder தற்பொழுது American Journal of Psychiatry யில் பிரசுரித்திருக்கும் ஒரு பரந்தளவிலான ஆய்வின்படி, உளச்சோர்வுக்கான மரபணுக்கள் என்று எம் உடலில் அடையாளம் காணக்கூடியதாக ஒன்றும் இல்லை.

620,000 பேர்களின் தரவுகள் இந்த ஆய்வில் உள்ளடக்கப் பட்டிருந்தது. இந்த ஆய்வாளர்கள் கருத்துப்படி, தனிப்பட்ட மரபணுக்கள் பல்கூட்டான மனித வெளிப்பாடுகளுக்கு காரணமாக இருக்கமுடியாது. உளவியலில் நோய்க்கான காரணத்தை தனி மரபணுக்கள் தீர்மானிக்காவிட்டாலும், அதற்கு பொறுப்பாக பல்லாயிரம் மரபணுக்களின் கூட்டு காரணமாக இருக்கலாம் என்கிறார்கள் இவர்கள். அதாவது, உளநோய்களின் தோற்றம் இலகுவில் அடையாளம் காணும்வகையில் எளிதானதாக இல்லை. ஆக, தனிப்பட்ட மரபணுக்களோ இரசாயன சமமின்மையோ, உயிரியலுக்குள் உளநோய்க்கான காரணத்தை அறிய நாம் மேற் கொண்டிருக்கும் பல்லாண்டு கால தேடல், இதுவரை ஒரு தெளிவான விடையை எமக்கு தரவில்லை என்பது தான் தெளிவாக தெரிகிறது.




# வெற்றிமணி வெள்ளிவிழா அரங்கில் வழங்கிய வாழ்நாள் சாதனையாளர்கள் விருது 2019






01.தமிழாலயத் தந்தை அமரர் இரா.நாகலிங்கம். தமிழ்ச் சிறார்களுக்கு ஆற்றிய அரும்பணிக்கு வெற்றிமணி வாழ்நாள் சாதனையாளர் விருதை அன்னாருக்கு சமர்ப்பணம் செய்து வழங்குகியது. அவ் விருதினை அவரது புதல்வன் திரு.நிர்மலன் நாகலிங்கம் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

02.கம்.காமாட்சி அம்பாள் ஆலய குரு.சிவஸ்ரீ ஆறுமுக பாஸ்கரகுருக்கள்.




ஈழத்தமிழர் புலம்பெயர் நாட்டில் பிரமிக்கத்தக்க ஆலயங்களை அமைத்து வழிபட முடியும் என்ற நம்பிக்கையை விதைத்தவர். தவிர்கமுடியாத காரணங்களால் சமூகம் தரமுடியாமையால், அவரது பாரியார் ஸ்ரீமதி மதிவாணி பாஸ்கரகுருக்கள் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

03.ஈழத்தின் மெல்லிசை மன்னன் எம்.பி.பரமேஷ்.



உனக்கு தெரியுமா நான் உன்னை நினைப்பது என்ற பாடலை பட்டிதொட்டி எல்லாம் சினிமாப்பாடல்களை முறியடித்து இதயங்களைத் தொட்டவர். முதல் றைக்கோட்டாக வெளியிட்டு றைக்கோட் அடித்தவரும் இவர். அவர்கள் விருதினைப் பெற்றுக்கொண்டார்.

04.நூலகவியலாளர் என்.செல்வராஜா

தனது ஆயராத முயற்சியால் பல நூல்தேட்டங்களை தொகுத்து பல எழுத்தாளர்களது படைப்புக்களை ஒழுங்கு படுத்தி நூல்தேட்டமாக அவற்றைப்பதிவு செய்து வைத்துள்ளவர், நூலகவியலாளர் திரு. என். செல்வராஜா அவர்கள்.

தொடர்ச்சி 10ம் பக்கம்



Tel: 0231- 108 763 61, 0231 584 407 63 Fax: 0231 108 763 62 Mobile:0163- 871 43 69 Rheinische str-72 44137 Dortmund

09ம் பக்கத் தொடர்ச்சி

# வாழ்நாள் சாதனையாளர்கள் விருது 2019

04.நூலகவியலாளர் என்.செல்வராஜா



ஈழத்துத் தமிழ் நூல்களை ஆவணப்படுத்தும் பணியை 1990இல் தொடங்கி இன்று வரை 2000 நூல்களை ஒருதொகுத்து உள்ளார். பிறரது படைப்புகளுக்காக தனது நேரத்தை அர்ப்பணிக்கும் பெருமகன் விருதினைப் பெற்றுக்கொண்டார்.

05.சங்கீதரத்தினம் ச.பிரணவநாதன்



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்தின் அதிவிசேடப் பிரிவில், 13 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றியவரும், யேர்மனி கலை பண்பாட்டுக் கழகத்தின் மூத்த தாள வாத்தியக் கலைஞரும், இளைய தலைமுறையினருக்கு, மென்முளவு வாத்திய இசையை அயராது போதித்து எம்மினத்திற்கு பெருமைசேர்த்து வருகின்ற மூத்த கலைஞர்களில் ஒருவருமான மிருதங்க வித்துவான், லயகுமாரன் சங்கீதரத்தினம் பிரணவநாதன் அவர்கள் விருதினைப் பெற்றுக்கொண்டார்.

படங்கள்: Konessfotos.de

06.சிம்மக்குரலோன் வலன்ரையின்



500க்கும் அதிகமான, பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கியவரும் 1000 கணக்கான நிகழ்ச்சிகைளை தொகுத்து சிறப்பித்தவரும் கலைபண்பாட்டுக்கழகத்தின் அறிவிப்பாளராக பணிபுரிந்த சிறந்த அறிவுப்புக் கலைஞர் இவர்.சிம்மக்குரலோன் என அழைக்கப்படும் அறிவிப்பாளர் வலன்ரையின் அவர்கள் விருதினைப் பெற்றுக்கொண்டார்.

07.அகரம் பிரதம ஆசிரியர் த.இரவீந்திரன்.

2004 சேர்மனியில் முதல் தமிழ் 24 மணிநேர வானொலி ஆரம்பித்தது 2011 மே அகரம் ( 100 இதழ்கள்) நிறைவு செய்து 2014 ஏப்ரல் அகர தீபம் சஞ்சிகை ஆரம்பித்து அனைத்திலும் சிறப்புற்று திகழும் முயற்சியாளர் திரு.த. இரவீந்திரன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.





08.வானதி நர்த்தனாய அதிபர்.கலாநிதி திருமதி.வானதி தேசிங்குராஜா

யேர்மனியில் முதல் பரத நாட்டிய அரங்கேற்றத்தை செய்தவர். இன்று 47 அரங்கேற்றங்களை செய்து மகிழ்ந்தவர். பரத நூல் ஒன்றை மாணவர்களுக்கு ஆங்கிலம், தமிழ், என இருமொழிகளில் தந்தவர். சிறந்த பண்பாளரான கலாநிதி வானதி தேசிங்குராஜா அவர்கள் தவிர்க்கமுடியாத காரணங்களால் வரமுடியவில்லை. அவரது விருதை அவர்கள் சார்பாக திரு.திருமதி. சிவனேசலிங்கம் தம்பதிகள் பெற்றுக்கொண்டனர்.





# ஐஸ்கிறீம், இனிப்புக்கு அடிமையாகலாமா?

டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்

ஐஸ்கிறீம் இனிப்பு போன்ற உணவுகளுக்கு அடிமையாகிவிட்டேன். விடுபடுவது எப்படி ? சொக்லேட், ஐஸ்கிறீம் இனிப்பு போன்ற உணவுகளி ஆர்வம் அதிகமாக,ருக்கின்றது. கிட்டத்தட்ட இவற்றுக்கு அடிமையாகி விட்டேன் என்று கூடசொல்லலாம். இதிலிருந்து எப்படி விடுபடுவது டாக்டர்?

புதில்:- இனிப்பு உணவுகளிலிருந்து விடுபடுவது எப்படி என்று சொல் வதற்குமுன்னர் அதற்கு அடிமையாகிவிட்டேன் என்று நீங்கள் சொல் வதில் ஏதாவது உண்மை இருக்கிறதா என்பது பற்றி சில வார்த்தைகள் சொல்லியே ஆக வேண்டும்.

இனிப்புக்கு அடிமையாவது என்பது வெறும் பேச்சுச் சொல் அல்ல. அது ஒரு நோய் போல பலரையும் பீடித்துள்ளது. ஏனெனில் நாம் இனிப்பை உட் கொள்ளும் போது எமது குருதியில் அபின் சார்ந்ததும் டோபமின் போன்றதுமான இரசாயனங்கள் கலக்கின்றன என ஆய்வாளர்கள் சொல் கிறார்கள்.

குரதியில் அதிகளவு டோபமின் சேரும்போது எம்மையறியது ஒரு இன்ப உணர்வு ஏற்படுகிறது. அந்த உணர்வை தொடர வேண்டுமாயின் உடலானது இனிப்பை மேலும் உட்கொள்ளத் தூண்டுகிறது. நாட்செல்லச் செல்ல அதே அளவு இன்பத்தைப் பெற கூடியளவிலான இனிப்பை உட்கொள்ள நேர்கிறது.

மது மற்றும் போதைப் பொருள்களும் அவ்வாறுதான் அடிமையாக்குகின்றன. இனிப்பானது கொகேயினை விட அதிகமாக ஒருவரை அடிமைப்படுத்த வல்லது என Cassie Bjork என்ற ஆய்வாளர் கூறுகிறார். அத்துடன் அதிக இனிப்பை உட்கொள்வதால் எடை ஏறுகிறது. இதன் தொடர்ச்சியாக பிரஸர், கொலஸ்டரோல் நீரிழிவு, இருதய நோய்கள் போன்றவை வரும். எனவே நீங்கள் விரும்பியவாறு அதிக இனிப்பிலிருந்து விடுபட வேண்டியது அவசியம்தான்.

இனிப்பு என்பது சீனி சர்க்கரை ஆகியவற்றிலும் அவை சேர்க்கப்பட்ட உணவுகளிலும் மட்டும்தான் இருக்கிறது என்றில்லை. பழங்களிலும் இருக்கிறது. பழங்களில் உள்ள இனிப்பு தனியாக வருவதில்லை. பழங்களிலுள்ள இனிப்பானது நார்ப்பொருள் மற்றும் ஏனைய போசணைப் பொருட்களுடன் கலந்து வருகிறது.

இதனால் அவற்றில் சீனியின் அடர்த்தி குறைவு. எனவே அவற்றை உண்ணும் போது குருதியில் சீனியின் அளவு திடீரென ஏறவதில்லை என்பதையும் குறிப்பிடலாம். எனவே அவற்றில் அடிமையாகும் நிலைஏற்படுவதில்லை.

இதிலிருந்து விடுபடுவது எப்படி?

முதல் வேலையாக உங்களது வீட்டிலிருந்து சீனியையும் சீனி சார்ந்த பொருட்களையும் வீசிவிடுங்கள். அலுமாரிகளிலிருந்து அகற்றுவதுடன் உங்கள் முயற்சி நின்றுவிடக் கூடாது. அவற்றை உண்பதில்லை என திடசங்கற்பம் எடுத்துக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு நேர உணவையும் சரியான நேரத்தில் போதியளவாகவும் போசாக்கு நிறைந்ததாகவும் உட்கொள்ள வேண்டும். காலை உணவிலிருந்து இதை ஆரம்பிப்பது முக்கியம். இப்பொழுது பலர் வேலை அவசரத்தில் காலை உணவை தவிர்த்துவிட்டு பின்னர் பசி எடுக்கும் போது திடீர் உணவுகளை கடையில் வாங்கித் திணிக்கும் போதே இந்த பிரச்சனை ஆரம்பிக்கிறது. எனவே மாப்பொருள், புரதம், கொழுப்பு போன்ற போசணைகள் சரியான அளவில் உள்ள உணவுகளைத் தேர்ந்தெடுங்கள். ஏதாவது காய்கறி பழவகைகள் சேர்ந்திருப்பது அவசியம். போதிய நீர் அருந்துங்கள். தினமும் 6 கிளாஸ் நீர் அருந்துவது நல்லது. அவை இனிப்பூட்டப்பட்ட பானங்களாக இருக்கக் கூடாது.

பசி இருப்பது கூடாது. பசி இருந்தால் இனிப்பு சேர்ந்த உணவுகளுக்கான அவா அதிகரிக்கும்.

எனவே பிரதான உணவுகளுக்கு இடைப்பட்ட வேளைகளில் சிறு உணவுகள் உட்கொள்ளலாம். ஆனால் கேக், பிஸ்கற், ரோல்ஸ், பற்றிஸ், உருளைக் கிழங்கு சிப்ஸ் போன்றவற்றை தொடவும் கூடாது. பழங்களாகவோ காய் கறிகள் அதிகம் சேர்ந்தவையாகவோ இருப்பது நல்லது. மாறாக வறுத்த கடலை, கச்சான் எண்ணெய் சேர்க்காத கரட் வறுவல் போன்ற ஏதாவது ஒரு ,னிப்பற்ற போசாக்கு சிற்றுணவை தயாராக வைத்திருங்கள். வீட்டில் இருக்கும் போது மட்டுமல்ல வேலைக்கு போகும் போதோ, வெளியே சொலும் போதோ பசி எடுக்கும்போது இவற்றை உண்ணுங்கள். கடை நொறுக்குத் தீனிகளை சாப்பிடவே வேண்டாம்.

தினசரி ஏதாவது உடல் உழைப்பில் ஈடுபடுங்கள். அல்லது உடற் பயிற்சி செய்யுங்கள். இது உங்கள் குரதியில் சீனியின் அளவை அதிகரிக்க விடாமல் தடுப்பதால் இனிப்பு மீதான நாட்டத்தையும் குறைக்கும். அத்துடன் மனம் மகிழ்ச்சியாக இருப்பதாலும் வெற்றுப் பொழுதுகள் இலாததாலும் இனிப்பை நாட வேண்டிய அவசியம் ஏற்படாது.

மனம் மகிழ்சியாக இருப்பது அவசியம். முறை சிந்தனைகளில் மூழ்காதீர்கள். தேவையற்ற உணர்வுச் சிக்கல்களி மூழ்க வேண்டாம். மகிழ்ச்சியான பொழுதுபோக்குளில் ஈடுபடுங்கள். மனஅழுத்தம் இருந்தால் அதை மறக்க பலர் மதுவை நாடுகிறார்கள். உங்களைப் போன்ற இனிப்பிற்கு அடிமையானவர்கள் இனிப்பையே நாடுவார்கள். எனவே மனஅழுத்தத்தை தூண்டும்

விடயங்களில் ஈடுபடாதீர்கள். உடற் பயிற்சி, நடைப் பயிற்சி, தியானம், யோகாசனம், மந்திர உச்சாடனம் போன்ற ஏதாவது செயற்பாட்டில் ஈடுபடுவதும் நன்மை தரும்.

அதே போல போதிய உறக்கமும் அவசியம். இக் கட்டுரையைப் படித்து முடித்துவிட்டு சும்மா இருக்காதீர்கள். உடனடியாக எழுந்து உங்கள் வீட்டிலுள்ள சொக்லேட், ஐஸ்கிறீம் முதற்கொண்டு எல்லா இனிப்புகளையும் குப்பைக் கூடையில் வீசுவதிலிருந்து உங்கள் முயற்சியை ஆரம்பியுங்கள்.

இனிப்பிலிருந்து விடுதலை நிச்சயம்..



# யாழ்.பல்கலைக்கழக தொழினுட்ப பீடத்தில் பீறுநடைபோடும் ஒரு இளம் விஞ்ஞானி!








யாழ்.பல்கலைக்கழக தொழினுட்ப பீட மாணவன் சோமசுந்தரம் வினோஜ் குமாரின் பதினொரு கண்டுபிடிப்புக்கள் தேசிய மட்டத்திற்குத் தெரிவு

யாழ்.பல்கலைக்கழகத்தின் தொழினுட்ப பீடத்தில் இரண்டாம் வருடத்தில் பொறியியல் தொழினுட்பத்தை பயின்றுவரும் சம்மாந்துறை ஸ்ரீ கோரக் கோவிலைச் சேர்ந்த சோமசுந்தரம் வினோஜ்குமார் என்னும் பல்கலைக்கழக மாணவனின் பதினொரு கண்டுபிடிப்புக்கள் 2019ம் ஆண்டுக்கான தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சும் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவும் இணைந்து போட்டிகளை நடத்தி வருகின்றது. இவ்வருடத்துக்கான தேசிய மட்ட கண்டுபிடிப்புப் போட்டி எதிர் வரும் செப்டம்பர் 20ம் திகதி தொடக்கம் 22ம் திகதி வரை இலங்கை வர்த்தக மற்றும் கண்காட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தேசிய மட்டத்தில் தங்கப்பதக்கம் பெறும் ஆக்கங்களிலிருந்து மிகச் சிறந்த கண்டுபிடிப்புக்களை சர்வதேச கண்டுபிடிப்பாளர் போட்டிகளுக்குத் தகுதி பெறுவார்கள். கிழக்கு மாகாண மட்டப் போட்டி கடந்த மே மாதம் 25ம் திகதி மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரியில் நடைபெற்றது. அதில் சோமசுந்தரம் வினோஜ்குமார் பதின்மூன்று கண்டுபிடிப்புக்களை போட்டிக்காக காட்சிப்படுத்திருந்தார்.

அதில் பிறரின் துணையின்றி கணித தேற்றங்களை இலகுவாக படிக்கக்கூடிய ஆயவாள Helper - 2 எனும் கருவியும், இயந்திர வேலைகளின் போது தவறவிடப்படும் மிகச் சிறிய துணைப்பாகங்களை இலகுவாகவும் விரைவாகவும் கண்டுபிடிக்கக் கூடிய The Device to detect the lost nuts எனும் கருவியும், களைகளை அழிக்கக் கூடிய The Device to up root the Thorny plants எனும் கருவியும், இரும்புகளை மிகத் துள்ளியமான அளவுகளில் விரைவாக வெட்டக்கூடிய A Device to cut out Iron bars & Pipes எனும் கருவியும், பலகைகளை நேர்த்தியாக ஒழுங்கமைக்கக் கூடிய The Device to set up planks to Gather எனும் கருவியும், தளர்பாட இணைப்புக்களை துள்ளியமாக கழற்றக்கூடிய The device to Detect the Planks எனும் கருவியும், தட்டை வடிவான பொருட்களுடைய மையப் புள்ளியை கண்டுபிடிக்கக் கூடிய ஆனை Point Scaler எனும் கருவியும், தளர்பாட இணைப்புக்களின் போது மையப்புள்ளியை கண்டுபிடிக்க உதவும் Drill's Helper எனும் கருவியும், தரையோடுகளின் உருவத்தை மாற்றியமைக்கும் General Scale Helper எனும் கருவியும், வீட்டில் நாளாந்தம் சேரும் உக்கலடையக் கூடிய கழிவுகளை விரைவாக மீள்சுழற்சிக்கு உட்படுத்தும் Novel Plant Pot எனும் கண்டுபிடிப்பும் மற்றும் ஐந்து புதிய தொழினுட்பங்களை உள்ளடக்கியதும் புத்தகங்களை இலகுவாக கற்கக் கூடியதுமான Smart Book Cover எனும் கண்டுபிடிப்பும் தேசிய மட்ட கண்டுபிடிப்பு கண்காட்சிப் போட்டிக்கு தெரிவு செய்யப் பட்டுள்ளது.

“இந்தவருட கண்டுபிடிப்புடன் எனது மொத்தமாக 99 கண்டுபிடிப்புக்களை செய்துள்ளேன். நான் இதுவரை 99 கண்டு பிடிப்புக்களைச் செய்திருந்தாலும் என்னைப் பொறுத்தவரை எனது மிகச் சிறந்த கண்டுபிடிப்பை நான் இன்னும் செய்யவில்லை. தற்போது புவியீர்ப்பு விசை மூலம் வீட்டுகளுக்குத் தேவையான மின்சாரத்தை பெறல் மற்றும் டெங்கு நோய்கான நுளம்புகளை அழிக்கும் கருவி போன்ற ஆய்வுகளைச் செய்து வருகின்றேன். இவ்ஆய்வுகள் மற்றும் கண்டுபிடிப்புக்களுக்கு உதவிகள் மற்றும் ஆலோசணைகளை வழங்கி வரும் கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் சந்தன ஜெயவர்த்தன சேர் அவர்களுக்கும், இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் ஆணையாளர் பேராசிரியர் ஹல்வதுர சேர் அவர்களுக்கும், றுகுனு பல்கலைக்கழக பேராசிரியர் பௌதிக சேர் அவர்களுக்கும், யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் ரவிராஜன் சேர் அவர்களுக்கும், தென்கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் முசாதிக் சேர் அவர்களுக்கும், இலங்கை புலமைச்சொத்து அலுவலகத்தின் பணிப்பாளர் அவர்களுக்கும் மற்றும் யாழ். பல்கலைக்கழக தொழினுட்ப பீட நிர்வாகத்திற்கும் பணிவன்பான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் அத்தியாவசியமான கண்டுபிடிப்புக்களை வணிகமயப்படுத்து வதற்குரிய நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றேன்.” என இளம் விஞ்ஞானி வினோஜ்குமார் தெரிவித்தார்.

இவர் தனது பல்கலைக்கழக விடுமுறை தினங்களில் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் வரும் பணப்பரிசில்களில் மூன்றில் ஒரு பங்கில் பாடசாலை மாணவர்களின் புத்தாக்க திறனை ஊக்குவிப்பதற்கான 'INNOVEX' எனும் இலவச கருத்தரங்குகள் மற்றும் கண்காட்சிகளை நடாத்தி வருகின்றார்.

இந்த வருடம் பெப்ரவரி தாய்லாந்தின் பேங்கொக் வர்த்தக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற சர்வதேச அறிவியல் கண்டுபிடிப்பு மற்றும் தொழில் நுட்ப கண்காட்சிப் போட்டியில் மூன்று சர்வதேச விருதுகளையும் ஐந்து நாடுகளுடைய சிறப்பு விருதுகளையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத் தக்கது. சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் மற்றும் சம்மாந்துறை ஸ்ரீ கோரக்கர் தமிழ் மகா வித்தியாயத்தின் பழைய மாணவராகிய இவர் இதுவரை 38 தேசிய விருதுகளையும் 6 சர்வதேச விருதுகளையும் 5 நாடுகளுடைய சிறப்பு விருதுகளையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. இந்த வருடம் நடைபெற்ற தேசியமட்ட கண்டுபிடிப்பாளர் போட்டியில் வினோஜ்குமார் அவர்கள் கீழ்வரும் பரிசில்களைப் பெற்றுக்கொண்டார்.1. ஒரு தங்கப்பரிசும் மற்றும் 100,000,00 பணப்பரிசும் 2. ஒரு வெள்ளிப்பதக்கம் மற்றும் 50,000,00 பணப்பரிசும்.3. மூன்று வெண்கலப்பதக்கங்கள் மற்றும் 90,000,00 பணப்பரிசு



வெற்றிமணி வெள்ளிவிழாவில் இடம்பெற்ற நடனத்தில் நிருத்திய நாட்டியாலய மாணவிகள் தந்த நடனம் இது. பல அழகிய படங்கள் தொடர்ந்து வெளிவரும்.





# வீட்டுக்கு தூரமாகுமா பெண்மை?



கரிணி

சங்க இலக்கிய காலத்தில் தொடங்கி பெண் எப்படி நிலவோடு உவமைப்பட்டாள் என்பது அதிசயமே. பெண் என்ன நிலவு போன்று குன்றும் குழியுமாக கறையோடா காணப்படுகிறாள் என நகைக்கும் மேதாவிகள் பலரால் அதன் உள்ளார்ந்த பொருள் ஆராயப்படுவது குறைவே.

நிலவுக்கான மாதச்சுழற்சியே பெண்ணிற்கான மாதச்சுழற்சி. மாதாமாதம் மூன்று நாட்கள் நிலவும் பெண்ணும் ஒதுங்கியே போகிறார்கள். அமாவாசை காலத்தில் சூரியனுக்கும் பூமிக்குமிடையே நிலவு மறைந்தாலும் தகிக்கிறது. நிலவைப் போன்ற குளிர்ச்சியான பெண்ணும் மாதவிடாய் காலத்தில் உடலில் வெப்பம் அதிகரித்து உணர்வுகள் கொந்தளித்துக் காணப்படுவாள். இக்காலத்தில் எரிச்சல், கோபம், சோர்வு போன்ற உணர்வுகள் இயல்பாகவே ஏற்படும். பௌர்ணமி காலத்தில் நிலவு பிரகாசிக்கிறது. அது போன்று பெண்ணும் மாதவிடாய் சக்கரத்தின் இரு வாரங்களில் மிகவும் பிரகாசிக்கிறாள். இப்படி பல விடயங்களில் பெண் நிலவோடு ஒத்துப் போகிறாள்.

பெண்மை ஏன் இன்றுவரை போற்றப்படுகிறது எனில் அன்போடும், அக்கறையோடும் மிகப் பொறுமையோடு படைப்பிற்கு துணை போய் அடுத்த சந்ததிகளை உருவாக்கி உறுதியாக்கி கொடுக்கிறது என்பதனால்த்தான். அதற்கான அடிப்படையே பெண்ணிடமுள்ள பெண்மையே. பெண் என்ற உரு பெண்மை உள்ளதால் முழுமை பெறுகிறது.

மாதவிடாய் ஏற்பட்ட பெண்ணைப் பார்த்து துடக்கு ஒரு இடத்தில் அமர்ந்திரு, அங்கு தொடாதே, இங்கு தொடாதே, பூமரங்களையோ பயிர்களையோ தொடாதே, அடுப்பங்கரைக்கு வராதே என பெரியவர்கள் கூறுவதை கேட்டிருக்கிறோம். அதனை பலர் மூட நம்பிக்கை என்றும் இக்காலத்தில் பெண்கள் விமானம் ஓட்டுகிறார்கள் என்றும் விசனப்படுவார்கள். உண்மையில் கடைப்பிடிக்கப்படவேண்டிய மரபோடு மூட நம்பிக்கைகள் மிக சில விடயங்கள் சேர்ந்தமையால் அவை முற்றிலும் பின்பற்றப்படாமல் போகின்றன. பொதுவாக மாதவிடாய் காலத்தில் பெண்ணின் உடலில் சூடு அதிகரித்து அடிவயிற்றில் அந்த வெப்பம் மையம் கொண்டு அந்த வெப்பத்தினை அடிப்படையாகக் கொண்டே உடற் சுத்திகரிப்பு நிகழ்கிறது. இக்காலத்தில் வலது பக்க மூக்கு துவாரமாகிய சூரியகலையே அதிகமாக வேலை செய்யும். அது உடலை வெப்பமாக்கும். அப்போது தான் உடல் அதிக வெப்பத்தை தன்னகத்தே தக்க வைக்க முடியும். இந்த காலத்தில் குளிர்ச்சியான உணவுகளை உட்கொள்வதையோ, உடலை நன்கு குளிர்விக்கும் விடயங்களையோ தவிர்க்க வேண்டும். உடலின் சூட்டை விட அதிக சூடு தரும் வகையில் நெருப்பை பயன்படுத்தாது சற்று விலகியிருத்தல் வேண்டும். மாதவிடாயின் முதல் நாள் தொடக்கம் மூன்று நாட்களுக்கு இந்த சூடு வெகுவாக இருக்கும். சூடு இழக்கப்படும் போது குறையும் போது உடல் மேலும் சூட்டினை உருவாக்கப் பாடுபடும் அப்போது அதிக வலி, களைப்பு, சோர்வு என்பன ஏற்படும்.

எனவேதான் அதிக காற்றுப்படாமல் அமைதியாக ஒரு இடத்தில் ஓய்வாக அமரச் சொன்னார்கள். முக்கிய விடயமாக வெப்பத்தின் தன்மை தொடுகை மூலமாக கடத்தப்படும். மனிதர்களையோ, தாவரங்களையோ, உலோகங்களையோ தொடும்போதும், வெறும் தரையில் அமர்ந்திருக்கும் போதும் வெப்பம் கடத்தப்பட்டுவிடும். இந்த வெப்பம் சாதாரண நிலையில் இருக்கும் பிறரை தாக்குவதுடன் மென்மையான மலர்கள், செடிகளைக் கூட சோபை இழந்து சோர்ந்து போகச் செய்துவிடும். இதனால் வெப்ப இழப்பு ஏற்பட்டு மாதவிடாய் ஆன பெண் பாதிக்கப்பட்டு சோர்ந்து போவாள். அது தவிர உடலினுள் நடக்க வேண்டிய வேலைகளிலும் இடையூறு ஏற்படும். வேறு வேலைகள் செய்யும் போது அந்த வேலைகளுக்கான சக்தி இழப்பு மற்றும் பிற அங்கங்களுக்கான இரத்த ஓட்டம் அதிகளவு இடம்பெற வேண்டியதால் செய்யப்பட வேண்டிய சுத்திகரிப்பு சரிவர இடம்பெறாமலே போய்விடும்.

எனவேதான் ஓரிடத்தில் ஓய்வாக இருந்து உடலில் கவனத்தை செலுத்தி ஆரோக்கியமாக வாழச் செய்தனர்.

ஆலயங்கள் அமைக்கப் படும் போது அதிக கதிர்வீச்சுக்களை பெற்று பயன் பெறுவதற்கான முறையிலேயே அடித்தளம், கூரை போன்றன அமைக்கப் படுகின்றன. அதிகப்படியான எண்ணங்கள் ஒன்று குவியும் புள்ளியும் ஆற்றல் பெற்று தெறிப்படைந்து விரிவடைகின்றன. பொதுவாக சாதாரண நாட்களை விட மாதவிடாய் காலங்களில் பெண் அதீத சக்தியோடு விளங்குவாள். அவளது வெப்ப அலைகள் அவளது சூழலில் ஆதிக்கம் புரியும். மேலதிக கதிர்வீச்சுக்களை அவளது உடல் தாங்காது எதிர்வினை புரியும். இக் காலத்தில் சாதாரண வழிபாடு தியானங்களை அமைதியாக மேற்கொள்ள முடியும். இவை தவிர பெண் இந்நிலையில் தீண்டத்தகாத கீழானவளில்லை.

இன்று ஓய்வின்றி உழைக்கும் பெண்களை உதாரணம் காட்டுவோர் அப்பெண்கள் மருந்தும் ஊசியும் என தம் பெண்மையை காத்துக்கொள்ள போராடுவதை அறிவதில்லை. கருப்பை நீர்க் கட்டிகள், முறையற்ற மாதவிடாய், கருமுட்டை உருவாகுவதில் சிக்கல், கருப்பை கீழிறக்கம் மற்றும் பலவீனம், கருக்குழாய் அடைப்பு அல்லது சுருங்கிப்போதல், கரு கலைந்து போதல், குறைப்பிரசவம், வயிற்றை வெட்டி குழந்தையை வெளியெடுத்தல், இளமைப் பருவத்திலேயே மாதவிடாய் சுழற்சி நின்று போதல் என இவற்றில் ஒன்றேனும் இன்று வீட்டிற்கு வீடு நிகழ்கிறது.

இவற்றிற்கான ஒரே அடிப்படை பெண்மை சரியாக இயற்கை முறையில் பராமரிக்கப்படவில்லை என்பதே.

பூப்புனித சடங்கின் அடிப்படையே பெண்மை பாதுகாக்கப்பட வேண்டியதை சொல்லிக் கொடுக்கும் முறையே அன்றி வெறும் ஆடம்பரமல்ல.

தொடர்ச்சி 14 பக்கம்



13 ம் பக்கத் தொடர்ச்சி

## வீட்டுக்குத் தூரமாகும்...

ஆதி காலத்தில் இந்தமாதிரியான தருணங்களில் பெண்களை காட்டு விலங்குகளிடமிருந்து பாதுகாக்க ஓரிடத்தில் பத்திரப்படுத்தி ஓரிரு ஆயுதங்களை தற்பாதுகாப்பிற்காகவும் அருகில் வைப்பார்கள். ஒரு உலக்கையினை குறுக்கே போட்டு வெளியில் உலாவாதே என கூறுவர். இரத்த வாடைக்கு பல தொலைவிலிருந்தே கொடிய மிருகங்கள் கவரப்பட்டு வந்துவிடலாம் என்ற முன் எச்சரிக்கை மரபுவழி கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. நவீன மருத்துவம் ஒத்துழைத்தாலும் தன் துணையோடு கூடுதலும் உடலில் பல்வேறு எதிர் விளைவுகளை ஏற்படுத்தும். அது தவிர அதிக மகிழ்வு, துக்கம் போன்றவற்றால் அதிக குருதி இழப்பு ஏற்படும் எனக் கருதி மங்கல நிகழ்வு மற்றும் இறப்பு வீடு போன்றவற்றிற்கும் அழைத்து செல்லப்படாமல் உணர்வில் அமைதியை கடைப்பிடிக்கும் சூழலில் சுகமாக பராமரிக்கப்பட்டாள் பெண். மாதத்தில் மூன்று நாட்கள் இந்த அமைதி அவளின் மொத்த பெண்மையையும் பாதுகாக்கக் கூடியது. உடல் தன்னைத்தானே சரிப்படுத்திக் கொள்ளும் ஆற்றலோடுதான் படைக்கப்பட்டிருக்கிறது. அதற்குத் தேவை அதன் வேலையில் குறுக்கிடாமல் இருப்பதே.

இக்காலத்தில் சிறு பெண் பிள்ளைகள் கூட அனாவசியமாக மாதவிடாய் பிந்தி வருவதற்காகவோ முந்தி வருவதற்காகவோ மருந்துகள் எடுத்துக் கொள்கின்றனர். அதனை பெற்றோரே வாங்கிக் கொடுக்கும் பரிதாபம் என்னவென்பது? உடல் இதற்காகவே பல நாட்கள் தயாராக வேண்டியுள்ளது. அதன் இயக்கத்தில் விளையாடி அதன் எதிர் விளைவுகளை காத்திருந்து அனுபவித்து கதறுவதை விட தடுக்காது இயற்கையோடு ஒன்றிக்கப் பழக வேண்டும். இப்படி கொள்வனவு இருக்கும்வரை புதிது புதிதாக பல விதமாக மருந்துகள் பக்க விளைவுகளை இலவச இணைப்பாகக் கொண்டு வணிக நிறுவனங்களில் வந்துவிடும்.

விளையாத நிலம் என்று ஏது? அந்தந்த நிலத்தின் தன்மைக்கு ஏற்ப அங்கு ஏதோ விளையத்தான் செய்கிறது. நிலம் பண்பட்டு இருந்தாலே அங்கு வளரும் பயிர் தரமானதாக வளரும். சித்தர்கள் பாடலில் சொல்லியுள்ளார்கள் மலடு என்பது பெண்ணுக்கு இல்லை. எந்த நிலமும் பொய்ப்பது இல்லை. அது பண்படுத்தப்பட்டால் போதும். அதற்கு மேற்குறிப்பிட்ட விடயங்களைவிட அடிப்படையாக விளங்குவது உணவுப்பழக்கவழக்கம். இன்று உணவே வணிகமயமாக்கப்பட்டு பெரு விழைச்சலுக்காக மரபணு மாற்றம் பெற்று விட்டது. பார்வைக்கு அழகாகவும், பெரியதாகவும், விதைகள் அற்றதாகவும் இருப்பதனால் கையாள்வதற்கும், உண்பதற்கும் இலகுவாக இருப்பதனால் அதனையே விரும்பி வாங்கும் நடுத்தர , உயர் வர்க்கத்தினரையே மேற்சொன்ன பாதிப்புக்கள் அதிகம் ஆக்கிரமிக்கின்றன. இயற்கையோடு ஒன்றித்து வாழ்பவர்கள்தான் தம் இயற்கைத்தன்மையினை பாதுகாத்துக் கொள்கின்றனர். விதைகளற்ற காய்கறி, பழங்கள் என்பன மூலம் புதிய தாவரத்தையே உருவாக்க முடியாத போது தவரங்களிலிருந்து சத்தாகி, இரத்தமாகி, வித்தாகும் இவ்வகையான உணவுக்கு எப்படி படைப்பாற்றல் இருக்கும்? எனவே சிரமம் இருந்தாலும் உண்பதற்கு நுணுக்கமாக முக்கியத்துவம் கொடுத்து இயற்கையோடு முரணாகாத விளைச்சல்களை உட்கொள்ள வேண்டும். விதை உள்ள பழங்கள், காய்கறிகளை இனியேனும் தவிர்க்காது பயன்படுத்தப் பழக வேண்டும்.

பெண்ணின் உடல் மட்டும்தான் மாதாந்தம் சுத்திகரிக்கப்பட வேண்டுமா? அவளுக்கு மட்டுமே அத்தகைய நாட்களில் ஓய்வு வேண்டுமா? எனத் தோன்றினால்.. ஆம்! அது இயற்கையின் கட்டளை. பெண்ணின் வயிற்றிலேயே மற்றுமொரு உயிர் உருவாக்கம் பெறுகிறது. அடுத்த தலைமுறையினை சரிவர உருவாக்குவதற்கு இயற்கை உருவாக்கிய விடயங்கள் இவை. இவற்றில் அந்தப் பெண்ணே இடையூறு ஏற்படுத்தியோ, ஒத்துழையாமல் போவாளோ ஆயினும் அதற்கான எதிர் விளைவுகளை சகிக்க வேண்டியதுதான். (மலரினும் மெலியது, புயலினும் வலியது பெண்மை.)





**நேரத்திற்கு கிடைத்த பரிசு!**

15.09.2019 நடைபெற்ற வெற்றிமணி விழாவிற்கு முதல் வந்த 100 பார்வையாளர்களில் இறுதி வரை இருந்தவர்களில் எழுத்தாளர் கௌசி சிவபாலன் தெரிவு செய்யப்பட்டு 100 யூரோ பரிசை பெற்ற அதிஷ்டசாலியானார்.



# சினிமாவிற்குப் போன கார்



சுருதி



"சார்... உங்களுடைய காருக்கு சினிமாவில் நடிக்க சான்ஸ் ஒண்டு கிடைச்சிருக்கு. சம்மதமா?" சினிமாத்துறையைச் சார்ந்த ஒருவர் சாந்தனிடம் ரெலிபோனில் கேட்டார். சாந்தனின் உற்ற நண்பன் ஒருவன் மூலம் இந்த வாய்ப்பு சாந்தனுக்குக் கிட்டியது.

சாந்தன் சுற்றுலாப் பயணிகளை தனது காரில் சுற்றிக் காண்பிப்பவன். கிலோமீட்டருக்கு 15 ரூபாய்கள் வீதமும், ஒரு நாளைக்கு குறைந்தது நானூறு கிலோமீட்டர்களுக்கு மேல் பயணம் செய்வீர்களாயின் சாரதிக்கான உதவித்தொகை 300 ரூபாய்களும் அவனுக்குக் கொடுக்க வேண்டும். காருக்கான எரிபொருள், மற்றும் அவனுக்கான சாப்பாடு தங்குமிட வசதிகளை அவனே பார்த்துக் கொள்வான். சராசரியாக நாளொன்றிற்கு 5000 ரூபாய்கள் உழைப்பான்

"சார்... இந்தத் திரைப்படம் மூலம் நீங்கள் பேரும் புகழும் அடைந்துவிடுவீர்கள். கிலோமீட்டருக்கு உங்களுக்கு நாங்கள் 50 ரூபாய்கள் தருவோம். சாப்பாடு இலவசம். என்ன சொல்கின்றீர்கள்?"
ஹபேரும் புகழும்' யார்தான் விரும்பமாட்டார்கள். அத்துடன் குறைந்த நேரத்தில் கூடிய வருமானம்.
"ஐயா.... எத்தனை நாள் படப்பிடிப்பு?"

"படப்பிடிப்பு பல நாட்கள் நடக்கும். நீங்கள் உங்கள் காரை ஐந்து நாட்கள் கொண்டுவந்தால் போதும்."
சாந்தன் உடனே ஓம் சொல்லிவிட்டான். படப்பிடிப்பு அவனது வீட்டிற்கு அருகாமையில் இருப்பதால் ஒருகிழமை மனைவி பிள்ளைகளுடன் தங்கலாம். நெடும் தூரமெல்லாம் அலையத் தேவையில்லை என்ற மகிழ்ச்சி அவனுக்கு.

படப்பிடிப்பு அன்று சாந்தனிடம் ஒரு படிவத்தைக் கொடுத்து கையெழுத்துப் பெற்றுக் கொண்டார்கள். படத்தின் தலைப்பு கோயில் உண்டியல். சாந்தனின் காரின் இலக்கத் தகட்டிற்கு மேல் `எட்றா வண்டிய' என்று எழுதப்பட்ட புதிய இலக்கத்தகட்டை ஒட்டினார்கள். இது போதாதா சாந்தனுக்கு. மனம் மகிழ்ச்சி வெள்ளத்தில் `எட்றா.... எட்றா' என்று எகிறியது.

காட்சி இதுதான்: மயிர்க்கூச்செறியும் சண்டைக்காட்சி. முன்னாலே ஒரு லொறி போகும். அதற்குள் வில்லன் மற்றும் அடியாட்கள் முரண்டு பிடித்துக்கொண்டு நிற்பார்கள். பின்புறமாக இவனது கார் அவர்களைத் துரத்தும். இவனது காரில் கதாநாயகன். கதாநாயகன் சுமார் ரகம். சாந்தனுக்கு ஒப்பனைகள் பல செய்து, கதாநாயகனுக்கு அருகில் இருப்பதற்குத் தோதாக விகாரமாக மாற்றியிருந்தார்கள்.

## குறும்கதை

ஒரு குறுகிய தூரத்தில் பல தடவைகள் மீண்டும் மீண்டும் படப்பிடிப்பு நடத்தப்பட்டது. தயாரிப்பாளருக்கு திருப்தி ஏற்படும் வண்ணம் பல தடவைகள் `டேக்' எடுக்கப்பட்டன.

கார் புறப்பட்டதும் "/பாஸ்ரர் ∴பாஸ்ரர்..... விரைவாக விரைவாக" என்று கத்துவார் தயாரிப்பாளர்.

கார் புகை கக்கி, இடி விழுந்தது போலச் சத்தமிட்டுப் பாய்ந்து செல்லும். ஒரு குறிப்பிட்ட தூரத்தில் ஒரு பாலம் இருந்தது. லொறி பாலத்தை அண்மித்ததும், இரண்டு வாகனங்களும் சம வேகத்தில் போக வேண்டும். அப்புறம் சண்டை ஆரம்பமாகும்.
சண்டையின் உச்சக்கட்டத்தில் வில்லன், சாந்தனின் கார் பொனற் மீது குதித்துப் பாய்ந்து பாலத்திற்குள் விழுந்து தப்பி ஓடுவான்.

முதல்நாள் படப்பிடிப்பின் பின்னர் கார் ஒரு கிலோமீட்டர் தன்னும் நகர்ந்திருக்காததை அவதானித்தான் சாந்தன், நூறு மீட்டர்கள் தூரத்தில் படப்பிடிப்பு நடந்ததால், அதற்குள்ளேயே கார் குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓடியது. ஆனால் பெற்றோல் முற்றாகத் தீர்ந்து போயிருந்தது. பலத்த நட்டம் வரப்போகின்றது என்பதை உணர்ந்தான் சாந்தன். இருப்பினும் பொறுமை காத்தான்.
இரண்டாவது நாள் வில்லன், சாந்தனின் கார் பொனற் மீது குதித்து உக்கிரமாகப் போரிட்டான். அவனது பாரத்தைத் தாங்க மாட்டாமல் பொனற் சுருங்கிக் கடதாசி போலாகிவிட்டது.
அன்றைய படப்பிடிப்பு முடிந்த பின்னர் தயாரிப்பாளருக்கு தனது முறைப்பாட்டைத் தெரிவித்தான் சாந்தன். தயாரிப்பாளர் சாந்தன் கையெழுதிட்ட பத்திரத்தைத் தூக்கி நீட்டினார். அவனுக்கு அதில் எழுதியிருந்த ஒன்றும் புரியவில்லை. சாந்தன் தன்னை ஒழுங்கு செய்த நண்பனிடம் தொடர்பு கொண்டபோது, அவனைப் பிடிக்க முடியவில்லை.

ஐந்தாவது நாள் படப்பிடிப்பு முடிந்ததும், பேசிக் கொண்டபடியே சாந்தனுக்கு சம்பளம் கிடைத்தது. மொத்தமாக ஓடிய நான்கு கிலோமீட்டர்களுக்கு 200 ரூபாய்களும், போனஸ் பணமாக 100 ரூபாய்களும் கிடைத்தன. பெற்றோல் செலவு போக, அந்த வாரம் அவன் 180 ரூபாய்கள் உழைத்திருந்தான். கூடவே சுருங்கிப் போன `பொனற்', அறுந்து தொங்கிய ஹைசைலென்சர்'.

முன்பே நினைத்திருந்தபடி தனது குலதெய்வத்திடம் சென்றான். "பொனற் திருத்த, சைலென்சரைத் தூக்கிக் கட்ட எங்கே போவேன்?" கடவுளிடம் முறையிட்டான். திரைப்படத்தின் தலைப்பு அவனைப் பயமுறுத்தியது. `கோயில் உண்டியலில்' எண்பது ரூபாயைப் போட்டுக் கொண்டான்.

"பயப்படாதே! படத்தின் எழுத்தோட்டதில் வரும் வாகன ஓட்டுனர்கள் பட்டியலில் உன் பெயரும் இடம்பெறும்" என ஒரு அசரீரி அவனுக்குக் கேட்டது.




வாகனச் சாரதி பயிற்சி நிலையம்
HK Hammacher
Fahrschule- hk- hammacher.de
எமது இணையத்தளத்தை பார்க்கவும்
ஆங்கிலம்,யேர்மன்,பிரஞ்,துருக்கி மொழிகளில்
வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.
19 வருட சிறந்த அனுபவம்
தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651
MPU
ASF
FES
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
**பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!**
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம்
மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும்
நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ
ஆயத்தமாக உள்ளளோம்
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
www.Nandys.de
e.mail:info@nandys.de

Frankfurt நகரில்....

# Jaffna Bazar

## அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

உங்கள் பழைய நகைகளைத் தந்து
2019 ஆண்டின் புதிய டிசைன் நகைகளைப் பெறுங்கள்!

தங்க நகைகள்
தரமானவை மட்டும்
என்றும் எம்மிடம்
கிடைக்கும்






உங்கள் இல்லத்திற்கு தேவையான அனைத்து
மளிகைப்பொருட்களும் பசுமையான
மரக்கறி மற்றும் கடல் உணவு வகைகளும்
நம்மிடம் கிடைக்கும்
வாருங்கள் தாயகத்தில் நிற்கும் உணர்வை
நீங்கள் பெறுவீர்கள்

Kaiser Straße.49
69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353
e.mail:jbspiece2018@yahoo.com

0049 69 25626353
0049 179 4792961
0049 151 71520425

# Effects of Cinema on Tamil Society



In this fast-moving corporate world today one can watch films anytime anywhere, even for 24 hours. Cinema has good and bad effects. In this article the good and bad effects of cinema on Tamil society in Sri Lanka is discussed. Tamil films were at first produced based on the 'Ithikasa', 'Puranas' and Sangam Tamil Literature. Those films reemphasize the socio, political, economic, religious and other unique values of the Tamil culture. The story, theme, actors, acting, and various other aspects in a film made the audience believe in the earliest Tamil literature the religious principles and human and cultural values of the Tamils. The category of Bhakti films induced more devotion to Gods. The songs written for these films are still sung at temples, broadcast during festival times, used for Kaavady aatam during festivals and rendered through nadhaswaram, violin, veena and flute. Those who followed other religions too enjoy these films. Today the film industry has grown fast and tremendously in using hi technology.



The Tamil film industry has access to the world cinema telecasts. They have produced many award-winning films too. The themes of these films vary from time to time according to the audience and the changing world.

The children at home have access to TV and computers. Even though admission to a movie be restricted by a motion picture rating system, typically due to depictions of sex, nudity or graphic violence mobile phones have all the applications that are found in a computer and children develop the habit of watching any films they want at home easily. Watching films without anybody's control has severely damaged the studies of the children and exposed them into dangerous zone. They watch films until 2a.m. and go to sleep after that. Nowadays we all know how the rays that come from the phones', computers' and TVs' damage once eyesight, brain and hearing ability. Majority of the children and adults ignore their own activities and sit in one place without any physical activities.




Bavvatharani Ravindran
Nallur

During the latter part of the twentieth century films were projected on themes such as robbery, raping, thuggery etc. Later they were based on misleading friends, abandoning friendship due to bad association, killing, murdering and drug transport for hire. Now the trend is not obeying parents and siblings. The cinema has very much influenced all the people leaving the parents lament and running away from homes, finding their own partners and spoiling their future. Ill-treating parents and siblings. Most of the films are based on themes such as abusing wives, husbands or relations. Others focus on the transmission of others culture. Mocking the religious, cultural social values and venturing on new type of life which attracts young generation.

The latest films are concentrating on superstitions, possessed men women and children and disturbs the immature and young children after watching such films the audience develop fear and anxiety.

Many of the films that are shown today induce the thirst for money and assets. It has become a common phenomenon. And it misleads some people to use swords, knives and murder others to grab gold and money in the cinema style.

The young generation is not rooted in their religious and culture. They waver. For them changing religion and culture is simple and they have their interpretations.






Through Cinema we learn the good things too. Good Cinema connects humanity through collaborative film experiences that integrate community matters and a path to a good impact. They show beautiful places temples and ways of leading a peaceful life through films. The songs in Tamil cinema is a mixture of good and bad values. While presenting orthodox families, cultural norms and hereditary human and other values they portray the changing society.

The education cultural values are the image of a good Tamil civilian is deteriorating all over the world due to various causes. But in the eastern part of the world the temples, parents, grandparents and even schools are unable to control the youth who are losing the belief in Tamil culture and its values. A film, in my opinion, doesn't have to please the audience but leave a good impact/message to them.




சோஸ்ற் தமிழ்க்கல்வி கலாசார அமைப்பு
TamilischerSchul-undKulturverein Soest e.V
வழங்கும்
**கண்காட்சியும்,கலைநிகழ்வும்.**

**26.10.2019 சனிக்கிழமை**
கண்காட்சி 11.00 மணியிலிருந்து
19.00 மணிவரை
கலை நிகழ்வு 15.00 மணியிலிருந்து
19.00 மணிவரை
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

இடம் Blauer saal im Rathaus- 1
**59494 Soest**
kontakt 004915150611964; indu.tsk@gmail.com
www.tsk-soest.com


நமது தயாரிப்புக்கள் தற்போது யேர்மனியில் கிடைக்கும்
Aachi
The Mother of Good Taste
Experience the Tongue Tickling Taste!
Bring home an Indian Traditional Taste & Quality Blended Spices
CHICKEN CURRY MASALA
More than 200 products specially and Carefully blended just to spice up your life!
SAMBAR POWDER
RASAM POWDER
MUTTON CURRY MASALA
FISH CURRY MASALA
அனைவருக்கும் எங்கள் இனிய
தீபாவளி நல் வாழ்த்துக்கள்
Distributed by: BTM INTERNATIONAL UK.LTD
பாரம்பரிய சுவையின் இருப்பிடம்
Marketed by: BTM INTERNATIONAL UK LTD., 80 Goodhall Street, Park Royal, London NW10 6TS
Tel.: 02089611555 / 02089615522, email: info@btmint.com | www.btmint.co.uk
KOSHER
ஆச்சரியமூட்டும் ஆச்சியின் கைப்பக்குவம் !!!
BTM
JACK MACKEREL
IN NATURAL JUICE WITH SALT ADDED
Rich in Omega 3
Taste of the Paradise
Mackerel in brine
BTM International UK Ltd
80 Goodhall Street, Park Royal,London NW10 6TS
United Kingdom
www.btmint.com e.mail: info@btmint.com
as products are available in Star impex
HAPPY diwali
Star Impex
Asia & Afro Großhandel / Einzelhandel
Kipper Str.03 44147 Dortmund Germany
Tel: 0231 860 26 96
e.mail:star-impex@live.de

## யேர்மனியில் தமிழர் தெருவிழா - அது எதிர்காலத்தில் தமிழர் பெருவிழாவாக மலரும்!









கடந்த 07.09.2019 சனிக்கிழமை டோட்முண்ட் நகரில் தமிழர் தெருவிழா 2019 வெகு சிறப்பாக நடைபெற்று முடிந்தது. தெருவிழா நடைபெறும் பகுதியின் அளவு அதிகரிக்கப்பட்டிருந்தது. விழா நடைபெறும் இடத்திற்குஅண்மையில் இருந்த கடைகள் மலிவு விற்பனையை அறிவித்திருந்தார்கள். அதனால் அந்தப் பகுதியிலும் பெரும் மக்கள் வெள்ளம் காணப்பட்டது. ஆயினும் மேடைக்கு முன்னால் இடையிடையே சன நெருக்கடி ஏற்பட்டபடி இருந்தது.

தொடர்ச்சி 26 ம் பக்கம்

## வேலையும் வீடும்



றஜினா
தருமராஜா

புலம்பெயர் நாடுகளில் வாழும் நாங்கள் அனைவரும் வேலைகளுக்குச் செல்பவர்கள். அவர்களில் சிலர் வேலையும் வீடுமாய் இருப்பார்கள். அதிகமாக மற்றவர்களுடன் பழகாதவர்கள் தானே இப்படி இருப்பார்கள். அல்லது பலருடன் பேசுபவர்களும் கூட வேலை கஷ்டத்தில் வீட்டுக்குச் சென்று விடுவார்களோ? அப்படி வீடு செல்பவர்களின் வாழ்க்கையில் சலிப் புத்தன்மை வந்துவிடுமல்லவா.

ஒரே விடயத்தை தினமும் செய்யமுடியாது தானே. ஆகவே இவர்கள் உடற் பயிற்சி செய்தால் உடலுக்கும் மனதிற்கும் நன்மை கிடைக்கும்.

இவர்கள் வெளியுலகம் தெரியாமலே இருந்து விடுவார்கள். குறிப்பிட்ட வட்டத்துக்குள் இருக்கும் இவர்களுக்கு பிரச்சினைகள் வந்து சேர்வதில்லை ஆனால் பிறருடன் பழகும் வாய்ப்பு குறைவாக இருக்கிறது.

இன்னும் சிலர் வேலைக்கும் சென்று ஓய்வு நேரங்களில் பொதுநல வேலைகள் செய்து வருகிறார்கள். இதில் கிடைக்கும் ஆத்ம திருப்திக்குச் சொல்ல வார்த்தைகள் இல்லை. இவர்கள் மற்றவர்களுக்கு தொண்டு செய்து வரு கிறார்கள். வேலை முடிந்த பின் வேறு இடங்களுக்குச் செல்லும் போது மனதில் ஆறுதலும் சந்தோசமும் உண்டாகின்றது.

நாங்கள் இவ்வுலகில் பிறந்தோம் வளர்ந்தோம் என எண்ணாமல் பிறருக்காக நாம் என்ன செய்தோம் என்று நினைக்க வேண்டும்.

நீங்கள் ஒரு நாள் அல்ல இரு வாரங்கள் என்ன என்ன செய்தோம் என ஒரு குறிப்பு எழுதுங்கள். பின் அந்தக்குறிப்பை இரு வகையாகப் பிரியுங்கள்.
ஒன்று

குருடனும் முடவனும்
சிற்பம்: கண்ணா



உங்கள் குடும்பம் மகிழச் செய்தவை ஒருவகையாகவும் , பிறர்மகிழ நீங்கள் செய்தவை இரண்டாவது வகையாகவும் பிரியுங்கள்.

எதில் அதிகம் உங்கள் நேரம் செலவு செய்யப் பட்டது என பார்க்கவும்.
முதலாவது நிச்சயமாக இருக்கும். அது குடும்பம் அது தப்பே இல்லை

இரண்டாவது பிரித்ததைப் பாருங்கள்
பிறருக்காக செய்தவையாக இருந்தால்
அது மகிழ்சிக்குரியது.

முதலாவது உங்கள் கடமை. அது குடும்பத்திற்கு செய்வது. இரண்டாவது அது சேவை பிறருக்கு செய்வது.
கடமை சேவை இவற்றை பகுத்து அறிந்து கொண்டால் கரும்பில் அடிக்கரும்பல்ல நுனிக் கரும்பும் இனிக்கும். வாழ்வின் தன்மை புரியும்.

வீடு வாசல் மனைவி மக்கள் இதற்கப்பால் ஒரு உன்னதமான இடத்தை சேவையுள்ளம் பெற்றுத் தரும்.

வீடும் வேலையும் என்று மட்டும் வாழாது வாழ்வை மலரவைப்போம்.



# தன்னை அறிவாளியாகக் காட்ட மனிதன் என்னென்ன செய்கிறான்!

சேவியர்




ஓவியம்: கண்ணா

ஏன் ? என்ற கேள்வி இங்கு கேட்காமல் வாழ்க்கை இல்லை ! எனும் பாடல் எப்போதும் என்னை வசீகரித்துக் கொண்டே இருக்கிறது. எதைக் குறித்து சிந்தித்தாலும் இந்தப் பாடல் வரிகள் என் மனதில் முந்திக் கொண்டு வந்து ரீங்காரமிடுகின்றன.

ஒரு மனிதன் தன்னை அறிவாளியாகக் காட்ட மெனக்கெடுகிறான் என்பதைச் சிந்தித்த போதும், "ஏன் ?" எனும் கேள்வி வந்து மனதில் அமர்ந்தது. அந்தக் கேள்வியுடன் கொஞ்ச நேரம் உரையாடினேன். கிடைத்த முதல் பதில் "பிறருடைய அங்கீகாரம்" என்றது.

பிறர் என்ன நினைப்பார்கள் ? பிறர் முன்னிலையில் நமது பெயர் கெட்டுப் போய்விடுமோ ? நமக்குத் திறமை இல்லை என பிறர் நினைப்பார்களோ ? நாம் அவமானப்பட்டு விடுவோமோ , எனும் கேள்விகள் தான் ஒரு மனிதன் தன்னை அறிவு ஜீவியாகக் காட்ட முக்கியமான காரணங்கள். அது ஒரு வகையில் தாழ்வு மனப்பான்மையின் வெளிப்பாடு. "பிறர் என்ன நினைத்தாலும் கவலையில்லை, நான் என்னுடைய இயல்பிலிருந்து மாற மாட்டேன்" என நினைப்பவர்கள் தங்களை அறிவு ஜீவிகளாய்க் காட்டிக் கொள்வதில்லை.

ஒரு சிங்கம், தான் காட்டுக்கு ராஜா என கர்ஜித்துத் திரிய வேண்டியதில்லை. அதன் இயல்பிலிருந்தே அதை அறிந்து கொள்ளலாம். ஆனால் ஒரு நரி தன்னை சிங்கமாகக் காட்டிக் கொள்ள வேண்டுமெனில் நிறைய மெனக்கெட வேண்டும். ஆனால் அது எந்த அளவுக்கு வெற்றி பெறும் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். மழை பெய்யும் போது சாயம் விலகும். நிறத்துக்குள் ஒளிந்திருக்கும் ஓநாயின் உண்மை வெளிப்பட்டே தீரும். அப்போது இயலாமையுடன் சேர்ந்து அவமானத்தையும் அணிந்து கொள்ள வேண்டிய சூழல் ஏற்படும்.




என்னுடைய அலுவல் வாழ்க்கையில் ஏராளமான போலி அறிவு ஜீவிகளை சந்தித்திருக்கிறேன். முதல் சந்திப்பில், "வாவ்" என வியந்து போவோம். பழகப் பழக அவர்களுடைய உண்மை இயல்பு வெளிப்படத் துவங்கும். எவ்வளவு நாள் தான் முலாம் பூசப்பட்ட நகைகள், தங்கம் என தங்களைச் சொல்லித் திரிய முடியும் ? உரசும் போது உண்மை வெளிப்பட்டுத் தானே ஆகவேண்டும்.

உதாரணமாக, ஒரு மீட்டிங்கிற்குப் போகிறோம் என வைத்துக் கொள்ளுங்கள். சில போலி அறிவு ஜீவிகள் நிச்சயம் இருப்பார்கள். அவர்கள், "காக்கா கருப்பாக இருக்கிறது" என்று நேரடியாகச் சொல்ல மாட்டார்கள். அப்படிச் சொல்கின்ற நேரடிச் செய்திகள் தங்களை அறிவாளியாகக் காட்டாது என தவறாக நினைப்பார்கள். உண்மையில், உலகத்தின் மாபெரும் அன்புப் புரட்சியை உருவாக்கிய இயேசுவின் வார்த்தைகளே எல்கேஜி பிள்ளைகள் படித்து புரியுமளவுக்கு எளிமையானதாய் தான் இருக்கும். இவர்களோ ஒரு செய்தியை எப்படி சுற்றி வளைத்து சொல்லலாம் என நினைப்பார்கள்.

உதாரணமாக, இந்த காகத்தின் நிறத்தைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்க்கும்போது இவை வெளிச்சத்துக்கு எதிரான நிறமாகவும், நிழலுக்கு அருகாமையிலுள்ள நிறமாகவும், இரவில் விழுந்தால் தேடி எடுக்க முடியாத நிறமாகவும் இருக்கும். என்பார்கள். "காக்கா கருப்பு" ந்னு சொல்லிட்டு போக வேண்டியது தானேப்பா,என நாம் நினைப்போம். ஆனால் அவ்வளவு எளிதாக அவர்கள் சொல்ல மாட்டார்கள்.

அதே போல ஒரு உரையாடலில் கலந்து கொள்ளும் போது அதைப் பற்றி மேலோட்டமாக நான்கைந்து செய்திகளைப் படித்திருப்பார்கள். அதை அப்படியே மனசில் குறித்து வைத்துக் கொள்வார்கள். உரையாடலில் ஒரு எழவும் புரியாவிட்டால் கூட, "இது நல்லா இருக்கு.. இதே போல நெதர்லாந்துல 2017ம் ஆண்டுல .." என ஆரம்பித்து ஒரு செய்தியை போடுவார்கள். அது பல வேளைகளில் தேவையற்ற இடைச்சொருகலாக இருக்கும். அப்போது கேட்பவர்களெல்லாம், "ஓ.. இவனுக்கு உலக விஷயம் நிறைய தெரிஞ்சிருக்கு" என நினைப்பார்கள்.

## வாக்குவாதம் செய்யாதீர்கள் அதில் எந்தப்பலனும் கிடைக்கப்போவதில்லை!

இடத்துக்கு தக்கபடி இவர்கள் நிறைய உதாரணங்களை அள்ளித் தெளிப்பார்கள். கணினி சார்ந்த மீட்டிங் எனில் அது சார்ந்த நபர்களை இழுப்பார்கள். "பார்பரா லிஸ்கோவ்" மட்டும் இல்லேன்னா இன்னிக்கு நாம இந்த மென்பொருள் பற்றி பேசிட்டிருக்க மாட்டோம். நாம சாதாரணமா இருக்கக் கூடாது, கைடோ வேன் ராஸ்ஸம் மாதிரி ஒரு மாற்றத்தை உருவாக்குபவரா இருக்கணும் என ரெண்டு பிட்டு சேர்த்துப் போடுவார்கள். "வாவ்... பெரிய ஆளுதான்பா இவன்" என மக்கள் புருவத்தை உயர்த்துவார்கள்.

அதே போல ரெடிமேட் செட் பொன்மொழிகளை சுருக்குப் பையில் வைத்திருப்பார்கள். கார்ல் மார்க்ஸ் என்ன சொன்னார் தெரியுமா ? சார்லஸ் பேபேஜ் என்ன சொன்னாரு தெரியுமா ? சேக்ஸ்பியர் என்ன சொன்னார் தெரியுமா ? என அவர்கள் எப்போதாவது இருமிய விஷயத்தையோ, பொருமிய விஷயத்தையோ சபையில் வைப்பார்கள். அவசரத்துக்கு நாலு பழமொழிகளை கூகிளில் தேடி சுடச் சுடப் பரிமாறுவதும் உண்டு.

தொடர்ச்சி 21 ம் பக்கம்



# தன்னை அறிவாளியாகக் காட்ட மனிதன் என்னென்ன செய்கிறான்!



சேவியர்

என்னது ? ஸ்டீவன் கோவேயுடைய 7 ஹேபிட்ஸ் ஆ·.ப் ஹைலி எ·.பக்டிவ் பீப்பிள் புக் படிச்சதில்லையா ? கண்டிப்பா படிங்க. எப்படி மிஸ் பண்ணினீங்க. அதெல்லாம் நமக்கு ஒரு மேனேஜ்மென்ட் பைபிள் மாதிரி. அப்போ நீங்க மைக்கேல் போர்ட்டரோட புக்ஸ் கூட படிச்சிருக்க மாட்டீங்களே, படிங்க அதெல்லாம். நான் பத்து பெஸ்ட் புக்ஸோட பெயரை தரேன். அதை வாங்கி படிங்க. என படம் காட்டுவார்கள் போலி அறிவு ஜீவிகள். அந்த நூலைப் பற்றிய விமர்சனமோ, ஒரு சுருக்கமான தகவலோ மட்டும் தான் அறிந்திருப்பார்கள். மேலோட்டமான சில தகவல்களை வைத்துக் கொண்டு கதையளப்பார்கள்.

இப்படிச் செய்தால் அப்படி இருக்கலாம். அப்படிச் செய்தால் இப்படி இருக்கலாம் என்றெல்லாம் காற்றில் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பார்கள். அவர்களிடம் சென்று, இப்படி எங்காவது செய்திருக்கிறீர்களா ? வெற்றி பெற்றிருக்கிறீர்களா ? சில உதாரணங்களைச் சொல்ல முடியுமா எனக் கேட்டால் பம்முவார்கள். ஏன் சந்தேகப்படறீங்க, முயற்சி பண்ணி பாருங்க என சைடு வாங்குவார்கள். வாய்ச்சொல்லில் வீரரடி கிளியே என இவர்களை நாம் அழைக்கலாம்.

உண்மையான அறிவாளிகளைத் தனக்குத் தெரியும், அவர்களோடு பேசுவேன், அவர்களுடன் விவாதங்களுக்குச் செல்வேன் என சொல்வதன் மூலம் ஒரு நம்பிக்கையைக் கட்டமைக்க முயல்வார்கள். பேச ஆரம்பித்தால் ஒரு தலைப்பிலிருந்து இன்னொரு தலைப்புக்கு தவளையைப் போல தாவுவார்கள். தண்ணீருக்கும், தரைக்குமிடையே மாறி மாறிக் குதித்து தண்ணி காட்டுவார்கள். ஏதாவது ஒரு பொருளில் கொஞ்ச நேரம் தொடர்ந்து பேசச்சொன்னால் பதறுவார்கள்.

இவர்களுடைய பேச்சில் இன்னொரு சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், "ஜஸ்ட் மிஸ்" தான். எனக்கு அந்த விருது கிடைக்க வேண்டியது, நான் ஊர்ல இல்லாததால கிடைக்கல ஜஸ்ட் மிஸ். நான் அந்த ஆராய்ச்சிக்கு தலைமை தாங்க வேண்டியது அப்போ என்னோட மாமனாருக்கு உடம்பு சரியில்லாததால அக்ஸப்ட் பண்ண முடியல, ஜஸ்ட் மிஸ். எனக்கு டாக்டரேட் தரேன்னு சொன்னாங்க, பட்.. அந்த டைம்ல நான் அமெரிக்கால இருந்தேன், ஜஸ்ட் மிஸ். என தவற விட்ட தருணங்களின் பட்டியலே இவர்களிடம் அதிகம் இருக்கும். அதற்கு மட்டும் தானே ஆதாரம் தேவையில்லை.

அகல உழுவதை விட ஆழ உழுவது சிறந்தது என்றொரு பழமொழி உண்டு. இவர்கள் அகல உழும் பார்ட்டிகள். எந்த தலைப்பிலும் ஆழமாகப் பேச மாட்டார்கள். கல்வி விஷயத்திலும், அறிவை வளர்த்தும் விஷயத்திலும் அவர்கள் பரந்து பட்டு வாசித்துக் கடக்க வேண்டும் என்று தான் ஆசிப்பார்கள். ஒரு விஷயத்தை நுணுக்கமாய் கற்றுத் தேர்வோம் என நினைக்க மாட்டார்கள். அதற்குரிய திறமையும், பொறுமையும் அவர்களிடம் இருக்காது.

பெரும்பாலும் தங்களுக்கென ஒரு அபிப்பிராயம் தெளிவாய் இருக்காது. பிறருடைய கருத்தையோ, சிந்தனையையோ பிரதியெடுத்து பேசுவார்கள். அல்லது அதன் மையக்கருத்தை உருவியெடுத்து புதிதாய் ஒன்றைக் கட்டமைக்க முயல்வார்கள். நல்ல நாலு சர்வதேச மாத இதழ்களுக்கு சந்தா கட்டியிருப்பார்கள், அதிலுள்ள நாலு தலையங்கத்தை மனதில் வைத்திருப்பார்கள். நல்ல அழகான வார்த்தைப் பிரயோகங்களால் வசீகரிக்கப் பார்ப்பார்கள். உதாரணமாக, அவன் கூட வேலை பாக்கறது சொர்க்கத்துல இருக்கிறவங்களுக்கு நரகம், நரகத்துல இருக்கிறவங்களுக்கு சொர்க்கம். என்பார்கள். அது என்ன என்பது புரிவதற்குள் நமக்கு நாலு நாள் ஓடி விடும்.

மொத்தத்தில் தன்னை அறிவாளியாய்க் காட்ட விரும்பும் எல்லோருமே ஏதோ ஒருவகையான முகமூடியையோ, அறிவுப் போர்வையையோ அணிந்து கொள்கிறார்கள். அதெல்லாம் எதுக்கு ? உண்மையைச் சொன்னால் ஒரு பதில், பொய்மையை அழைத்தால் பதில் எத்தனை விதமாய் முகம் காட்டும் ! அதெல்லாம் நமது இயல்புகளின் மீது நாம் நம்பிக்கை வைக்காததன் விளைவே. நாமே நம் மீது நம்பிக்கை வைக்காவிடில் யார் தான் வைப்பார் ?

எனவே முதலில் நம்மை நாமே நம்புவோம். நமக்கு என்ன தெரியுமோ, அதைத் தெரியும் என சொல்வோம். எது தெரியாதோ அது தெரியாது எனச் சொல்வோம். எல்லாம் தெரிந்தவர் என எவருமே இல்லை. எதுவும் தெரியாதவர் என்றும் எவருமே இல்லை. எது தெரியுமோ அதைக் குறித்து பெருமை கொள்வோம். எது தெரியாதோ அதைக் கற்றுக் கொள்ள முயற்சி செய்வோம். அவ்வளவு தான் வாழ்க்கை.

ஆம்பல் பூ தன்னை தாமரையாய்க் காட்டிக் கொள்ளத் தேவையில்லை. ஆம்பலுக்கு ஒரு அழகு, தாமரைக்கு ஒரு அழகு. நமது இயல்புகளை ரசிப்போம், இயல்புகளை ஏற்றுக்கொள்வோம். தனது பலவீனங்களை அறிந்து அதை வாழ்வின் பாகமாக்கிய பாசிடிவ் மனிதர்களே வாழ்க்கையில் வெற்றியடைந்திருக்கிறார்கள். வெற்றிகரமான மனிதர்களுடைய வாழ்க்கையில் நிராகரிப்புகள் ஏராளம். தோல்வியடைந்தவர்களுடைய வாழ்க்கையில் போலித்தனங்கள் ஏராளம்.

நிராகரிப்புகளைப் போராடி வெல்ல முடியும், காரணம் அது நம்மேல் சுமத்தப்படுவது. போலித்தனங்களை வெல்ல முடியாது. காரணம் அது நாமே விரும்பு சுமந்து திரிவது. எனவே சுமந்து திரியும் போலித்தனங்களை இறக்கி வைப்போம். உண்மை இயல்புகளை இதயத்தில் ஏற்றி வைப்போம். அப்போது நமது வாழ்க்கை வெற்றியின் சிறகுகளில் அமர்ந்து, பிரபஞ்சத்தைச் சுற்றி வரும்.




ஷூப்பர் கலைமாலை 21.09.2019 மிகவும் விறுவிறுப்பான ஆடல், பாடல், இசை என பலதரப்பட்ட நிகழ்ச்சிகளை, பார்வையாளர்களுக்கு தந்திருந்தனர் தென்னிந்திய பிரபல வீணை வித்தகி வீணா காயத்ரி அவர்களது இசை நிகழ்ச்சி மனதைத்தொட்டது.




# ஐரோப்பாவில் வெள்ளி விழாக்கண்ட முதல் பத்திரிகை
# வெற்றிமணி யேர்மனியில் பெருவிழாவாகக் கொண்டாடியது!







படங்கள்: Konessfotos.de

யேர்மனி வூப்பற்றால் நகரில் வெற்றிமணியின் 25 ஆவது ஆண்டுவிழா 15.09.2019 அன்று மண்டபம் நிறைந்த கூட்டத்துடன் மிகச்சிறப்பாக நடைபெற்றது. மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான இவ்விழாவிலே வாழ்நாள் சாதனையாளர் விருதுகளும், வெற்றிமணி விருதுகளும், அனுசரணையாளர் விருதுகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வு வெற்றிமணி ஆசிரியர் தமிழையும், கலையையும் நேசிக்கும் பண்பையும், நன்றியுணர் வையும் தெட்டத்தெளிவாகக் காட்டியது.

வாழ்நாள் சாதனையாளர்கள் விருதை முதலில் தமிழாலயத் தந்தை அமரர் இரா.நாலிங்கம் ஐயா அவர்களுக்கு அர்பணம் செய்து அவரது புதல்வன் திரு நிர்மலன் நாகலிங்கம் அவர்கள் பெற வெற்றிமணியின் வாழ்நாள் சாதனை விருது பெற்றவர்கள்

.கம்.காமாட்சி அம்பாள் ஆலய குரு.சிவஸ்ரீ ஆறுமுக பாஸ்கரகுருக்கள், .ஈழத்தின் மெல்லிசை மன்னன் எம்.பி.பரமேஷ்,நூலகவியலாளர் என்.செல்வராஜா,சங்கீதரத்தினம் ச.பிரணவநாதன் ,அறிவிப்பாளர் சிம்மக் குரலோன் வலன்ரையின்,.வானதி நர்த்தனாய அதிபர்.கலாநிதி திருமதி.வானதி தேசிங்குராஜா.அகரம் பிரதம ஆசிரியர் த.இரவீந்திரன்.

வெற்றிமணியின் 25 ஆவது ஆண்டுவிழா மலர் கால்நூற்றாண்டு வெற்றிச் சுவடுகள் இந்நிகழ்வில் வெளியீடு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சிகளை இலண்டனில் இருந்து வருகை தந்திருந்த அறிவிப்பாளர் திருமதி. சிவகாமி விநாயகமும், வெற்றிமணியின் ஆஸ்தான அறிவிப்பாளரான சிவகுருநாதன். சக்திவேல் அவர்களும் தொகுத்து வழங்கியிருந்தார்கள்.

கலைநிகழ்வுகளுக்கு இந்தியா, கேரளா, கனடா, இலண்டன் போன்ற நாடுகளில் இருந்து கலந்து சிறப்பித்த கலைஞர்கள் புல்லாங்குழல் இசை, பரதநாட்டியங்கள், பாடல்கள், Bolly wood நடனங்கள் போன்றவற்றைத் தந்திருந்தார்கள். ஜேர்மனியில் நடைபெறுகின்ற பல பரதநாட்டியப் பாடசாலை மாணவர்களும் குழுநடனங்களைத் தந்திருந்தமை கண்ணுக்கு விருந்தளித்தது.

நிகழ்ச்சியின் நடுவே வெற்றிமணி விருது பல்துறைகளில் சிறந்து விளங்குபவர்களான வெற்றிமணி விருதுகள் வழங்கப்பெற்றன.

வெற்றிமணி ஆசிரியர் கலாநிதி. மு.க.சு.சிவகுமாரன் அவர்களைக் கௌரவிக்கும் முகமாக ஆதரவாளர்கள், எழுத்தாளர்கள், உறவினர்கள், அவரையும் அவர் மனைவி குடும்பத்தினரையும் ஆரத்தி எடுத்து மலர் மாலை மரியாதையுடன் மண்டபத்தில் இருந்து அரங்கிற்கு அழைத்துவந்த நிகழ்வு கண்கொள்ளாக் காட்சியாகக் காணப்பட்டதுடன் மனதுக்கு மகிழ்ச்சியாகவும் இருந்தது. வெற்றிமணி 25 வது ஆண்டு பூர்த்திமலர் வெளியிடப்பட்டது. அறிமுகவுரையை கௌசி அவர்களும், வெளியீடுரையை சுருக்கமாக நூலகவியலாளர் என்.செல்வராஜா அவர்களும் வழங்க வெற்றிமணியின் மூத்த எழுத்தாளர் திரு. ஏலையா முருகதாசன் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

சிறப்புரை கலைவிளக்கு சு.பாக்கியநாதன் திரு.தனசேகர் பிரபாகரன் அகியோர் நிகழ்த்தினர்.

வெற்றிமணி ஆசிரியரின் தனி முயற்சியிலும், குடும்பத்தினரின் ஆதரவுடனும், விளம்பரதாரர்களின் அனுசரணையுடனும் மிகச் சிறப்பாக மண்டபம் நிறைந்த விழாவாக மனதுக்கினிய விழாவாக அமைந்தது.







Facebook:
Vijay Home Designe Gunaratnam
0176 7221 8466

G.Vijay Home Designer

Sauber- Professionell - Pünktlich-Preiswert
web.www.vijay-home-designer.de

உங்கள் வீடுகளை
சிறப்பாக வடிவமைக்க நாடுங்கள்!

சிறந்ததொழில் தேர்ச்சிபெற்வர்களால்
குறித்த நேரத்தில் குறைந்த செலவில்
நேர்த்தியாகச் செய்து தரப்படும்.

e.mail:G.Vijay@outlook.de Kleiststrasse 07
41844 Wegberg
Germany

Inh.: Gunaratnam Vijayakumar
Telefon: +49 176 72 21 84 66



நெடுந்தீவு முகிலனின்




குழப்பத்திலிருந்து தப்பிக்க மிக வலுவான மனநிலை வேண்டும். அதிலிருந்து மீண்டு வந்து விட்டீர்கள் என்றால் உங்கள் ஆத்மா இன்னும் அதிகமாகும்.

தெளிவாகி விட்டீர்கள் என உங்களால் உணர முடிந்தால் மட்டுமே தான் எடுக்கப்பட்ட தீர்வுகளின் படியே தொடர்ந்து நிலையாய் இயங்க முடியும்.

உங்களுக்கு என்றான முடிவுகளில் மற்றவர்களின் தலையீடுகள் இருப்பின் அது தொற்று நோயை போல் பரவிக் கொண்டே இருக்கும்.

உங்கள் கனவுகளுக்காக வேலை செய்வதை ஒருபோதும் நிறுத்தி விடாதீர்கள். வாழ்க்கையில் பல சவால்களை எதிர்கொள்வதற்கு அது உதவியாயிருக்கும்.

மனிதர்கள் பயங்கரமானவர்கள் அவ்வப்போது அவர்களிடம் மிருகத்தனம் வெளிப்படும். அன்புக்காக ஏங்குவது போன்றது கூட நடிப்பாக இருக்கலாம்.




உங்கள் முகத்தை கண்ணாடியில் பார்த்து அதன் அழகை சரி செய்வதுற்கு ஒப்பானது. நிதானத்தோடு இருந்து உங்கள் மனதிலுள்ள அழுக்குகளை அகற்றுதல்!
உங்கள் சுயத்தையாரும் அவமதிக்க அனுமதிக்ககூடாது. சரியான முடிவுகள் ஒரு போதும் எமாற்றதை தரவே தராது. இதை உங்கள் சபதமாக்குங்கள்.

எவரையுமே நீங்கள் நம்ப வேண்டாம் என்று சொல்வதற்கான காரணம்... உண்மையாகவே உங்களை நீங்கள் விரும்ப வேண்டும் என்பதற்காகத்தான்!

வாழ்க்கை முழுமை அடைவது என்பது ஒரு உயர்ந்த நிலைக்கு செல்வது அல்ல... இறங்கினாலும் ஏறினாலும் பிடித்ததை செய்வதுதான் உன்னதமானது.
அச்சங்களுக்கு பதிலாக உங்கள் தைரியத்தை எண்ணுங்கள். புண்படுத்துபவர்களின் வார்த்தைகளுக்கு பக்கத்தில் உங்கள் காதினை கொண்டுசெல்லாதீர்கள்.
இலக்கில் தெளிவோடு இருந்தால் மட்டுமே போதும்! நீங்கள் விரும்பியவாறு உங்களை நீங்களே உருவாக்கி கொள்ளலாம்.
உங்களிடம் யார் எது வேண்டுமானாலும் கேட்பதற்கு அனுமதியுங்கள் - ஆனால் அதற்கு முன் அவர்கள் உங்களுக்கான மரியாதையை கொடுக்க வேண்டும்.



வெற்றிமணி வெள்ளிவிழாவில் வழங்கிய நெடுந்தீவு முகிலனின் பிரளயம் படத்திற்கான நினைவுக்கேடயம் வெற்றிமணி வழங்கிக் கௌரவித்தது. அருகே அறிவிப்பாளர் சிவகாமி விநாயகம் இயக்குனர் முகிலன் ஒளிப்பதிவு படத்தொகுப்பு AKR Visualizers கோபி கோபி. படத்தயாரிப்பு ஆசியா சமுத்திரம் இராசையா இரகுநாதன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.






# வெற்றிமணி வெள்ளிவிழா பற்றி என்மனதில் எழுந்த மணித்துளிகள்



கலைவிளக்கு சு.பாக்கியநாதன்

## வெற்றிமணியின் 25 வது ஆண்டு நிறைவு விழாவின் வெற்றி விழா!

விழா சிறப்பாக நடைபெற்றது.
வாழ்நாள் சாதனை விருதுகள் சிறப்பு, நல்ல விடயம்.
பேச்சுக்களை தவிர்த்தமை நல்ல விடயம்
திரையில் காட்சிப்படுத்தல் நல்ல விடயம்
வாசகர்கள் இரசிகர்கள் ஆர்வத்துடன் இருந்தனர்.
இசைக்குழு, சிறுவர் பெரியவர் பாடல்கள் மிகவும் இனிமை.
ஒலி, தொழில் நுட்பம் நல்லது.
ஆட்டம், பாட்டம் நல்லது. ஆனால் அதிக நேரத்தை விழுங்கிவிட்டன.
நிகழ்ச்சித் தொகுப்பு: சிவகாமி மற்றும் சக்திவேல் இருவருமே சிறப்பு.
வெற்றிமணி கால் நூற்றாண்டு வெற்றிச்சுவடுகள் நூல் தாமதமானது ஏன்? அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு இருக்க வேண்டும்.
மேடையில் வெற்றிமணி ஆசிரியர் மனைவியுடன் கௌரவிக்கப்பட்டது மிக அழகாக சிறப்பாக இருந்தது.
யாவும் மனம் கொள்ளத்தக்கது.
வாழ்க, வாழ்க, வாழ்க

சு.பாக்கியநாதன்
வெற்றிமணி விழாவில் தனது பேச்சில் இருந்து சில குறிப்புகள்.
வெற்றிமணியின் சாதனையை முறியடிக்க முடியாது... காரணம் பார்த்தால் விளங்கும்.வெற்றிமணியின் பிறப்பும் வளர்ச்சியும்.
உதாரணம் பினிக்ஸ் பறவை வாழ்வுக்காலம் ஒப்பீட்டு ரீதியில் பலர் என்னைப் பாராட்டினார்கள்.

வெற்றிமணி விழா முடிந்து மறுநாள் எனக்கு தபாலில் வந்த கடிதம். ஒரு உண்மையான விமர்சனத்தின் நிதர்சனம்.இதனை சு.பாக்கியநாதன் அவர்கள் தன்கைப்பட எழுதி அனுப்பியிருந்தார்.


நிறை குறைகளை நேரில் பகிரும் மாண்பு. நிறைகளைச் சொல்லி குறைகளைச் சுட்டிக்காட்டும் தன்மை. பல துறைகளில் சிறப்பாக உள்ளவர். அனுபவமிக்கவர். சொல்லும் வகை தெரிந்தவர் என் நெஞ்சுக்கு அண்மையில் உள்ளவர். உதாரண புருஷர்களைத் தேடி அலைய வேண்டாம். கண்முன்னே தெரிபவர்களை அலட்சியம் செய்ய வேண்டாம்.

எனக்கு என் அனுபவத்தில் யார் யார் பாராட்டப்பட வேண்டியவர்களோ அவர்களை யாராக இருந்தாலும் பாராட்டத் தயங்கமாட்டேன். அதற்கு காலம் நேரம் பார்த்துக் காத்திருக்கின்றேன். ஒரு கல்லையோ, மரத்தையோ பாத்தால்கூட அதற்குள் என்ன சிற்பம் அதில் இருந்து வெளிவரும் என்பதை பார்த்த மாத்திரத்தில் அறியும் வல்லமை சிறிதளவேனும் என் அனுபவத்திற்கு உண்டு. அது என்றும் வீண்போவது இல்லை. 1950 முதல் வெற்றிமணியை எடுத்துப் பார்த்தால் அந்த உண்மை புரியும்.
வெற்றிமணி மலர் நூறு வீதம் சரியாகச் செய்ய வேண்டும் என்பதற்காக நூறுவீதம் அதனை செய்யாது விட என்னால் முடிவது இல்லை. மனிதன் வாழ்வில் சரியாகச் செய்யவேண்டும், செய்யவேண்டும் என எண்ணி எதுவுமே செய்யாது மறைந்தவர்கள் கோடி. அந்தக் கோடிக்குள் ஒருவனாக நான் மடிய விரும் பவில்லை.
என்றும் தமிழுடன்
மு.க.சு.சிவகுமாரன் (பிரதம ஆசிரியர்: வெற்றிமணி, சிவத்தமிழ்






# இரயில் பயணத்தின் ஊடாக ஊடக நுகர்ச்சிபற்றிக் கற்றுக்கொண்டது



வெற்றிமணி வெள்ளிவிழாவில் வெற்றிமணி விருது பெற்ற இளம் எழுத்தாளன்

ராம் பரமானந்தன்

நவராத்திரி பண்டிகைக்கு வீடு வந்தால் பூசையைப்போல், வீட்டில் உள்ள இணையத்தளத் தொழில்நுட்பங்களை சரி செய்வது, இளையவர்களுக்காய் நிச்சயம் காத்திருக்கும் மாசடைந்த இருக்கையையும், உறைந்துபோன Ipadஉம் குத்துவிளக்கை மினுமினுக்கும் கரங்களாலேயே செய்யப்படும்.

வயதில் குறைந்த இளையோரிடையேயே நவீன ஊடகங்களின் பாவனை உள் ஊறிப்போய் இருக்கிறது. குழப்பங்கள் இன்றி அவதானமாக வேலை செய்ய நான் எனது கைத்தொலைபேசியை நிறுத்தி வைக்க, என் பக்கத்தில் பயணிக்கும் சிறுமி புதியதொரு வழிமுறையை பயன்படுத்துகிறாள். Smartphone App ஒன்று 30 நிமிடங்கள் படிக்க, திரையில் ஒரு மரத்தை வளர்க்கிறது. முப்பது நிமிடங்கள் கடக்கும் முன், திரையில் கைவைத்தாலோ, தொலைபேசியை நகர்த்தினாலோ, அந்த மரம் இடையிலே பட்டுப்போகும். ஒரு நாளில் எத்தனை முப்பது நிமிடங்களும் படித்துக்கொள்ளலாமாம். ஒரு குறிப்பிட்ட பாட இலக்கை, இந்த மென்பொருள் மூலம் அடைந்தால், அந்நிறுவனம் பாவனையாளர் பெயரில் உண்மையில் ஒரு மரத்தை உலகில் எங்கோ நட்டுவருகிறது என்று அவள் எனக்கு விளக்கம் தந்தாள்.

நானறியாத புதிய தொழில் நுட்பங்களை என்னை விட வயதில் குறைந்தவர்கள் தாராளமாக ஆள, என்னிலும் வயதில் மூத்தோருக்கு நான் பாவிக்கும் தொழில் நுட்பங்களைக்கூட அறியாமல் இருக்கலாம். இந்த சமநிலையின்மை கால ஓட்டத்தில் தவிர்க்கமுடியாதது. மேலும் சிறுமி கூறியதுபோல ஊடக நுகர்ச்சியைக் கட்டுப்படுத்த ஊடகங்களையே பாவிக்கிறோம். ஊடக ராட்டினத்திற்குள் நாம்.

என் போன்ற இளையவர்களின வல்லமைகளை பகிர்ந்துகொள்ளுமாறு மூத்த தலைமுறைகள் கேட்டால், திமிருடனும் செருக்குடனும், பொறுமையின்றி சொல்லிக்கொடுக்கிறோம். என் பார்வையில் இந்தத் திமிரும், செருக்கும், நியாயமற்றவை. தமிழ்க்கடையில் நின்று, புடலங்காயிற்கும், பாவற்காயிற்கும் வித்தியாசம் என்ன என்பதை Face Time மூலமாகவே அம்மாவிடம் கேட்டுக் கொள்கிறோம். சைக்கிள் எப்படி திருத்துவது எனத் தெரியாததால், எனக்கு Face Time மூலம் எந்த நட்டை எப்படிக் கழட்ட வேண்டும் என்று அப்பா சொல்லித்தருகிறார். இளையவர் நாம் சொல்லிக்கொடுக்காவிடினும் நவீனத்தின் தேவைகளால் அவர்கள் ஊடகப் பாவனையை கற்றுக்கொள்கிறார்கள். அதைவிட Apple போன்ற நிறுவனங்கள் முதியோர்களுக்கான iPad வகுப்புக்களை வைத்து வலைக்குள் சிக்கிய மீன்களை நழுவ விடுவதில்லை. நான் சிறுவனாக இருந்தபோது என் இணைய நுகர்ச்சியைக் கட்டுப்படுத்த எனது அம்மா Wifi கடவுச்சொல்லை மாற்றக் கற்றுக்கொண்டதை நினைத்து இந்த நொடியில் இரைமீட்டி ரசிக்கிறேன்.

ஆகவே ஊடக ஆளுமை என்பது
பெருமிதத்திற்குரியதல்ல. எவரும் விரும்பினால்
தம் தேவைக்காக அதைக் கற்றுக்கொள்ளலாம்.
நானிருக்கும் இரயில் பெட்டியில்
ஒரு துருக்கி மாமா யாரோ தொலைபேசியை எடுத்து,
தொலைபேசி எண்ணொன்றைக் கேட்க, அதை
Copy Paste பண்ணத்தெரியாது,
அழைப்பைத் துண்டித்து, இலக்கத்தை
ஒரு Tissue இல் எழுதி,மீண்டும் அழைப்பை
ஏற்படுத்தி, இலக்கத்தை இரயில் முழுதும்
கேட்க உரத்துச்சொன்னார்.

இப்படி இருக்கிறாரே என நான் நினைத்தபடி, அவரைத் தாண்டிச் செல்கையில் உடைந்த கண்ணாடி கொண்ட iPhone 6ல் அவர் துருக்கிச் சின்னத்திரையை ரசித்தபடி பயணித்தார். எது தமக்கு அவசியமோ, அதை அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள்.
ஆனால் முதியோருக்கு மாறாக இளையவர் நாம், அனைத்தையும் கற்றுக்கொள்ளும் கட்டாயத்தை ஏற்படுத்திக் கொள்கிறோம். வாழ்க்கையின் எந்த பகுதியையும் ஒரு மென்பொருளின் உதவியுடன் கையாளத் துடிக்கின்றோம். எனது பிரயாணச்சீட்டு, நாளை வாங்க இருக்கும் மளிகைப் பொருட்கள், எனது வங்கி அட்டை அனைத்தும் என் கைத் தொலைபேசியில். என் வயதினர்கள் அனைவரும் நவீன நாகாரீகங்களுக்கு ஏற்ப வாழ்க்கை முறைகளை மாற்றிக்கொள்ள, நானும் பின் தொடரும் கட்டாயாத்தில் உள்ளேன்.
இந்த தொழில்நுட்பக் கலாசாரத்தின் அழுத்தங்களுக்கு புதையாமால், இந்த ஊடக நுகர்ச்சியை விட்டுக்கொடுக்கத் தயார்.
நான் இருக்கும் இந்த இரயில் வண்டியில், ஒரு முதிய ஜேர்மன் பாட்டி மட்டுமே ஒரு புத்தகத்தை வாசிக்கிறார், ஏனையவர்கள் அனைவரும், நானுட்பட புருவங்களை சுருக்கிய வண்ணம், ஏதோவிதமான மின்திரை ஒன்றை பார்த்த வண்ணமே இருக்கின்றோம். அதில் ஒரு சிலர் பொழுதுபோக்காகவும் இன்னொரு சிலர் மிக நுணுக்கமாக அச்சடித்த வண்ணம்.

அதிகமானோர் ஒரு திரையை பார்க்க, வேறொரு திரை மின்ன, அதைத் தூக்கிப் பார்த்து, ஒரு வேலையை துண்டித்து, மீண்டும் தொடர்கிறார்கள். குறைந்தது நான்கு நிமிடங்களுக்கு ஒருமுறை இப்படி இந்த இரயில் பெட்டியில் ஒவ்வொருவருக்கும் நடக்கிறது. என்னையும் கூட, ஒரு நல்ல கருத்தை எண்ணி முடிக்க முன், என் Smart மணிக்கூடு துண்டித்து, எதையோ சொல்கிறது. என் அவதானம் சிதையாமல் இருக்க, மணிக்கூட்டைக் கழட்டி, பையில் வைக்கிறேன்.

தொடர்ச்சி 26 ம் பக்கம்




# ஒருபானை சோற்றுக்கு.....

**25 ம் பக்கத் தொடர்ச்சி**

பேருந்துக்காகவோ, நண்பர்களுக்காகவோ, டாக்டர் வீட்டில் காத்திருக்கவோ, அமர்ந்த அடுத்த நொடியில், மறவாது எம் கைகள் கைத்தொலைபேசியை எடுத்து, Instagram, Facebook சொல்லும் செய்திகளை எம் மூளை நாட, தாகத்தைத் தீர்த்துக்கொள்கிறோம். நாம் போட்ட படத்திற்கு, Like எத்தனை, தெனாவெட்டாக சொன்ன கருத்துக்கு பதிலடி போடத் துணிந்தவர்கள் எத்தனை பேரென, உண்மையான வாழ்வில் ஓரிடத்திலும், Digital வாழ்வில் இன்னொரு இடத்திலும் மிதக்கிறோம். இதனால் எம் அவதானம் அலைபாய்கிறது.

சமூகவலைகளிடையே அங்கீகாரத்துக்கான நிரந்தரமான தேடலில் நாம் இருக்கிறோம். ஒவ்வொரு சிறிய Like ம் Comment ம் எமக்கு இன்ப அதிர்ச்சியைத் தருகிறது. நிரந்தரமில்லாத நொடிக்கான இன்பத்தை நாடி வாடிப் போகிறோம். கடலளவு தகவல்களை தரும் சமூகவலைகளை தட்டத் தட்ட பசி ஆறுவதில்லை. அடுத்தவர்களுடைய அவதானத்திற்காக நாம் போராடும் வண்ணம், அரக்கர்கள் போல சமூகவலை நிபுணர்கள் எமது அவதானத்தை வைத்து உழைக்கின்றனர். ஊரான் வீட்டுப் படங்களிடையே ஓரிரு விளம்பரங்களைப் போட்டு கோடிக்கணக்கில் வருவாய் Zuckerberg வீட்டில்.

இக்கட்டுரையை எழுதும் கணத்தில், என் மணிக்கூடு, கணிணி, தொலைபேசி அனைத்தும் குறுஞ்செய்திகளின் வருகையை அறிவித்து என் சிந்தனையைச் சிதறடிக்க, அருகே குறிப்பிட்ட பாட்டி, எந்த குழப்பமும் இன்றி அவதானமாக தன் நூலை வாசித்து பயணிக்கிறார்.

இவருடைய சமூகவலை பாவனை பற்றி நான் அறியவில்லை, ஆனால் அவதானம் சிந்தாமல் இருப்பது,இணைய யுகத்தில் இணைந்த யுவனாக இருப்பதிலும் மேல் என எண்ணி, இரயில் பயணம் முடிய, என் சிந்தையில் தெளிவு பிறக்கிறது.






## அமரர் பாஸ்கரன் உஷா அருள்மேரி (யேர்மனி)




தாயகத்தில் முல்லைத்தீவு சிலாவத்தையைப் பிறப்பிடமாகவும் யேர்மனியில் Marl நகரத்தை வதிவிடமாகவும்கொண்ட
திரு.பாஸ்கரன் அவர்களின் அன்பு மனைவியும் மெரினா,நிவேதன் ஆகியோரின் அன்புத் தாயாருமான
திருமதி பாஸ்கரன் உஷா அருள்மேரியின் மறைவின்போது ஆறுதல் வார்த்தை பகிர்ந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றி.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்தனை செய்கின்றோம்.
அன்புக் கணவன்
பிள்ளைகள்.

தகவல்: பாஸ்க்கரன்:
Tel: 00(49)157 740 99491

**19 ம் பக்கத் தொடர்ச்சி**

## யேர்மனியில் தமிழர் தெருவிழா - அது எதிர்காலத்தில் தமிழர் பெருவிழாவாக மலரும்!

பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டவர்கள் இதன்போது திறம்படச் செயற்பட்டார்கள். 3000இற்கும் அதிகமான பார்வையாளர்கள் அன்று முழுவதும் வந்து சென்றிருப்பார்கள் என்று கணிக்கப்பட்டுள்ளது.
மேடை நிகழ்வுகளை முற்று முழுதாக இளையோரே தொகுத்து வழங்கினார்கள். ஆடல், பாடல் என்று கலைநிகழ்வுகள் மிகச் சிறப்பாக இருந்தன.தெருவிழா சிறப்பாக நடைபெற்றது குறித்த மகிழ்ச்சியை கலைஞர்கள் வெளிப்படுத்தினார்கள்.மழை பெய்த போதும் பல பெரியவர்களும், இளையோரும் நின்று துப்பரவுப் பணிகளில் ஈடுபட்டார்கள். தெருவிழா அனைத்துத் தமிழர்களுக்கும் உரியது என்பதை உணர்ந்து தானாக வந்து சேர்ந்தவர்கள் அவர்கள். அப்படியானவர்கள் இருப்பதனாலேயே இப்படி ஒரு பெரும் விழாவை வெற்றிகரமாக செய்ய முடிந்திருக்கிறது.
தெருவிழாவினை உன்னிப்பாக அவதானிக்கும் வெற்றிமணியின் ஆசை, அடுத்தடுத்த ஆண்டுகளில் பத்தாயிரம் மக்களை வருவிக்கும் ஒரு விழாவாக அது அமையவேண்டும். அமையவேண்டும் என்ன? அமையும் என நம்பலாம்.





# வாழ்க்கை என்பது வழுக்கையா?

எனக்குள்ளே நான் பல கேள்விகள் கேட்கின்றேன். பல பக்கப் பார்வையில் என் சிந்தனைகள் விரிவுபடுகின்றன. இறுதியில் ஒரு தீர்மானம் எடுக்கின்றேன். அவை எவ்வாறு விரிவுபடுகின்றன என வாருங்கள் இணைந்தே சிந்திப்போம்.

நாம் பிறக்கும்போது தலை முழுவதும் தலைமயிரோடே பிறந்தோம். கூட வந்த மயிர்கள் ஒவ்வொன்றாகக் கழன்றன. புதிது புதிதாக மயிர்கள் முளைத்தன. தலையில் முளைத்தவையும் கூடவரவல்லை. பழைய மயிர்களும் எமது தலையில் இருப்பது இல்லை. கழுவினோம்; துடைத்தோம்; அலங்கரித்தோம்; இருந்தும் எம்மை விட்டே போனது. இறுதியில் வழுக்கையானது. எதுவுமே இல்லாத மண்டையில் அடர்த்தியாக இருந்த மயிர்களும் அலங்கரிப்பும் இருந்த இடம் தெரியாமல் போவது போலவேதான் வாழ்க்கையும் அமைந்திருக்கின்றது.

தனியாகப் பிறந்தோம்; தலை நிமிர்ந்து வாழ்ந்தோம்; தோளோடு சேர்ந்தோம்; தோல்விகளை வென்றோம்; சாதனைகள் புரிந்தோம்; சாதித்துக் காட்டினோம்; இறுதியில் தெரியாமல் போனோம். இதுவே வாழ்க்கை. போராடித் தொடர்கின்ற வாழ்க்கையில் இறுதியில் யாருடனும் போராடாது எமக்கு நாமே போராடித் தோற்றுப் போக வைப்பதே இயற்கை நியதி. அப்படியானால், இப்படித்தான் நடக்கப் போகின்றது என்பதை நாம் முன்னமே தெரிந்திருந்தும் எமது வாழ்க்கையில் ஏன் இந்தப் போராட்டம்? ஏன் இந்த மகிழ்ச்சி? ஏன் இந்த பாசப் பிணைப்பு? ஏன் இந்தப் பிரிவுத்துயர்? என்று சிந்தித்துப் பார்த்தோமென்றால், வாழ்க்கை என்பது வழுக்கை என்றே உணர்வோம்.

வாழ்க்கையில் இறுதிவரை போராடித் தோற்றுப் போனவர்களும் இருக்கின்றார்கள். வாழ்க்கையின் வெற்றி உச்சத்தைத் தொட்டவர்களும் இருக்கின்றார்கள். ஆனால், இறுதியில் இரு தரத்தினரும் உலக வாழ்க்கையில் ஒன்றுமில்லாமல் போனவர்களே. மாட மாளிகைகள், கோடான கோடிக் கோபுரங்கள் கட்டி வாழ்ந்த மன்னர்கள் இன்று எங்கே? பாட்டாலே உலகத்தை வென்ற பாவேந்தர்கள் எங்கே? நாயன்மார்கள் எங்கே? ஆழ்வார்கள் எங்கே? உலகத்தையே தன் கைக்குள் அடக்கிவிடலாம் என்று போர் தொடுத்த ஹிட்லர் எங்கே? அண்டவெளி ஆராய்ச்சியாளர்கள் எங்கே? தொழில்நுட்ப ஆய்வாளர்கள் எங்கே? தம்முடைய பெயரை நிலை நிறுத்திப் போனவர்கள் கூட பெற்றது ஏதுமில்லை. அவர் பெயர் சொல்லிப் பெயர் பெறும் சொந்தங்களே அவர்கள் புகழுடன் தொடர்கின்றார்கள் என்பது உண்மையே. அதுகூட ஓரிரு சந்ததி கடந்து மறக்கப்பட்டு அப்படியென்றால், ஏனிந்த போராட்டம்! வாழ்க்கையை நன்றாக அனுபவித்துச் செல்ல மனம் தடைபோடுவதும் ஏன்? !

இறப்பு என்பது நிச்சயம். இறந்தவர்கள் திரும்பி வருவதில்லை. படைப்புக்கள் அத்தனையும் ஒருநாள் இல்லாமல்தான் போகின்றன. கண்டுபிடிப்புக்கள் எல்லாம் காணாமல்தான் போகின்றன. அன்று நாம் பயன்படுத்திய உபகரணங்களை நாம் பயன்படுத்துகின்றோமா? (Radio, Taperecorder, சமையல் உபகரணங்கள்) இன்று பயன்படுத்துபவவை நாளை தொடருமா? இல்லவே இல்லை. தொழில்நுட்பங்கள் பழையவற்றை ஒன்றுமில்லாமல் பண்ணிவிடுகின்றன. சிந்திக்கச் சிந்திக்க புதியவை பிறப்பெடுக்கின்றன. பழையவை தேக்கம் கண்டுவிடுகின்றன. எனவே உயர்திணை அ.ஃறிணை அத்தனையும் வாழ்க்கையில் வழுக்கையே.



கௌசி

ஆனால், தனக்காக வாழ்ந்து ஆடு,
மாடுகள் போல் பசித்தால் புல்லைத் தின்று,
உறக்கம் வந்தால் உறங்கி வாழ வேண்டுமா?
மிருகங்கள் போல் தேடி வேட்டை ஆடி,
பசி நீங்க காலாற நடந்து, உறக்கம் வர உறங்கிப் போகும் வாழ்க்கை சரியா? அவ்வாறு மனிதன் வாழ்ந்தால், இந்தப் பூமியில் மாற்றங்கள் தோன்றியிருக்குமா! இலை குழை உடுத்தே இன்றும் மனிதன் வாழ்ந்திருப்பான். அவ்வாழ்க்கை அழகென்று சொல்பவர்களும் உண்டு. ஆறறிவு படைத்த மனிதனின் படைப்புக்கள் மேம்பட உலகத்தை வசதி படைத்த உலகம் ஆக்குவோம் என்று சொல்பவர்களும் உண்டு.

"காயமே பொய்யடா காற்றடைத்த வெறும் பையடா
மாயனார் குயவன் செய்த மண்பாண்டம் ஓடடா"

என்று பாடிய சித்தர் உலகநிலையாமையை உரைத்தார்.

"காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே"

என்ற பட்டினத்தார் இல்லாமல் போகும் உடலின் நிலையாமையை எடுத்துரைத்தார்.

ஆடிய ஆட்டம் என்ன?
பேசிய வார்த்தை என்ன?
தேடிய செல்வம் என்ன?
திரண்டதோர் சுற்றம் என்ன?
கூடுவிட்டு ஆவி போனால்
கூடவே வருவது என்ன?

**வெற்றிமணி வெள்ளிவிழா ஆனுசரனையாளர்களது படங்கள் அடுத்த இதழில் வெளிவரும்.**






# RAJU PARCEL SERVICE

## ராஜு பொதிகள் சேவை

- கொழும்பு (வீட்டு சேவை)
- யாழ்ப்பாணம் (வீட்டு சேவை)
- கிளிநொச்சி (நகர்ப்புற வீட்டு சேவை)
- வவுனியா (நகர்ப்புற வீட்டு சேவை)
- முல்லைத்தீவு (நகர சேவை)
- திருகோணமலை (நகர சேவை)
- புத்தளம் (நகர சேவை)
- சிலாபம் (நகர சேவை)
- நீர்கொழும்பு (நகர சேவை)

மற்றும் ஏனைய பிரதேசங்களுக்கும்....

€65




BOX AND PACKING TAPE FREE

**எமது அடுத்த கப்பலுக்கு தயவு செய்து உங்கள் பொதிகளை எமது முகவரிடம் 20 ஒக்டோபருக்கு முன்னதாக ஒப்படைக்கவும்**

RAJU PARCEL SERVICE RPS

- பொதிளைப் பெற்றுக் கொள்பவர்களிடமிருந்து எந்த விதமான கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.
- நீங்கள் அனுப்பும் பொருட்களைப் பெற சுங்க இலாக்காவிற்கு அலைய வேண்டிய தேவையே இல்லை.
- மேலதிக விபரங்களுக்கு இதில் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:

RAJU PARCEL SERVICE

RPS DE: 0049 (0) 163 5065 663

# கீழடி – பானை ஓடுகளின் கீறல்கள்
# தமிழ்த்தாயின் கை ரேகைகள்!



**தனசேகர் பிரபாகரன்**







தமிழ் என்பது தமிழர்க்கு வெறும் பேசும் மொழி மட்டுமல்ல அது உயிரில் கலந்த உணர்வு போலே, தமிழ் எங்கள் உயிருக்கு நேரென சொல்லுமளவுக்கு கொண்டாடப்படும் ஒன்று, கல்தோன்றி மண்தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த மொழியென பெருமைப்படும் நமக்கு அதனை தக்க சான்றோடு உலகத்துக்கு எடுத்து இயம்ப வேண்டிய கடமையும் உள்ளது. அப்படி ஒரு பொன்னான நிகழ்வு தற்போது நிகழ்ந்துள்ளது.

தமிழுலகம் மிகவும் எதிர்பார்த்துக்கொண்டிருந்த மதுரை கீழடி அகழ்வாய்வின் அறிக்கை உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது. அதில் பல உண்மைகளும் வெளிவந்துள்ளன.அதிலொன்று பழந்தமிழ் எழுத்துக்களாம் தமிழி அல்லது தமிழ் பிராமி பொறிக்கப்பட்ட பானை ஓடுகளின் காலம் கி.மு 6 ஆம் நூற்றாண்டென கண்டறியப்பட்டுள்ளது.

எழுத்துக்கள் ஏன் முக்கியம் ?

ஒரு மொழியோ அதனைச்சார்ந்த சமூகமோ தனது பழமையை பறைசாற்ற தக்க ஆதாரங்களை முன்வைக்க வேண்டும், தமிழுக்கு இலக்கிய பெருமை 2000 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ளதும் சங்க இலக்கியங்கள் செழித்ததும் நாம் அறிந்ததே ஆனால் வெறும் இலக்கிய ஆதாரங்களை மட்டும் முன் வைத்தால் அவை இன்ன காலகட்டத்தில் தான் எழுதப்பட்டதா அல்லது பிற்சேர்க்கையா என்று ஆயிரம் கேள்விகள் எழும் அதனால் இலக்கிய ஆதாரங்களுடன் எழுதப்பட்ட ஆதாரத்தையும் எடுத்து வைக்க வேண்டும். இதற்கு தான் நமக்கு கல்வெட்டுகள் உதவுகின்றன, தமிழகத்தில் /ஈழத்தில்/கடல்கடந்த பல நாடுகளிலும் தமிழ்க் கல்வெட்டுகள் கிடைக்கப் பெறுகின்றன. பொதுவாக தமிழ் எழுத்துக்கள் முதலில் தமிழி/தமிழ்ப் பிராமியில் எழுதப்பட்டு பின்னர் வட்டெழுத்து, தமிழ் எழுத்தென இன்றைக்கு நாம் எழுதும் வடிவத்திற்கு வந்துள்ளது.

## ஈழத்து ஆனைக்கோட்டையில் பழந்தமிழ் எழுத்துக்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள ஆனைக்கோட்டையில் 1980 ஆண்டில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வில் முத்திரை ஒன்று கண்டறியப்பட்டது. கிறிஸ்துவுக்கு முந்திய காலத்தை சேர்ந்த பழங்கால மக்களின் ஈமத்தாழியும் அதோடு முத்திரை கண்டறியப்பட்டது, அதில் சில குறியீடுகளும் தமிழி எழுத்துக்களும் பொறிக்கப்பட்டிருந்தன. அந்த எழுத்துக்கள் கோவேந்த கோவேத என்று அறிஞர்களால் வாசிக்கப்பட்டது. ஆனால் துரதிர்ஷ்ட வசமாக அந்த முத்திரை பின்னாளில் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டது.

கீழடியின் எழுச்சிதமிழகத்தில் மதுரையை சுற்றிய மலைகள், ஜம்பை, அரச்சலூர்,கரூர் மற்றும் பலவிடங்களில் பழந்தமிழ் கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன. ஆனாலும் அதன் காலம் கி.மு 300 கீழே இல்லை என்று பல்வேறு கருத்துக்கள் நிலவிவந்தன, அதனால் எழுத்துக்களின் பழமை கி.மு 300 க்கு கீழ் கொண்டு செல்லமுடியவில்லை,

இந்நிலையில் தான் பொருந்தல் அகழ்வாய்வு, புலிமான் கொம்பை நடுகல் மற்றும் கீழடி கண்டுபிடிப்புகள் நம்பிக்கையை தந்தன.

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரைக்கு அருகே கீழடியில் அகழ் வாய்வுகள் தொடப்பட்டதும் படிப்படியாக அது தமிழர்களின் கவனத்தை ஈர்த்தது, சங்க கால கட்டிடங்கள், உறைகிணறுகள், மணிகள், பொம்மைகள் மற்றும் பானை ஓடுகள் என பல பொருட்கள் கிடைக்க ஆரம்பித்தன, பின்னால் வைகைக் கரை தமிழர் நாகரீகம் என்று சொல்லுமளவு விஸ்வரூபம் எடுத்தது.

இந்த ஆய்வுகளின் பொது சேகரிக்கப்பட்ட பொருட்களில் இருந்து சேகரிக்கப்பட்ட கரிம மாதிரிகள் அமெரிக்காவின் மியாமி நகரத்தில் இருக்கும் பீட்டா பகுப்பாய்வு சோதனை கூடத்திற்கு அனுப்பப்பட்டு தமிழக தொல்லியல் துறையினரால் ஆய்வு முடிவுகள் அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி தமிழ்ச்சமூகம் கி.மு ஆறாம் நூற்றாண்டு அதாவது இன்றைக்கு 2600 ஆண்டுகட்கு முன்னரே எழுத்தறிவு பெற்றசமூகமாக திகழ்ந்துள்ளது தெரிய வந்துள்ளது. கீழடியில் கிடைத்த பானை ஓடுகளில் ஆட்களின் பெயர்களான ஆதன் குவிரன் ஆதன் பெயர்கள் இடம்பெற்றுள்ளன, அதிசயமே இந்தப் பெயர்கள் சங்கஇலக்கியங்களிலும் காணக்கிடைக்கின்றன.

சிந்து,கங்கை நதிக்கரை நாகரீகத்திற்கு பின், இரண்டாம் நிலை நகர நாகரீகங்கள்,தமிழகத்தில் தோன்றவில்லை என்ற கருத்துக்கு மாறாய்,சுமார் 2200 ஆண்டுகளுக்கு முந்தைய வைகை கரை நாகரீகம் சிறந்து விளங்கிய தற்கான சான்றுகள் கீழடி அகழாய்வில் கிடைத்துள்ளன.



28ம் பக்கத் தொடர்ச்சி

# வாழ்க்கை என்பது வழுக்கையா?

என்று எதுவுமே எமக்குச் சொந்தம் இல்லை என்று கண்ணதாசன் பாடினார். இவ்வாறு அவரவர் நிலையாமை பற்றி எடுத்துரைக்க, அந்த உலக நிலையாமையை எடுத்துரைத்த திருமூலர் கூட

"தன்னை நன்றாகத் தமிழ் செய்ய என்னை நன்றாக இறைவன் படைத்தனன்"

என்று பாடித் தன் கடமையை திருமூலரே உணர்த்தியிருக்கின்றார். அதாவது உலக வாழ்க்கை வழுக்கை என்றாலும் ஒவ்வொரு மனிதர்களுக்கும் கடமை உள்ளது அல்லது கடமையை உள்ளதாக்கிக் கொள்ள வேண்டும் என்பது புலப்படுகின்றது. துறவியானவர் துறவறத்தில் இருந்த வண்ணம் சமூகத்திற்கு நல்லவற்றை உரைக்கவில்லையா?

ஒன்றுமில்லாமல் போவோம் என்று தெரியாமலே பிறக்கின்றோம். வாழ்க்கையில் நாம் எதுவுமில்லாமலே போவோம் என்று தெரிந்தே வாழ்கின்றோம்; சாதிக்கத் துடிக்கின்றோம். ஆனால், மனிதன் மூளையில் ஒன்று குடைந்து கொண்டே இருக்கும். இந்த பூமியில் பிறந்து விட்டோம். எமக்கோ அல்லது எம்மைச் சுற்றியிருப்பவர்களுக்கோ ஒரு வெளிச்சத்தைக் காட்டிவிட்டு மறைவோம் என்று சில மனிதர்கள் வாழ்க்கையைக் கொண்டு செல்வார்கள் என்பது உண்மையே. இங்கு எதிர்கால சமூகம் பற்றிய அக்கறை தொனிக்கின்றது. சிலருக்கு பிறப்பிலேயே தொடர் ஊக்கம் தொழிற்படும். தன்னால் முடியாது என்றாலும் தொடர்ந்து முயற்சியில் ஈடுபட்டு தம் இறுதிக்காலங்கள் வரையிலும் தம்முடைய எண்ணக்கருக்களை வெளிப்படுத்திக் கொண்டே இருப்பார்கள்.

வாழ்க்கையை நிலையானதாக மாற்ற விஞ்ஞானிகளும் முயற்சி மேற்கொண்டுதான் இருக்கின்றார்கள். இது நடக்குமா என்று சந்தேகப்பட்ட எத்தனையோ விடயங்கள் இன்று நடத்திக்காட்டப்பட்டுள்ளன. உருவ மாற்றுச் சிகிச்சை என்பது பிறந்தது எப்படியான தோற்றமோ அத்தோற்றத்தை முழுவதுமாக மாற்றுகின்றார்கள்(Plastik surgery) ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்றுகின்றார்கள், குளோனிங் முறையில் ஒரு மனிதனை மறுபடியும் உருவாக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் முனைந்து கொண்டிருக்கின்றார்கள். குளோனிங் முறையில் கலவியில்லா குளோனிங், (Asexual Reproduction) ஜீன்களையும் DNA கூறுகளையும் பிரதி எடுக்கும் ஜீன் குளோனிங் (Gene cloning), ஒரு மிருகத்தை அப்படியே பிரதி எடுக்கும் இனப்பெருக்க குளோனிங் (Reproductive Cloning)சிகிச்சை முறைகுளோனிங் (Therapeutic Cloning) என குளோன்களை உருவாக்க மனிதன் முனைந்து கொண்டிருக்கின்றான். எம்மால் அறியப்பட்ட டாலி என்னும் செம்மறி ஆடு, டியூவி என்றழைக்கப்படும் மான், ஸ்நூபி என்றழைக்கப்படும் நாய் போன்றன குளோனிங்குக்கு அத்தாட்சிகளாகக் காணப்படுகின்றன. அண்டங்கள் தாண்டி ஆராய்ச்சிகளில் பிரபஞ்சத்தை நோக்கி பார்வையைக் கொண்டு செல்கின்றார்கள். இவையெல்லாம் வாழ்க்கையையும் பிறப்பையும் நியாயப்படுத்துவதற்கும் நிலைப்படுத்துவ தற்கும் மனிதனின் முயற்சிகளாக இருக்கின்றன.

விஞ்ஞானிகளின் வரிசையில் உலகின் தலைசிறந்த அறிவியலாளரான ஸ்ரீபன் வில்லியம் காக்கிங் (08.01.1942 – 14.03.2018) என்றுமே எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துபவராகக் காணப்படுகின்றார். வாழவே முடியாத ஒரு மனிதன். தசையூட்டமற்ற பக்க மரப்பு நோயால்(Amyotrophic lateral sclerosis – ALS) அதாவது இயக்க நரம்பணு நோயால் (Motor neuron disease) பாதிக்கப்பட்டார். இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மூளை சொல்வதை தசை செய்யாது. உடல் அடங்கி ஒரு சக்கர நாற்காலிக்குள் ஐக்கியமாகிவிட்டது. இயக்கவியல் விஞ்ஞானியான இவர் "ஈக்வலைசர்" என்ற கொம்பியூட்டர் புரோக்ராம் உதவியோடு கன்னத் தசைகள் மூலம் கொம்பியூட்டரில் பேசி வந்தார். இந்நோய் கண்டபோது இன்னும் 2 வருடங்களே ஸ்ரீபன் வில்லியம் ஹாக்கிங் வாழ்வார் என்று மருத்துவர்கள் இவருடைய இறப்புக்கு நாள் குறித்தனர். 23 வயதில் இவருக்கு இவ் அச்சுறுத்தல் கிடைத்தது ஆனால், உலகவாழ்க்கையை விட்டுப் பிரியப் போகின்றோம் என்று தெரிந்திருந்தும் காதலித்தார். திருமணம் செய்தார். பிரபஞ்சத்தை முழுவதுமாக அறிந்து கொள்ளவேண்டும் என்ற ஆவலும் முயற்சியும் அவரை 76 வருடங்கள் வரை வாழ வைத்தது. இறப்பு எந்த நிமிடமும் வரலாம் என்று சிந்தித்த ஸ்ரீபன் ஹாக்கிங் வாழும் வரை அசைய முடியாத நிலையிலும் தன்னுடைய மூளையைப் பயன்படுத்தி தன்னுடைய ஆராய்ச்சியில் ஈடுபடுத்திக் கொண்டே இருந்தார்.

இவ்வாறான மனிதர்களை சிந்தித்துப் பார்க்கின்ற போது வாழ்கைக என்பது வழுக்கை என்று நினைத்தாலும், எதற்காவது வாழ வேண்டும் என்ற நினைப்பானது மூளை சுறுசுறுப்பான மனிதர்களுக்கு தோன்றிக் கொண்டே இருக்கும். இது இயற்கையின் நியதி, கோட்பாடு என்றே கூறலாம்.

## பத்திரிகை உலகில் புதிய சாதனை!



1994 முதல் இன்று வரை தொடர்ச்சியா வெற்றிமணிக்கு விளம்பர அனுசரனை தந்து சாதனை படைத்த 3 வர்த்தக ஸ்தாபனத்தினர்.
01.எசன்:அபிராமி என்ரபிறைஸ்.02.OT.S 03.TTS Brothers (Dortmund)


மொழிபெயர்ப்புச் சேவை!
V.Ramakrishnan

உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் ( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில் துரிதகதியில் மொழிபெயர்ப்பதற்கும் நாடவேண்டிய இடம்.

A.to.Z Dolmetscher - und Übersetzungsdienst
Für alle weltsprachen
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888
Lise-Meitner-Str.20
45144 Essen





SJ SOUTH INDIAN FOOD
0621 33 93 53 64
SOUTH INDIAN & SRI LANKAN
RESTAURANT
G2,21-23
68159 Mannheim
Mobil:0173 68 28 990

மளிகைப் பொருட்களுக்கும் நாடுங்கள்
Ludwigshafen
Schulstr 7-9
67059 Ludwigshafen
Tel: 0621 545 44 276
Mannheim
S1 -11
68161 Mannheim
Tel: 0621 862 43 212
info@asian-afro.de
S.J ASIAN - AFRO STORE

# அன்றாட பொருட்களில் ஆபத்து விளைவிக்கும் பொருட்கள் உள்ளதா?






அன்றாடப் பொருட்கள் உயிரைக் கொல்லுமா? எதைச் செய்தாலும் அளவோடு செய்ய வேண்டும். இது எல்லோருக்குமே தெரிந்த ஒரு விஷயம் தான். நாம் கையாளும் ஒவ்வொரு பொருட்களிலும் நாம் கவனமாக இருக்கிறோம். கவனத்திற்கு முக்கியக் காரணம் ஆபத்து நமது உடலுக்கும், உயிருக்கும் வந்துவிடக்கூடாது என்பதால் தான். விஷம் என்று குறிப்பிடப்பட்டு உட்கொள்ளப்படும் அல்லது பயன்படுத்தப்படும் பொருட்கள் மட்டுமே ஆபத்து விளைவிக்கும் என்று அர்த்தமில்லை. அவைத் தவிர நாம் சாதாரணமாக பயன்படுத்தும் பல பொருட்களில் உயிரைப் போக்கும் அளவிலான ஆபத்துக்கள் நிறைந்துள்ளன என்று சொன்னால் நம்புவீர்களா? என்ன நண்பர்களே, நம்ப மாட்டீர்களா? சரி, அப்படி என்றால் கண்டிப்பாக தொடர்ந்து படியுங்கள்.

சரி நாம் அன்றாடம் பாவிக்கும் அல்லது செய்யும் விஷயங்களில் அப்படி என்ன தான் ஆபத்து இருக்கிறது என்று பார்ப்போம். முதலாவதாக நாம் எல்லோருமே விரும்பிக் குடிக்கும் கோப்பியை (coffee) எடுத்துக்கொள்வோம். பொதுவாக தினமும் ஒன்றிலிருந்து ஐந்து கப் கோப்பி குடிப்பவர்கள் இருப்பார்கள். ஆனால் இதுவே 70 கப் கோப்பி குடித்தாலே போதுமாம், அதில் உள்ள cafeeine ஒரு 70 கிலோ எடையைக் கொண்ட ஒரு மனிதனின் உயிரைப் பறித்துவிடும். அது ஏனென்றால், 70 கப் கோப்பியில் உள்ள caffeinel உட்கொண்ட விளைவினால் உங்களின் இதயம் உடனடியாக நின்றுவிடுமாம்.

அடுத்ததாக உங்களில் சிலரோ, பலரோ விரும்பிக் குடிக்கும் மதுவில், அதாவது alcoholஇல் கூட ஆபத்து இருக்கிறது. தொடர்ந்து 13 ஷொட்ஸ் மதுவைக் குடித்தாலே உங்கள் உயிருக்கு ஆபத்து. அது ஏனென்றால் இதன் விளைவாக உங்கள் மூளையில் உள்ள சில முக்கியப் பகுதிகள் செயலிழந்துவிடும். உதாரணத்திற்கு, உங்கள் உடலின் முக்கியச் செயல்பாடுகளான சுவாசித்தல் மற்றும் இதயத் துடிப்பு ஆகியவற்றிற்கான செயல்பாடு நிறுத்தப்பட்டுவிடும். எனவே இதன் விளைவாக நீங்களும் இறந்துவிடுவீர்கள். அட மது குடிப்பதால் மட்டும் தான் ஆபத்து என்று நினைக்கின்றீர்களா? இல்லவே இல்லை! அதிகப்படியான தண்ணீர் குடிப்பதும் ஒருவகையில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதுதான். 6 லிட்டருக்கு அதிகமாக தண்ணீரை ஒரே நேரத்தில் குடிக்கும்போது அவை மூளையின் செயல்பாடுகளில் பாதிப்பினை ஏற்படுத்தி தலைவலி உள்ளிட்ட சில தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தும். அப்படியென்றால் தண்ணீர் குடிப்பதை விட்டுவிடலாமா? இல்லவே இல்லை! ஏனென்றால் அதிலும் பிரச்சினை உள்ளது. தண்ணீர் குடிக்காமல் விட்டாலும், அதிகப்படியான உப்பு கலந்த உணவினை எடுத்துக்கொண்டாலும் hypernatremia எனும் நிலைமை உண்டாகும். இதனால் கோமாக்கு போவது மட்டும் இல்லாமல் இறந்து போகவும் முடியுமாம்.

பழங்களில் ஏதாவது ஒன்று உயிருக்கு ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்துமா என்று கேட்டால், அதற்கு உடனடியாக கையை உயர்த்தி பதில் சொல்லும் பழம் சேலாப்பழமாக (cherry) தான் இருக்கும். சேலாப்பழத்தை சாப்பிடுவதில் ஒரு பிரச்சனையும் இல்லை, ஆனால் தப்பித் தவறி அந்தப் பழத்தின் கொட்டையை சாப்பிடுவது, அதாவது அதைக் கடித்து உடைத்து சாப்பிடுவது என்பது சற்று ஆபத்தானது தான். அது ஏனென்றால், அதனுள் சயனைட் (Cyanide) உள்ளடங்கியுள்ளது. குறிப்பாக இந்தச் சயனைடினுள் காணப்படும் Cytochrome C oxidase எனப்படும் நொதியம் அதாவது enzyme நாம் உட்கொள்ளும் ஆக்சிஜனை கிரகிக்க முடியாமல் செய்துவிடும்.

ஆக்சிஜன் என்று சொல்லத் தான் நினைவுக்கு வருகிறது. சராசரி கடல் மட்டத்தில் இருந்து 8000 அடிகளுக்குமேல் அதாவது சுமார் 2400 மீட்டருக்கு மேல் ஒரு மலையில் மேல் நோக்கிச் சென்றால், நம் சுவாசத்திற்குத் தேவையான அளவிற்கு ஆக்சிஜன் கிடைப்பதில்லை. இதனை "இறப்பிற்கான இடம்" அல்லது (Death Zone) என்று அழைப்பார்கள். இன்னும் கூறப்போனால், உயரமாக இருப்பதுகூட ஒருவகையில் ஆபத்துதான். என்ன நண்பர்களே? இதை நான் நகைச்சுவைக்காகக் கூறவில்லை, உண்மையிலேயே உயரமாக இருப்பதும் ஆபத்துதான்.

1930ம் ஆண்டு காலகட்டங்களில் வாழ்ந்த திரு. Robert Pershing Wadlow சுமார் 8 அடி 11 இஞ்ச் அதாவது 2,72 மீட்டர் வரை உயரமாக வளர்ந்தவர். இந்த அளவுக்கதிகமான உயரத்தினால் அவரின் இரத்த ஓட்ட அமைப்பு மற்றும் எலும்புகள் அதிகப்படியான அழுத்தத்தினை தாங்க வேண்டியிருந்தது. இதனால் அவர் தனது 22 ஆவது வயதிலேயே உயிரிழந்தார். இதுகுறித்து ஆய்வு செய்த ஆராய்ச்சியாளர்கள், ஐந்து அடிக்கு மேல் 152 சென்டிமீட்டருக்கு மேல் வளரும் ஒவ்வொரு இஞ்ச் உயரமும் அவர்களின் வாழ்நாளில் சுமார் 1.3 ஆண்டுகளை குறைக்க வாய்ப்புகள் உள்ளது என்று கூறுகின்றார்கள்.

நீங்களும் என்னைப் போல் ஒரு சாக்லேட் பிரியனா? அப்படி என்றால் இதைக் கேளுங்கள்! நீங்கள் ஒரே தடவையில் 85 சாக்லேட் பார்களை உட்கொண்டால் உங்களுக்கு இறப்பு நிச்சயம்.

இதற்குக் காரணம் சாக்லெட்டில் காணப்படும் theobromine எனப்படும் வேதிப்பொருள் தான்.

தொடர்ச்சி 32 ம் பக்கம்



## ஊடகத் திரு எஸ்தி 50 +
## நூல் வெளியீட்டு விழா

வாழ்ந்து கொண்டிருக்கும் இலங்கையின் அதிமூத்த ஊடகவியலாளர்களுள் ஒருவரும், பத்திரிகை வானொலி தொலைக்காட்சி சஞ்சிகை என்னும் சகல ஊடகப்பரப்புகளிலும் ஐம்பது ஆண்டுகளைத் தாண்டியும் தொடர்ந்து பணியாற்றி வருபவரும் கனடாவிலிருந்து கடந்த 29 ஆண்டுகளாக மாதம் தவறாது வெளிவந்து கொண்டிருக்கும் 'தமிழர் தகவல்' இதழின் முதன்மை ஆசிரியருமான
திரு.எஸ். திருச்செல்வம் (எஸ்தி) அவர்களின்

ஊடக ஆளுமைகளை எடுத்தியம்பும் ஐம்பது துறைசார் பிரமுகர்களின் கட்டுரைகளைத் தாங்கி
ஊடகத்திரு எஸ்தி 50+




**நூல் வெளியீட்டு விழாவுக்கு வருகை தருமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

நிகழிடம்: Harrow Civic Centre (Council Chamber)
நிகழ்காலம்: 2019 அக்டோபர் 13, ஞாயிற்றுக்கிழமை
நிகழ்பொழுது: பிற்பகல் 6:00 மணிமுதல் 21:00 மணிவரை
விழா ஏற்பாட்டாளர்கள்

ஈ.கே. ராஜகோபால்
077 353 46890
030 8767 8004

பிறேம் சிவகுரு
077 7931 691755
mediaman2004@gmail.com

editor@londonputhinam.co.uk




## இரா.செங்கதிர் இசையில் "தாகம்" இசைப் பேழை வெளியீட்டுவிழா








யேர்மனியில் 08.09.2019 ஞாயிறு தமிழர் அரங்கத்தில் நடைபெற்ற இரா.செங்கதிர் இசையில் தாகம் இசைப் பேழை வெளியீட்டுவிழா சிறப்பாக இடம்பெற்றது. விழாவில் இருந்து சில காட்சிகள்.

31 ம் பக்கத் தொடர்ச்சி....
### அன்றாடப் பொருட்கள் உயிரைக் கொல்லுமா?.

சரி கடைசியாக இன்னும் ஒரே ஒரு விஷயத்தைப் பற்றி கூறுகின்றேன் கேளுங்கள்: இசை... இசை பிடிக்காதவர்கள் இந்த உலகிலேயே இருக்க மாட்டார்கள். அதுவும் என்னை எடுத்துக் கொண்டால், நான் காரில் போகும் போது சத்தமாக பாடல்களைக் கேட்டுக் கொண்டு போவேன். ஆனால் உங்களுக்கு ஒன்று தெரியுமா? அதிக சத்தத்தில் பாடல்களைக் கேட்பது ஆபத்தானது. குறிப்பாக 185 டெசிபெலுக்கு அதிகமாக நாம் ஒலியினைக் கேட்டுக்கொண்டே இருக்கும்போது நமது உடலின் நுரையீரல் மற்றும் இதயத்தில் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. ஆனால், நண்பர்களே பயப்பட வேண்டாம். நமது வீடுகளில் பாவனையில் உள்ள ஒலிப்பெருக்கிகளால் அதாவது loudspeakers ஆல் இப்படி சத்தத்தை மிகைப்படுத்த முடியாது.
அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பதற்கு இன்று நான் பல விதமான உதாரணங்களை கூறி இருந்தேன். எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh





# திருமந்திரமும் வாழ்வியலும் 42

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

**இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.**




மானிடப் பிறவி எடுத்த ஆன்மாக்களால் (மனிதர்களால்) செய்யக் கூடாத உயிர்க் கொலை, பெண் இச்சை (காமம்), கள் உண்ணுதல், திருட்டு, பொய் பேசுதல் ஆகிய ஐந்து செயல்களை அறநூல்களும், சமயநூல்களும் பஞ்சமா பாதகங்கள் எனக் கூறுகின்றன. திருவள்ளுவர் திருக்குறளில் 10 குறள்கள் அடங்கிய அதிகாரங்கள் 33 - கொல்லாமை, 92 - வரைவின் மகளிர், 93 - கள்ளுண்ணாமை, 29 - கள்ளாமை பற்றி மிகத் தெளிவாக, குறிப்பாக இவற்றால் வரும் தீமைகள் பற்றிக் கூறியுள்ளார்.

திருமூலநாயனாரும் திருமந்திரத்தில் பஞ்சமா பாதகங்கள் செய்யாதிருத்தல் பரமானந்தம் எனக் கூறும் பாடல் எண் 200
“கொலையே களவுகள் காமம் பொய்கூறல்
மலைவான பாதகமாம் அவை நீக்கித்
தலையாம் சிவனடி சார்ந்துஇன்பம் சார்ந்தோர்க்கு
இலையாம் இவைஞானா னந்தத்து இருத்தலே”

உயிர்க்கொலை, திருட்டு, பெண் இச்சை, பொய் பேசுதல், கள் உண்ணுதல் ஆகிய ஐந்தும் மிகப் பெரும் தீச் செயல்களாகும். இந்தத் தீச்செயல்களை விட்டொழித்துத், தலைவனாம் சிவபெருமான் திருவடித் துணை நாடி இன்புற்று இருப்பவர்களுக்கு வேறு வகைத் துன்பங்கள் இல்லை. சித்த சமாதியில் இவர்கள் ஞானானந்தம் அடைந்திருப்பர்.

கொல்லாமை பற்றி திருமந்திரம் பாடல் எண் 197
“பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர்
மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்
நற்றார் நடுக்கற்ற தீபமும் சித்தமும்
உற்றாரும் ஆவி அமர்ந்திடம் உச்சியே”

பற்றிக் கொள்ள வேண்டிய உயர்ந்த ஞானத் தலைவனான சிவபெருமானுடைய பூசைக்கு உகந்த பல மலர்களில் உயர்ந்த மலர் இன்னொரு உயிரைக் கொல்லாமையாகிய சிறந்த மலர் மாலையே ஆகும். ஒன்றிய மன உறுதியே பூசைக்கேற்ற தீப ஒளியாகும். உணர்ந்தறிந்து இறைவனை வைத்து வழிபடும் உயிர் விழங்கும் இடம் தலை உச்சியாகும்.

வதைப்பவர் வதைபடுவர் எனக் கூறும் திருமந்திரம் பாடல் எண் 198
“கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லடிக் காரர் வலிக்கயிற்றால் கட்டிச்
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே”

கொல், வெட்டு, குத்து என்று வெறி கொண்டு திரியும் விலங்கைப் போன்ற கொடியவர்களை வலிமை பொருந்தியவனான எமனின் தூதர்கள் வலிமையான கயிறு (பாசக் கயிறு) கொண்டு கட்டிக் கொண்டு போய் “செல்!”, “நில்!” என்று அதட்டி மிரட்டிப் பற்றி எரியும் நரகத் தீயில் “கிடப்பாயாக” என்று அதனுள் தள்ளி வதைப்பார்கள்.
காமம் (பிறன்மனை நயவாமை) பற்றி திருமந்திரம் பாடல் எண் 201

“ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறும் காளையர்
காச்ச பலாவின் கனி உண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்திற்கு இடர்உற்ற வாரே”

அன்புடைய மனைவி வீட்டில் இருக்க மற்றொருவருக்கு உரிமையான பிறன் மனைவியை விரும்பும் இளைஞர் செயல் வீட்டில் காய்த்துத் தொங்கும் பலாப்பழத்தைத் தின்ன முடியாமல் எங்கோ பழுத்துக் கிடக்கின்ற ஈச்சம் பழத்திற்கு ஆசைப்பட்டு அவதிப்படுவது போலாகும்.

மாதர் ஆசை மரணத்தின் அழைப்பு எனக் கூறும் திருமந்திரம் பாடல் எண் 208
“கோழை ஒழுக்கம் குளம்மூடு பாசியில்
ஆழ நடுவார் அளப்புறு வார்களைத்
தாழத் துடக்கித் தடுக்ககில் லாவிடில்
பூழை நுழைந்தவர் போகின்ற வாறே”

பெண்களோடு கூடிப் பெறுவதே இன்பம் என்று ஓயாது உயிர்ச் சக்தியை வீணாக்கி வாழ்பவர் இதைத் தடுத்து நிறுத்தி அடக்காது விட்டு விட்டால் விரைவில் பாவப் புதைகுழியில் விழுந்தவர் போல் அழிவர்.
காமமும் கள்ளும் கயவர்க்கானது எனக்கூறும் திருமந்திரம் பாடல் 326

“காமமும் கள்ளும் கலதிகட்கே ஆகும்
மாமல மும்சம யத்தில் மயல்உறும்
போமதி யாகும் புனிதன் இணைஅடி
ஓமயஆனந்தத் தேறல் உணர்வுண்டே”

பெண் இச்சையும், கள் உண்ணுவதும் கீழ் மக்களாகிய தீயவர்களுக்கே ஏற்றதாகும். தான் என்ற முனைப்பாகிய ஆணவமும் சமயத்தில் மயக்கும், புத்தி கெட்டுப் போகும். எனவே பரம்பொருளின் தூய திருவடிகளாகிய “ஓம்” என்னும் பிரணவப் பொருளான ஆனந்தத் தேனமுதை உண்டு களித்து உணர்வு பெறுவீராக.
கள்ளுண்ணாமை பற்றிக் கூறும் திருமந்திரப் பாடல் 324

“கழுநீர்ப் பசுப்பெறின் கயந்தொறும் தேரா
கழுநீர் விடாய்த்துத்தங் காயம் சுருக்கும்
முழுநீர்க் கள்ளுண்போர் முறைமை அகன்றோர்
செழுநீர்ச் சிவன்தன் சிவானந்தத் தேறலே”

பசுகூடக் கழுநீர் (அரிசி கழுவிய நீர்) கிடைக்கும்வரை குளங்களைத் தேடி அலையாது தாகம் பொறுத்துக் கொண்டு காத்திருக்கிறது. பாவி மனிதன் கள் உண்டு கெடுகிறானே, மிருகத்தை விடக் கேவலமாக! என்னே அறியாமை!








# வெற்றிமணி வெள்ளிவிழாவில் வழங்கப்பட்ட வெற்றிமணி விருதுகள்

யேர்மனியில் 25 ஆண்டுகளைக் கடந்து இந்த வருடம் 30 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாட இருக்கும் ஆடற் கலாலயத்தின் அதிபர் ஆசிரியை **ஆடற்கலைமணி திருமதி றெஜினி சத்தியகுமார்** அவர்களுக்கு வெற்றிமணி விருது வழங்கி கௌரவித்தது.



ஆடற்கலைமணி திருமதி றெஜினி சத்தியகுமார் மாணவிகள்



நாட்டியக்கலைமணி
திருமதி அமலா அன்ரனி சுரேஸ்குமார்



விளையாட்டுப் பயிற்சியாளர்.
திரு.சோமசுந்தரம்.சசிமோகன்

யேர்மனியில் 25 ஆண்டுகளைக் கடந்தும், தாயகத்தில் அரம்பித்து 30 ஆண்டுகளை நிறைவு செய்தும் பயணிக்கும் “திருத்திய நாட்டியாலயத்தின் அதிபரும், ஆசிரியருமான நாட்டியக்கலைமணி திருமதி அமலா அன்ரனி சுரேஸ்குமார் அவர்களுக்கு வெற்றிமணி விருது வழங்கி கௌரவித்தது.

திரு.சோ.சசிமோகன் சோஸ் நகரத்தில் உதை பந்தாட்ட பயிற்சியாளராக, நடுவராக 15வருடங்களுக்கு மேலாக பணிபுரிபவர் வெற்றிமணிக்கு ஆரம்ப காலத்தில் அபூர்வ சகோதர விளையாட்டு கழகம் மூலம் பல நடன நிகழ்சியைத் தந்தவருமான இவர் யேர்மன் மக்களுக்கும் பிறநாட்டவருக்கும் ஒருங்கிணைப்பாளராக செயல்படுபவர். அவரை வெற்றிமணி விருது வழங்கி கௌரவித்தது.

திரு.வி.சபேசன் அவர்கள் டோட்மூண்ட் நகரத்தில் தமிழர் அரங்கம், ஆடல் அரங்கம் இவற்றை அமைத்து, தமிழும் கலையும் வளர கைகொடுத்து வருபவர். கடந்த 2018 ஆம் ஆண்டு முதன் முதல் தமிழர் தெருவிழாவை யேர்மனியில் நடத்தி வெற்றி கண்டு இவ்வருடமும் சிறப்புற நடத்திய முயற்சியாளரான இவருக்கு வெற்றிமணி விருது வழங்கி கௌரவித்தது.

களனி பல்கலைக்கழகத்தின் ஓவியப்பட்டதாரியும் லண்டனில் கடந்த வருடம் நூற்றுக்கு மேற்பட்ட ஓவியங்களை வரைந்து காட்சிப்படுத்தி அவற்றில் கிடைத்த பணத்தை தாயகத்தில் மாணவர்களுக்கு பகிர்ந்தளித்த ஓவியருமான திருமதி சந்திரவதனி ஸ்கந்தகுமாரா் அவர்களுக்கு வெற்றிமணி விருது வழங்கி கௌரவித்தது.

யேர்மனியில் பல பாகங்களிலும் பத்திரிகை, முத்திரை, காசு, செப்பு பாத்திரங்கள் எனப் பல பழைய பொருட்களையும் காட்சிப்படுத்தி சிறந்த ஆவணத் தொகுப்பாளராகத் திகழும் திரு.அன்ரன் அவர்களுக்கு வெற்றிமணி விருது வழங்கி கௌரவித்தது.



முயற்சியாளர் திரு.வி.சபேசன்



ஓவியர்.சந்திரவதனி ஸ்கந்தகுமார்



இளம் எழுத்தாளர் ராம் . பரமானந்தன்

வெற்றிமணியில் தொடர்ந்து எழுதிவரும் இளம் எழுத்தாளரும் பல்கலைக்கழக மாணவருமான செல்வன் இராம் பரமானந்தன் அவர்களுக்கு வெற்றிமணி விருது வழங்கி கௌரவித்தது.

திரு.கனீந்திரன் அவர்கள் அன்று முதல் இன்று வரை கணனி மூலம் பல தொலைத் தொடர்பு ஒலி ஒளி அமைப்பில் வல்லு நராகவும், இலத்திரனியல் செயற் பாட்டில் ஆர்வமிக்க வராகவும் திகழ்ந்து வந்துள்ளார்.இவருக்கு வெற்றிமணி விருது வழங்கி கௌரவித்தது.

**வாசகர் வட்ட விருது:**



பண்ணாகம் இணையத்தளம்.திரு.க.கிருஷ்ணமூர்த்தி

தாயகத்தில் பத்திரிகை, சஞ்சிகை இவற்றிற்கு அன்று வாசகர் கடிதம் பகுதி, வாசகர் வட்டம் என இருந்து வந்ததை நாம் அறிவோம். யேர்மனியில் திரு.க.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 1992 ஆம் ஆண்டு முதல் ஐரோப்பிய வாசகர் வட்டத்தை அமைத்து 29 சஞ்சிகைகளுக்கு மேல் மாதம் தோறும் வாசித்து கருத்துப் பரிமாறியவர். இலக்கு பத்திரிகையின் ஆசிரியராகவும் சில காலம் பணிபுரிந்தவர். இவருக்கு வெற்றிமணி வாசகர் வட்ட விருது வழங்கி கௌரவித்தது. தொடர்ச்சி 35ம் ...



# நிலவில் நீயும் இறங்கலாம், நியமாகும் உன் கனவு இதோ.





சிவவினோபன்.

மகனே இதோ பார் அந்த நிலவு, நாம் வீடு செல்லும் வரை எங்கள் பின்னாலேயே வரும் என்று தந்தை சொல்லி மிதிவண்டியில் ஏற்றிச் சென்ற ஞாபகங்கள் உங்களுக்கு உண்டா? மிதிவண்டியில் இருக்கும் போது ஏற்படும் அந்த வலிகூட சுகமாக இருக்கும், அந்த நிலவு என்னையே பின்தொடர்ந்து வருகின்றது என்று எண்ணும் போது. ஆனால் அந்தச் சின்னப் பருவத்தில் இருந்த ஆசை, வளர வளர நிலவு அருகில் வராது என்ற நிதர்சனம் புரிவதால் அற்றுப் போய்விடும். ஆனால் இதோ இப்போது ஆசைப்படுங்கள் உங்களை நான் நிலவிற்கு கூட்டிச் செல்கின்றேன்.

நிலவில் பாட்டி உள்ளாள், அவள் எப்போதும் அங்குவந்து வடை சுட்டு விற்பாள், என்ற சின்ன வயதுக்கு கதைகளில் எத்தனை பெரிய விஞ்ஞானம் ஒளிந்துள்ளது தெரியுமா? ஆம், அது ஒரு விஞ்ஞான உண்மை, நிலவு எப்போதும் பூமிக்கு ஒரே பக்கத்தைத் தான் காட்டும். அதனால் நிலவின் மீது உள்ள மலை மேடு, பள்ளம் குழி என்பன சேர்ந்து வரையும் ஓவியம் ஒரு வயதான பாட்டி குந்தி இருப்பது போல அமைந்திருக்கும். அந்த உருவம் எப்போதும் பூமியில் இருந்த பார்க்கும் போது தெரியும் என்று தமிழன் அன்றே கண்டுபிடித்துள்ளான். அதன் அர்த்தம் அன்றே தமிழனிற்கு நிலவு பூமிக்கு ஒரு பக்கத்தை மட்டுமே காட்டுகின்றது என்ற உண்மை தெரிந்திருக்கின்றது. அது எப்படி சாத்தியம் என்றால், சந்திரன் தன்னைத் தானே சுளர 28 நாட்கள் எடுக்கின்றது. பூமியைச் சுற்றிவரவும் 28 நாட்கள்தான் எடுக்கின்றது. அதனால் எப்போதும் சந்திரனின் ஒரே ஒரு பக்கம் தான் பூமிக்குத் தெரிகின்றது.

அது இருக்கட்டும் பூமியில் இருந்து நிலவிற்கு எப்படிச் செல்வது என்று சொல்லும்படி, கேட்கும் உங்கள் குரல் எனக்கு கேட்கின்றது. அதற்கும் வழிவகுத்துக் கொடுத்துள்ளான் தமிழன் என்றால் அதைத் தெரிந்துகொள்ள ஆசைகொள்வீர்களா? மாட்டீர்களா? ஆம் என்னிடம் பூமியில் இருந்து நிலவிற்குச் செல்ல ஒரு விமானம் செய்வதற்கான அடிப்படை அமைப்புப் புத்தகம் உள்ளது. இதன் மறுபாதி யாரிடம் உள்ளது என்று எனக்குத் தெரியும். அதுவும் கிடைத்தால் நாம் நாளையே விண்வெளிக்குச் சென்று திரும்பலாம். நிலவுக்கும் சென்று திரும்பலாம்.

அந்த மறுபாதி வேறு யாரிடமும் இல்லை உங்களிடம் தான் உண்டு. ஆம் உங்கள் வீட்டில்த் தான் உண்டு. உங்கள் வீட்டில் உங்கள் அம்மா அப்பா அல்லது தாத்தா பாட்டி யாராவது பழைய தமிழ்ப் புத்தகம் ஏதாவது வைத்திருந்தால், அதை எடுத்துப் பாருங்கள். அதில்த் தான் அந்த விஞ்ஞான வாய்ப்பு விபரிக்கப்பட்டுள்ளது. இதை எனக்கும் முதல் நம்பவே முடியவில்லை, ஆனால் என் வீட்டில் என்னுடைய அம்மா வைத்திருந்த ஒரு "நிலவு நாட்குவளை" என்ற புத்தகத்தை, ஒய்வு நேரத்தில்ப் பொழுது போகாமல் இருக்கும் போது எடுத்துக் படித்தேன் அதை பார்த்து நான் வியந்து போனேன். அதில் இருந்த விடையங்களை சொன்னால் நீங்களும் ஆச்சரியப்படுவீர்கள். அரசன் ஏன் கிரீடம் அணிகின்றான், விமானம் பறப்பது எமக்குத் தெரியும் ஆனால் அதை எப்படி மிதக்க வைக்கலாம் என்று எல்லாம் சொல்லப் பட்டிருந்தது. இதோ அதை உங்களுக்கும் சொல்கின்றேன் கேளுங்கள்.

இதை வாசிக்கும் நீங்கள் 40 வயது தாண்டியவர் என்றால் உங்கள் குழந்தைகளையே அல்லது பேரப்பிள்ளைகளையோ கூப்பிட்டு அருகில் வைத்து வாசிக்கும் படி அதில்ப் போடப்பட்டிருந்தது. காரணம் அந்தப் புத்தகத்தை வாசிப்பது பெரியவர்களுக்கு இலகுவாக இருக்கும் ஆனால் புரிந்து கொள்வதற்கு இளையவர்களுக்கு இலகுவாக இருக்கும் என்று சொல்லப்பட்டிருந்தது. அரசன் தலையில் கீரிடம் அணியக் காரணம் கிரீடத்தில் இருந்து ஒரு அசரீதி கேட்டுக் கொண்டிருக்குமாம், அரசன் எந்த முடிவை எடுப்பது என்றாலும் அந்த அசரீதியைக் கேட்டுதுத் தான் எடுப்பானாம். (அசரீதி என்றால், யாருமே இல்லாமால் சுயமாகத் தோன்றும் ஒரு ஒலி.) இதைக் கேட்கும் போது ஏதோ மாயாவிக் கதை கேட்பதுபோல இருக்கும். ஆனால் அதை விஞ்ஞானமாக சிந்தித்துப் பாருங்கள். இப்போது நாம் பாவிக்கும் HeadPhone எப்படி இருக்கின்றது, காதில்த் தொடங்கி இரண்டு காதுகளையும் இணைத்து தலைமேல் ஒரு பட்டையாக பதிந்துள்ளது. BiggBoss நிகழ்ச்சியில் கமல் எதை பேசுவது என்றாலும் அவர் காதில் ஒலிக்கும் வார்த்தையைக் கேட்டே முடிவெடுப்பார். அந்த ஒலி எங்கிருந்து வருகின்றது?

தொடர்ச்சி 39ம் பக்கம்

34ம் பக்கத் தொடர்ச்சி

**வெற்றிமணி அபிமானி விருது:**

திருமதி இந்து தெய்வேந்திரம் அவர்கள் வெற்றிமணியின் எந்த விழாக்கள் என்றாலும் எவ்வித பயனும் கருதாது முன்னின்று உதவிபுரிபவர். இவர் சோஸ்ட் தமிழ்க்கல்வி கலாசார அமைப்பின் அதிபரும், ஆசிரியரும் வாழ் நாளில் பெரும்பகுதியை இனம், மொழி, கலை, கலாசாரம் என அர்ப்பணித்தவரும் ஆவார். இவர் வெற்றிமணி மீது கொண்டுள்ள அபிமானம் சொல்லற்கரியது.



ஆசிரியர் திருமதி இந்து தெய்வேந்திரம்

அவர்களுக்கு வெற்றிமணி அபிமானி விருது வழங்கி கௌரவித்தது.

**வெற்றிமணி மணி மகுடம் விருது:**

அறிவிப்பாளர் திரு.சி.சக்திவேல

சிவகுருநாதன் சக்திவேல் அவர்கள், வெற்றிமணியின் முதலாவது (1995) ஆண்டு விழா முதல் இன்று வரை வெற்றிமணி விழாக்களில் தொடர்ந்து




பணியாற்றும் சந்தர்ப்பத்தை வெற்றிமணி வழங்கிவந்தது. இப்பணியினை இன்முகத்துடன் ஏற்று சிறப்பாகத் தொகுத்து வழங்கிவரும் எமது ஆஸ்த்தான அறிவிப்பாளர் திரு.சி.சக்திவேல் அவர்களுக்கு வெற்றிமணி மணி மகுடம் விருது வழங்கி கௌரவித்தது.


www.Konessfotos.de




உங்கள் அபிமான வியாபார
ஸ்தாபனங்களில் கிடைக்கும்
AGAM
Healthy and tasty Foods
அ.க.ம்
NEW
ARRIVAL
அகத்தின் சுவை
சமையலில்
தெரியும்
இனிய தீபாவளி
நல்வாழ்த்துகள்
Happy Diwali
StaR-Impex
www.star-impex.de

# ”உன்னோடு வாழாத வாழ்வென்ன வாழ்வு”

## இந்த பாடலை அஜித் ஷாலினிக்கு தூது அனுப்பியது உண்மை தான்.







**”கலைமாமணி” திரு. பரத்வாஜ் அவர்களுடன் ஒரு நேர்காணல்.**

உனக்கு தெரியுமா ?
அனைவருக்கும் வணக்கம்,
**நான் உங்கள் பிரபாலினி பிரபாகரன்**

23 வருடங்கள் ஜெர்மனியில் வாழ்ந்த எனக்கு வெற்றிமணி பத்திரிக்கையில் ஒரு தனி பிரியம் என்பது உண்மை தான். இன்று அமெரிக்காவில் வாழ்ந்தாலும் எனக்கு என் அப்பா மாதாமாதம் வெற்றிமணி பத்திரிகையை அங்கேயே தபால் மூலம் அனுப்பி வைப்பார் என்றால் பாருங்களேன். பள பளக்கும் வண்ணமான பக்கங்கள், அதை தொடும் பொழுது வழுவழுக்கும் காகிதம், அதுவும் இலவசம் வேற. தவறாமல் வாசிப்பேன். இன்று வெள்ளிவிழா கொண்டாடும் வெற்றிமணி பத்திரிகையில் எனது பதிவு இடம்பெறுவதை நினைத்து நன்றியுடன் பெருமிதமடைகிறேன்.

எனது இசை வாழ்வில் கலை வாழ்வில் எத்தனையோ இந்திய, ஈழத்து மற்றும் பல வேற்று நாட்டு கலைஞர்களை சந்திக்கவும் அவர்களுடன் பழகவும் அவர்களிடமிருந்து பலதை கற்றுக்கொள்ளவும் வாய்ப்புகள் எனது அம்மா அப்பா புண்ணியத்தில் கிடைக்க பெற்றேன். அவற்றை உங்களுடன் பகிர போகிறேன்.

சில நாட்களுக்கு முன் இசையமைப்பாளர் ”கலைமாமணி” திரு. பரத்வாஜ் அவர்களை பல வருடங்களுக்கு பின் சந்தித்தேன். பல சுவாரசியமான விடயங்களை பகிர்ந்து கொண்டோம். வெற்றிமணி பத்திரிகையை அவர் கையில் கொடுத்து அவரின் ஆசியை பெற்றோம்.

அவருக்கு பத்திரிகையின் தரம் மிகவும் பிடித்திருந்தது. மிக்க மகிச்சியுடன் வாழ்த்தினார். அத்துடன் மூத்த கலைஞர்களை மறக்காமல் வெற்றிமணி பத்திரிகை அவர்களுக்கு ”வாழ்நாள் சாதனையாளர் விருதுகள்” வழங்குவதை மிகவும் பாராட்டினார். மிகவும் மகிழ்ச்சியுடன் திரு. பரத்வாஜ் அவர்களின் நேர்காணலுடன் எனது புதிய பயணத்தை வெற்றிமணியில் ஆரம்பிக்கிறேன்.



**”கலைமாமணி” திரு. பரத்வாஜ்**

பெயர்: கலைமாமணி திரு. ரமணி பரத்வாஜ்
பிறப்பிடம்: திருநெல்வேலி, தமிழ்நாடு
வளர்ந்தது: டெல்லி தொழில்:
இசையமைப்பாளர் விருதுகள்:
கலைமாமணி விருது தமிழ் நாடு அரசு,

2 தடவைகள் Film Fare Award, ITFA Award, சினிமா எக்ஸ்பிரஸ் award மேலும் பல

1.இசையமைப்பாளராக வரவேண்டும் என்று ஆசைப்பட்டீர்களா? எப்படி ஆர்வம் வந்தது?

சின்ன வயதிலிருந்து இசையமைப்பாளராக வேண்டும் என்பது எனது பெரிய ஆசை, லட்சியம்.
நான் படித்தது chartered accountant ஆனால் அந்த படிப்பை நான் பயன்படுத்தியதே இல்லை.

கர்நாடக இசை, ஹிந்துஸ்தானிய இசை மற்றும் மேற்கத்திய இசையை கற்றுக்கொண்டேன். 7, 8 வருடங்கள் சினிமாவில் காலெடுத்து வைக்க மிகவும் போராடினேன். சின்ன சின்ன வேலைகள் கிடைத்தன. கூறும் படங்கள், விளம்பரங்கள், பக்தி பாடல்கள் என கிடைத்த எல்லாவற்றையும் மகிழ்ச்சியுடன் திருப்தியுடன் செய்தேன். அதன் பலன் தான் எனக்கு சினிமாவில் வாய்ப்பு கிட்டியது.

தொடர்ச்சி 38 ம் பக்கம்






37 ம் பக்கத் தொடர்ச்சி

2.பாரதிவாஜ் என்ற இந்த மாபெரும் இசையமைப்பாளருக்கு மிகவும் பிடித்த இசையமைப்பாளர் யார்? எந்த இசையமைப்பாளரை பிடிக்கும் என்று சொல்வது? எனக்கு பொதுவாக சகல கலைஞர்களையும் பிடிக்கும். ஒரு கலைஞனுக்கு இன்னொரு கலைஞனின் மனது உணர்வு இலகுவாக புரிந்துவிடும். ஒவ்வொரு பாடலும் ஒரு அற்புதமான படைப்பு. ஒவ்வொரு இசையமைப் பாளர்களின் இதயத்திலிருந்து அவர்களின் உணர்வுகளிலிருந்து பிறப்பவை. அவற்றை நான் மிகவும் ரசிப்பவன், மதிப்பவன். எனக்கு பிடித்த இசையமைப்பாளர்களை சொன்னால் இன்று இந்த நேர்காணல் நிறைவு பெறாது.

## ”உன்னை பார்த்த பின்பு நான்” நான் நானாகவில்லையே....

3. நீங்கள் இசையமைக்காத எந்த பாடல்கள் உங்களை மிகவும் மனதளவில் பாதித்தன? என்ன காரணம்?

ஒரு பாடலை உருவாக்கும் பொழுது எனது மனதுக்கு பிடித்தால் மட்டுமே ஒலிப்பதிவு செய்வேன். அந்த வகையில் நான் இசையமைத்த சகலதும் எனது மனதுக்கு நெருக்கமானவை தான். எனக்கு பெரிய அளவில் பெயரெடுத்த கொடுத்த பாடல்களில் முக்கியமாக தல அஜித் நடித்த ”காதல் மன்னன்” படத்தில் இடம்பெற்ற ”உன்னை பார்த்த பின்பு நான்” பாடலை குறிப்பிடலாம். மற்றும் மீண்டும் அஜித்குமார் படம் அமர்க்களம் படத்தில் இடம்பெற்ற ”சத்தம் இல்லாத தனிமை கேட்டேன்” மேலும் ஒவ்வொரு பூக்களுமே, தோழா தோழா தோழ் குடு, அவரவர் வாழ்க்கையில் ஆயிரம் ஆயிரம், ஓ போடு, ஆப்பிள் பெண்ணே நீதானோ, ஞாபகம் வருதே ஞாபகம் வருதே, உன்னை நான் உன்னை நான், சிரிச்சு சிரிச்சு வந்தான் சீனா தானா, ஒரு வார்த்தை கேக்க ஒரு வருஷம், பெட்ரோமாக்ஸ் லயிட்டுதான் வேணுமா இப்படி சொல்லிட்டே போகலாம். இதில் ”ஒவ்வொரு பூக்களுமே” பாடலை பாடியவருக்கும், எழுதியவருக்கு தேசிய விருதுகள் கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

4.தல என்று பாசத்துடன் அழைக்கப்படும் அஜித்குமார் நடித்த படங்களில் 6 படங்கள் இசையமைத்துளீர்கள்! குறிப்பாக அவர் தனது இன்றைய மனைவியுடன் ஷாலினியுடன் “அமர்க்களம்” படம் இணைந்து நடித்து கொண்டிருக்கும் தருணத்தில் உங்கள் பாடல்கள் தான் அஜித் அவர்கள் தூதாக பயன்படுத்தினாரென கேள்விபட்டேன். அதை பற்றி சொல்லுங்கள்.

ஆமாம், தல அஜித் நடித்த சுமார் 6 படங்களுக்கு இசையமைத்திருப்பேன். சகலதும் பெரும் வரவேற்புபெற்ற படங்களும் பாடல்களும் என்பதில் மிகவும் மகிழ்ச்சி எனக்கு. அமர்க்களம் படம் ஒரு பெரிய திருப்புமுனையாக அந்த படத்தில் இணைந்து வேலை பார்த்த பலருக்கு அமைந்தது. அஜித்குமார் மற்றும் ஷாலினிக்கு அந்த படம் வாழ்வின் திருப்புமுனையாக இருந்தது. அந்த படத்தில் ஒரு மிகவும் இனிமையான பாடல் ”உன்னோடு வாழாத வாழ்வென்ன வாழ்வு” எனும் பாடல். அது அவர்களுக்காகவே எழுதி இசையமைத்தது போல இருந்தது. அந்த படத்தில் வந்த கதைக்கு அமைந்தது என்பதை விட அவர்களின் நிஜமான வாழ்வின் சூழ்நிலைக்கு மிகவும் பொருந்தியது. ஆமாம் இந்த பாடலை அஜித் ஷாலினிக்கு தூது அனுப்பியது உண்மை தான்.

5.இதுவரை எத்தனை மொழிகளில் எத்தனை படங்களுக்கு சுமார் எத்தனை பாடல்கள் இசையமைத்திருப்பீர்கள்?

எனது முதல் படம் ஒரு தெலுங்கு படம்: 1993லிருந்து சினிமாதுறையில் இருக்கிறேன். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் ஆங்கில படங்களுக்கு இசையமைத்துளேன். நான் இசையமைத்த ஆங்கில animation படம் "the legend of budha" oscar விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட படமாகும். the lucky ducks எனும் ஒரு அமெரிக்க குறும்படத்துக்கு இசையமைத்துள்ளேன். மொழிகளை பற்றி சொல்ல வேண்டுமென்றால் 23 நாடுகளின் கலைஞர்களை இணைத்து செயல்படும் symphony of unity and love எனும் ஒரு multi national orchestrait ஒருங்கமைத் திருக்கிறேன் / conducted. இதுவரை சுமார் 100 திரைப்படங்களுக்கு இசை யமைத்திருப்பேன். நான் திரைப்படங்களுக்கு இசையமைப்பதற்கு முன்னரே 100க்கு மேற்பட்ட பக்தி பாடல்கள் ஆல்பம் செய்தபடியால் எனக்கு பாடல்களின் எண்ணிக்கைகள் சரியாக தெரியவில்லை.

6. இப்பொழுது சினிமாவுக்கு ஓய்வு கொடுத்து விட்டு பல சமூகத்திட்கு தேவையான விடயங்களை இசைவழி செய்து வருகிறீர்கள்.அவற்றை பற்றி சொல்லுங்கள்.

எனக்கு பல காலமாக என்னால் முடிந்த சிறிய உதவிகளை மக்களுக்கு செய்யவேண்டும் என்பது ஒரு ஆசை. சினிமாவில் மிகவும் வேலைப்பாடுகள் மத்தியில் அவற்றை செய்ய முடியவில்லை. என் மனதிருப்திக்கு மக்களுக்காக ஒரு community center மற்றும் ஒரு children's park கட்டி குடுத்தேன். எனது சொந்த மக்களுக்கு சுற்றாடல் சுகாதாரம் மேம்பட என்னால் முடிந்ததை செய்தேன். அவ்வளவுதான். உலகத்தில் பல ஊர்களுக்கு சென்று இசை நிகழ்ச்சிகளை செய்து வருகிறேன். எனக்கு மிகவும் மகிழ்ச்சியான விடயம் திருக்குறளை இசைவடிவில் இளம் சந்ததியினருக்காக இசையமைத்தது தான். உலக நாடுகளிலுள்ள 500கும் மேட்பட்ட சிறந்த கலைஞர்களை இணைத்து 13 மணிநேரங்களுக்கு திருக்குறளை இசையமைத்து வெளியிட்டுள்ளேன். இந்த ஆல்பம் தான் உலகின் மிக நீளமான பாடல் albumnkd பதிவாகியுள்ளது. இந்த ஓய்வை நான் மிகவும் மகிழ்ச்சியுடன் உணர்ந்தும் அனுபவித்தும் வருகிறேன்.

7.இன்று புதியவர்கள் பலர் இசையமைக்கிறார்கள், அவர்களின் பலம் என்ன? பலவீனம் என்ன? அவர்களுக்கு உங்கள் அறிவுரை என்ன?
பலம் பலருக்கு technology தெரியும், பலவீனம் அவர்களுக்கு தெரிந்தால் போதுமென நினைக்கிறேன். ஆனால் ஒன்று மட்டும் உண்மை: எல்லோரும் மிகவும் கடுமையாக உழைக்கிறார்கள். நான் அறிவுரை சொல்ல தேவையில்லை என நினைக்கிறன். காலம் அவர்களுக்கு நல்ல அனுபவத்தையும் அறிவுரைகளையும் கொடுக்கும்.

8 ஈழத்து கலைஞர்கள் மற்றும் ஈழத்து ரசிகர்களை பற்றி சொல்லுங்கள்.எங்கே சென்றாலும் ஈழத்து மக்கள் எனக்கு தரும் அன்பையும் மதிப்பையும் பார்த்து புத்துணர்வு கொள்வேன். உலகில் எத்தனையோ நாடுகளில் எனக்கு பல ஈழத்து சகோதரர்கள் நெருங்கிய நண்பர்களாக இருக்கிறார்கள். அதில் பல திறமையான கலைஞர்களும் அடங்குவார்கள். எங்களுக்கு கிடைத்த ஒரு கலைத்தளம் ஈழ மக்களுக்கும் அமைய வேண்டும். இலங்கையில் மற்றும் வெளிநாடுகளில் எத்தனையோ ஈழத்து சகோதரர்கள், கலைஞர்கள் எனது தோழர்கள் தான். அவர்களுடன் இணைந்து பல நிகழ்வுகளில் பணியாற்றியுள்ளேன்.

ஈழத்தின் மூத்த கலைஞர் ”ஈழத்து மெல்லிசை மன்னர்” M.P.Paramesh எனது நண்பர். அவரின் பாடல்களை மிகவும் ரசிப்பேன். வெற்றிமணி அவர்களின் வெள்ளிவிழாவில், M.P.பரமேஷ் அவர்கள் பொன்விழா காணும் காலத்தில் அவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்குவது மனதுக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. ஒரு கலைஞன் என்ற சார்பில் வெற்றிமணிக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

தொடர்ச்சி 39 ம் பக்கம்

JM
Milin Impex GmbH
மலிவான தரமான மளிகைப்பொருட்களின் மொத்த சில்லறை விற்பனையாளர்
இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்
தாயக மரக்கறிகள் பழவகைகள் மற்றும் உணவுப் பொருட்களை மொத்தமாக பெற்றுக்கொள்ள நாடுங்கள்
Tel: 0231 45 96 17
விபரங்களுக்கு


தரமும் மலிவும் ஒரே இடத்தில்
Web :www.milinimpex.de
எமது நிறுவனம் Mo-Sa 10.00 இருந்து 18.00 வரை உங்களுக்காகத் திறந்திருக்கும்
Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17/ 28 Fax: 0231 18 15 288








## “நெற்றிக்கண்“ திறக்கும் நயன்தாரா

நடிகை நயன்தாராவின் நடிப்பில் இந்த ஆண்டில் வெளியான விசுவாசம் படத்தை தவிர, ஐரா, மிஸ்டர் லோக்கல், கொலையுதிர் காலம் ஆகிய மூன்று படங்களும் தோல்வியைத் தழுவின. இதனால் ஒரு வெற்றியை தரவேண்டிய கட்டாயத்தில் அவர் இருக்கிறார். இந்த தருணத்தில் இயக்குனர் விக்னேஷ் சிவன் தயாரிப்பில் இயக்குனர் மிலிந்த் ராவ் இயக்கத்தில் தயாராகும் 'நெற்றிக்கண்' என்ற படத்தில் கதையின் நாயகியாக பார்வைத்திறன் சவால் உள்ளவராக நடிக்கிறார்..

இந்தப் படம் குறித்து இயக்குனர் மிலிந்த ராவ் தெரிவிக்கையில்,“ இந்தப்படத்தில் நடிகை நயன்தாரா கதையின் நாயகியாக நடிக்கிறார். பார்வை திறன் சவால் உள்ளவராகவும், துப்பறியும் நிபுணராகவும் நடிக்கிறார்.
இந்த படத்திற்கு 'நெற்றிக்கண்' என்ற தலைப்பு பொருத்தமாக இருக்கும் என்பதற்காக, அந்த தலைப்பை தங்களிடம் வைத்திருக்கும் கவிதாலயா நிறுவனத்திடம் பேச்சுவார்த்தை நடத்தி, அந்த தலைப்பையே பெற்றிருக்கிறோம்.” என்றார்.நடிகை நயன்தாரா தற்பொழுது தளபதி விஜயுடன் 'பிகில்' படத்திலும், சுப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் ஜோடியாக 'தர்பார் 'படத்திலும் நடித்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

35 ம் பக்கத் தொடர்ச்சி **நிலவிற்கு......**



அந்த ஒலி எங்கிருந்து வருகின்றது? உங்கள் அருகில் இருக்கும் பிள்ளைகளிடம் கேளுங்கள் அவர்கள் சொல்லுவார்கள்.

அது ஒரு பெரிய குழு, அவர்கள் பின்னால் இருந்து இந்த நிகழ்ச்சியை நடத்துவார்கள் அவர்கள் சொல்வது இந்த HeadPhone வழியாக கமல் ஹாசன் அவர்களிற்கு வரும் அதைக் கேட்டே அவர் பேசுவார் என்று இன்றைய இளையோருக்குத் தெரியும். அதே போன்றுதான் அன்று அரச சபையிலும் நடந்ததாகச் எழுதப் பட்டிருந்தது. இதே போன்று ஒரு விமானம் பறப்பது எல்லோருக்கும் தெரியும் ஆனால் ஒரு விமானத்தை மிதக்கவைக்கவும் முடியும். அது எப்படி செய்வது என்றும் அதில் எழுதப் பட்டிருக்கின்றது. அதில் விபரித்தபடி பார்த்தால், ஒரு இரும்பைத் தூக்கி நீரில்ப் போட்டால், மூழ்கிவிடும் ஆனால் அதுவே கப்பல் வடிவில்ச் செய்து போட்டால் மிதக்கும். அதே போன்று தான், ஒருவகையான திரவியம் உள்ளதாம், அதை சாதாரணமாக போட்டால், காற்றில் இருந்து விழுந்துவிடும் ஆனால், மிதக்கும் வகையில் வடிவமைத்து விட்டால் காற்றில் மிதக்கத் தொடங்குமாம். ஆனால் அது எப்படி செய்வது என்ற மிகுதிப் பகுதி உங்கள் வீடுகளில்த் தான் ஒழிந்துள்ளது. இப்போதே உங்கள் தேடலை ஆரம்பியுங்கள். வீடு நூலகம் என்று எங்கு ஒரு தமிழ்ப் புத்தகத்தைப் பார்த்தாலும் ஒரு 5 நிமிடம் வாசியுங்கள். கண்டிப்பாக தமிழன் நிலவில் கால் வைக்கும் அந்தக் கனவு நிறைவேற உங்கள் கைகளிலேயே வாய்ப்புண்டு.

09. உங்கள் பொன்னான நேரத்தை என்னுடன் பகிர்ந்துகொண்டமைக்கு மிகவும் நன்றி. மேலும் ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?

38 ம் பக்கத் தொடர்ச்சி

எந்த துறையிலும் நிலைத்து நிற்பதற்கு கடினமான உழைப்பும் திடமான மன உறுதியும் தேவை. இன்று வெற்றிமணி வெள்ளிவிழா கொண்டாடி, கலைஞர்களையும் கொண்டாடி, மக்களையும் மகிழ வைக்கின்றதென்றால்,



இதற்கு திரு. சிவகுமாரனின் உழைப்பும் அவர் எடுத்த முடிவுகளும் தான் காரணம். இப்படி ஒரு அழகான வண்ண பத்திரிகையை எப்படி இலவசமாக உலகமெங்கும் மக்களுக்கு விநியோகம் செய்கிறார் என்பது அவர் மட்டுமே அறிந்த அதிசயம். அருமையான சேவை. மேலும் பொன்விழா, பவழவிழா காண எனது வாழ்த்துக்கள்.

மற்றும் பிரபாலினி நான் உன்னை சின்ன வயதிலிருந்து அறிந்தவன். அப்பா அம்மா வழியில் இசைதுறையில் மட்டுமின்றி பல துறைகளில் விவேகமாக வளர்ந்து வரும் ஒரு சிறந்த மகள், அம்மா, மனைவி மற்றும் ஒரு தொழிலதிபர். கலைத்துறையில் வரும் வெற்றி தோல்வி களை பொருள் படுத்தாமல் தொடர்ந்து இயங்கி வரும் உங்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். வெற்றி மணியுடன் இணைந்து புதிய ஒரு பரிமாணத்தில் மேலும் பெருமை சேர்ப்பாய் என்பதில் சந்தேகமில்லை. இந்த நேர்காணலுக்கு எனது நன்றிகள்.




உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
EurAsian - Tours
Emirates
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
அனைவருக்கும் எங்கள் இனிய
தீபாவளி நல்வாழ்த்துக்கள்
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
துரித பண
மாற்றுச் சேவை!
VALUTRANS
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
info@eurasian-tours.com
இந்தியா– இலங்கை– விசா பெற்றுத்தரப்படும்!


Jasmine Silk House
அனைவருக்கும் எங்கள் இனிய
தீபாவளி நல்வாழ்த்துக்கள்
நேரில் வந்து பாருங்கள்
பட்டுச்சேலை, பஞ்சாபி, குருதார்
மற்றும் சிறுவர்களுக்கான ஆடைகள்
அனைத்தும் வகை வகையாக உண்டு.
HP:0173 1937 325
Tel:02102 844744 'Jasmin Silk House" Fester Str.50- 40882 Ratingen


ASIA BAZAR
Ria
Money Transfer
MoneyGram
துரித பண மாற்றுச் சேவை!
அனைவருக்கும் எங்கள் இனிய
தீபாவளி நல்வாழ்த்துக்கள்
VALUTRANS
ஆசிய,ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன் சனிக்கிழமை தோறும்
இலங்கை,இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவும் பொருட்கள்.இன்னும் பல...
உரிமையாளர்:
பா.கனேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282


Stuttgart நகரில்...
Pirruntha Silks
அனைவருக்கும் எங்கள் இனிய
தீபாவளி நல்வாழ்த்துக்கள்
தரம்மிக்க தங்க நகைகள் நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில் அமைந்த
சேலைகள் மற்றும் இமிற்ரேசன் நகைகள்
அனைத்திற்கும் நீண்டகாலநம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
0170 334 4059
Ludwig str.87a - 70197 Stuttgart Tel: 0711 615 8976


Photography Cinematography Album Making Graphic Designing
Wedding Events Live Birthday Saree Ceremony Graphic Design Printing
AKR Visualizers
PHOTOGRAPHY AND CINEMATOGRAPHY
professional photography cinematography
அனைவருக்கும் எங்கள் இனிய
தீபாவளி நல்வாழ்த்துக்கள்
+49 231 1087 6361
+49 162 803 1647
akrvisualizers
akrvisualizers
akrvisualizer@gmail.com
Rheinische Str. 72
44137 Dortmund


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
அனைவருக்கும் எங்கள் இனிய
தீபாவளி நல்வாழ்த்துக்கள்
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K. France Germany Australia South Africa Canada U.S.A.


Happy Diwali
2019
Double Horse
Nila
AGAM
அகம்
BTM
Aachi
Raheema
KINGFISHER Nestle MDH Shan Lipton


STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
Franziusstrasse.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231/8602696 Fax : 0231/8602698
E-mail : Info@star-impex.de Web : www.star-impex.de
FOR SHOPS ONLY